# வணிக வனிதை

## Vanika Venithai




**2003/04** **இதழ் -07**

# யாழ் இந்து மகளிர் கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# COMMERCE STUDENT'S UNION

# J/ HINDU LADIES COLLEGE

# வணிக வனிதை

# 2003 - 2004

# ஏழாவது மலர்

இதழாசிரியர்
*செல்வி இ. கீர்த்திகா*

**வர்த்தக மாணவர் ஒன்றியம்,**
**யாழ். இந்து மகளிர் கல்லூரி,**
**யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரி வாழ்த்து





திருமிகு மெங்கள் யாழ்நகர்க் கணியாய்த்
திகழ்ந்திடுங் கல்லூரி - எங்கள்
பெறு வரு மிந்துப் பெண்களுக் கொளியாய்ப்
பிறங்கிடுங் கல்லூரி - உயர்
மருவுறு கலைகள் யாவையு மின்பாய்
வழங்கிடுங் கல்லூரி - உனைப்
பெருகிடும் அன்பால் புந்தியில் வைத்துன்
புகழினை வாழ்தோமோ - உனை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கோமோ.

இந்து மதப்புகழ் எங்கும் விளங்கிட
இசைந்திடுங் கல்லூரி - இயல்
சிந்தை வளம் பெற மெய்ப் பொருளறிவைச்
சேர்த்திடுங் கல்லூரி - வளர்
செந்தமிழ் ஆங்கில வடமொழி அறிவைச்
சுரந்திடுங் கல்லூரி - உனை
வந்தனை செய்து பைந்தமிழ் மாலை
வாழ்த்தொடு சூடோமோ - உனை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கோமோ.


மங்கையர் மாண்பை மன்பதை அறிய
முழங்கிடுங் கல்லூரி - ஒளி
பொங்குயர் அறிவுச் சுடரினை யுளத்திற்
பொறித்திடுங் கல்லூரி - இந்து
நங்கையர் வாழ்வின் லட்சிய மனைத்தும்
நல்கிடுங் கல்லூரி - உனை
அங்கையில் மலர்கொண் டன்புடன் பாடி
அனுதினம் ஏந்தோமோ - உனை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கோமோ.

கலைமகள் உலவக் களிநடனம் புரியக்
கண்டிடுங் கல்லூரி - என்றும்
மலைமகள் கொழுநன் மலரடி போற்றி
மாண்புறுங் கல்லூரி - நித்தம்
நிலமகள் நெற்றித் திலகமென் றேத்த
நிலைத்திடுங் கல்லூரி - உனை
தலை முறையாகத் தொழுதுளங் குளிரத்
துதி சொல்லிப் பாடோமோ - உனை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கோமோ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் அதிபர்



திருமதி சரஸ்வதி ஜெயராசா
B. A (Hons), Dip in Edu., S.L.P.S. 1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஆசியுரை

புகழ்பூத்த யாழ். இந்து மகளிர் கல்லூரியின் வணிக மாணவர் மன்றம் வருடாந்தம் வெளியீடு செய்யும் **"வணிக வனிதை"** வர்த்தக சஞ்சிகைக்கு ஆசியுரை வழங்குவதில் பெரு மகிழ்வடைகின்றேன். வர்த்தகத் துறை இன்றைய தகவல் தொழிநுட்ப வளர்ச்சியுடன் நவீனத்துவம் பெற்று வருகிறது. காலத்துக்குக் காலம் ஏற்படும் மாற்றங்களையும், வளர்ச்சிகளையும் இவ்வாறான சஞ்சிகைகளை மாணவர்களுக்குத் தெரியப்படுத்தும் சாதனங்களாகும்.

வணிக மாணவர்களின் பல்வேறு ஆளுமை வளர்ச்சிகளுக்கு வணிக மாணவர் மன்றத்தினரின் செயற்பாடுகள் உந்துசக்தியாக அமையும். அந்த வகையிலேயே அவர்களது எழுத்தாற்றல், தேடல், நூல் நிலையப் பயன்பர்டு போன்ற திறன்களை வளர்ப்பதற்கு இச் சஞ்சிகை வெளியிடும் முயற்சி உதவுகிறது. **"வணிக வனிதை"** கல்லூரியை விட்டு வெளியேறும் மாணவர்களின் நினைவுப் பெட்டகமாகவும், கல்லூரிப் பழைய மாணவிகளைக் கல்லூரியுடன் இணைக்கும் பாலமாகவும் திகழ்கிறது.

யாழ். இந்து மகளிர் கல்லூரியின் வணிக மாணவ மன்றம் வளர்ச்சியடையவும் அவர்களது சஞ்சிகை வருடாந்தம் வெளிவந்து வீறுநடை போடவும் வாழ்த்துகிறேன். இவ் வெளியீட்டில் முன்னின்றுழைத்த அனைவரையும் பாராட்டுகிறேன்.

**ப. விக்னேஸ்வரன்,**
வலயக் கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதிக் கல்விப் பணிப்பாளரின் ஆசியுரை

யா / யாழ். இந்து மகளிர் கல்லூரியின் வணிக மாணவர் மன்றம் **"வணிக வனிதை"** எனும் சஞ்சிகையின் ஏழாவது படைப்பை முன்வைக்கின்றது.

தற்போதைய உலகில் "ஆணுக்குப் பெண் சமம் என்ற கோட்பாடு" பள்ளிகள், பல்கலைக் கழகங்கள், தொழில் மையங்கள், முகாமைத்துவ நிலைகள், போரியல் ஆகியவற்றில் வலுப் பெற்று வருகின்றது.


சுயதொழில் முயல்வு, அபாயத்தை ஏற்கும் பண்பு என்பவை வனிதையரிடம் வளர்க்கப்படுவதற்கு இத்தகைய வெளியீடுகள் உதவுகின்றன.

**"வணிக வனிதை"**யில் வர்த்தகம், கணக்கியல், முகாமைத்துவம் தொடர்பான அறிவாளிகளின் படைப்புகளும் மாணவர்களின் படைப்புகளும் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடக் கூடிய அம்சமாகும்.

**"வணிக வனிதை"** தனது படைப்பைத் தொடர எனது வாழ்த்துக்கள்.


வலயக் கல்வி அலுவலகம்.
யாழ்ப்பாணம்.

***நா. வரதராசா***
(பிரதிக் கல்விப் பணிப்பாளர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# எங்கள் அதிபரின்
# ஆசிச் செய்தி

கல்லூரி மாணவிகள் வணிக மன்றத்தினூடாக வெளியிடும் வணிக வனிதை இதழ் 7வது மலருக்கு ஆசி கூறுவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். மாணவர்களின் கல்வி மேம்பாட்டைக் கருத்திற் கொண்டு ஆக்கங்களை வெளியிடுவதில் இம் மன்றத்தினர் பெரிதும் அக்கறை காட்டி வருகின்றனர்.

கல்லூரிக்கும் சமூகத்துக்கும் பயனுள்ள வகையில் இவர்களின் செயற்பாடு அமைவது பாராட்டுதற்குரியது. இவ் வனிதையானவள் மேன் மேலும் சிறப்புடன் வெளிவர எனது வாழ்த்துக்களை மகிழ்வுடன் தெரிவிக்கிறேன்.

யாழ். இந்து மகளிர் கல்லூரி.

***திருமதி ச. ஜெயராஜா***
அதிபர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதி அதிபரின் ஆசியுரை


வளர்ந்து வருகின்ற உலகிலே வணிகத்துறை இன்று பாரிய வளர்ச்சி கண்டுள்ளது. இவ் வணிகத்துறை வளர்ச்சியில் எமது பாடசாலை வணிக மன்றம் சிறந்த முறையிலே தமது செயற்பாடுகளை முன்னெடுத்துக் கொண்டு செல்கின்றது என்பதற்கு வணிக மன்றத்தின் 7வது வெளியீடான **"வணிக வனிதை'** எடுத்துக் காட்டாகும். மாணவர்களினுள்ளே ஒளிந்திருக்கும் ஆற்றலை வெளிக்கொண்டு வருவதன் மூலம் அவர்களது திறமையை மேன்மேலும் வளர்த்துக் கொள்வதற்கு இவ் வெளியீடு வழிவகுக்கும் என்பதில் ஐயமில்லை.

எதிர் காலத்தில் நம் மாணவ சமுதாயம் கற்றுப் பயன்பெறத்தக்க விதமான ஆக்கங்களுடன் வணிக வனிதை வெளிவருவதையிட்டு உவகை அடைகின்றேன். வணிக மன்றத்தின் விடாமுயற்சியையும் ஊக்கத்தையும் நான் பாராட்டுவதோடு இவ் இதழை சிறப்பாக வெளிக்கொணர உதவி வழங்கி ஒத்துழைப்பும் ஆதரவும் நல்கிய அனைவருக்கும் எனது பாராட்டுக்கள் இவ் வணிக வனிதையும் வணிக மன்றமும் எதிர்காலத்தில் மேலும் சிறப்புற்று வளர என் உளங்கனிந்த நல் ஆசிகள்.

யாழ். இந்து மகளிர் கல்லூரி.

***திருமதி வே. பேரின்பநாதன***

பிரதி அதிபர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உப அதிபரின் ஆசிச் செய்தி

அறிவுச் செல்வத்தை அள்ளிப் பருகுவதிலே அயராது பங்குகொள்ளும் எங்கள் கல்லூரி யின் வர்த்தகத்துறை மாணவிகளின் உள்ளங்களில் உதித்த எண்ணக்கருக்களை எழுத்து வடிவிலே எங்கும் பரப்புகின்ற **"வணிக வனிதை"**யவள் இன்று ஏழாவது மலராக மணம் பரப்புவதையிட்டு மனம் மிக மகிழ்கின்றேன்.


வணிகப் பிரிவுக்கென ஒரு தனி மன்றம் அமைத்து ஆக்கபூர்வமான செயற்பாடுகளில் மாணவிகள் ஈடுபடுவதைப் பாராட்டுகின்றேன். அதுமட்டுமின்றி மாணவிகளின் கூட்டுப் பொறுப்பினாலும் கடின உழைப்பினாலும் தளரா ஆர்வத்தினாலும் தியாக சிந்தையினாலும் சமூக நோக்கினாலும் வருடந்தோறும் **"வணிக வனிதை'** வெளிவருவதில் பெருமையடைகின்றேன்.

வணிகக் கல்வி பயிலும் மாணவர் தொகை அதிகரித்துவரும் இவ்வேளையில் வணிகத் துறையின் முக்கியத்தை உணர்ந்து தமிழில் வெளிவரும் இச் சஞ்சிகை மலருக்குப் பயனிக்கும் என்பது எனது நம்பிக்கை.

வர்த்தக மாணவர் ஒன்றியம் பல்துறைகளிலும் பெருமையீட்டிப் புகழ் பரப்பும் வணிகத்துறை மாணவர்களுக்கு மட்டுமன்றி ஏனைய துறை மாணவர்களுக்கும் பயன்கள் பல நல்கக் கூடியவாறு பல படைப்புக்களையும் தாங்கி வருடந்தோறும் **"வணிக வனிதை'** வலம் வர வேண்டும் என வாயார வாழ்த்துகின்றேன்.

யாழ். இந்து மகளிர் கல்லூரி.

***திருமதி மீ. செல்லையா***
(உப அதிபர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# மன்றப் பொறுப்பாசிரியரின் ஆசியுரை

எமது கல்லூரி வணிக மாணவ மன்றத்தின் செயற்பாடுகளில் ஒன்றாக வருடாந்தம் வெளியிடும் "**வணிக வனிதை**" இதழ் 7 வெளிவருவதையிட்டு மன்றப் பொறுப்பாசிரியர் என்ற வகையில் பெருமகிழ்வடைகின்றேன்.

மாணவர்களின் தலைமைத்துவப் பண்பு கூட்டாக செயற்படும் தன்மை, ஒழுங்கு விதிகளைக் கடைப்பிடித்தல் என்பவற்றை வளர்தெடுப்பதிலும் அவர்களது ஆளுமைப் பண்பை மேம்படுத்துவதிலும் இணைப் பாடவிதான செயற்பாடுகள் பெரும் பங்காற்றி வருகின்றன. இந்த வகையில் மாணவர்களது ஆக்கங்களைத் தாங்கிவரும் வனிதையானவள் வருடாந்தம் தன்னையும் வளர்த்து மாணவர்களது அறிவுத் தேடலையும் வளர்த்து வருகின்றாள்.

வணிக மன்றத்தின் வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் நல்கும் பாடசாலை அதிபர், பிரதி அதிபர், உபஅதிபர், சக ஆசிரியர்களுக்கும், மாணவச் செல்வங்களுக்கும், நூல் வெளிவர உதவிய அன்பு நெஞ்சங்களுக்கும் என் மனமார்ந்த நன்றிகளை இச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்வதுடன், எதிர் காலத்திலும் வனிதை புத்தொழிவீசி உலாவர வேண்டும் எனக் கடவுளைப் பிரார்த்தித்து எனது இதயபூர்வமான ஆசிகளை வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

***திருமதி சி. ஞானசுப்பிரமணியம்***
மன்றப் பொறுப்பாசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழாசிரியரின் உள்ளத்திலிருந்து

எமது கல்லூரியின் வணிக மாணவர் மன்றத்தினால் வெளியிடப்படுகின்ற வணிக வனிதை எனும் சஞ்சிகையின் 7வது மலரினை உங்களின் கரங்களில் தவழ விடுவதில் பெருமகிழ்வடைகின்றேன்.


பல இன்னல்கள் மத்தியிலும் எமது முயற்சியினை இன் முகத்துடன் வரவேற்று ஆதரவளித்து ஊக்கமளித்த எமது கல்லூரி அதிபர், பிரதி அதிபர், மன்றப் பொறுப்பாசிரியர், மற்றும் ஆக்கங்களைத் தந்துதவிய மாணவர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

எமது கல்லூரியின் முன்னைய வணிகத்துறைசார் மாணவர்கள் வெளியிட்ட **"வணிக வனிதை'** வெளியீட்டுப் பணிகளை நாம் முன்னெடுத்துச் செல்கின்ற வேளையில் இப் பணிகளில் இனி வருகின்ற மாணவர்களும் முழு மூச்சோடு ஈடுபட வேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

நன்றி.

யாழ். இந்து மகளிர் கல்லூரி
யாழ்ப்பாணம்.

**இ. கீர்த்திகா**
இதழாசிரியர்
வணிக மாணவர் மன்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவர் உரை

எமது வணிக மாணவர் மன்றத்தால் வெளியிடப்படும் இவ் **"வணிக வனிதை'** வெளியீடு எமது 7வது வெளியீடாகும். மக்களின் வாழ்க்கை முறையுடன் ஒன்றிணைந்து வாழ்க்கைக்கு அவசியமாகவுள்ள வணிகக் கல்வியினை கற்பது அவசியமான தொன்றாகவே கருதப்படுகின்றது.

வைர விழா காணும் எமது கல்லூரி வெற்றியை நோக்கி வீறு நடை போடுகின்றது. இதற்காக வணிகத்துறையின் பங்களிப்பும் உறுதுணையாக இருந்து உள்ளது என்பதில் ஐயமில்லை.


இவ் வெளியீட்டை உருவாக்க ஆக்கமும் ஊக்கமும் வழங்கிய எமது கல்லூரி அதிபர், பிரதி அதிபர், பொறுப்பாசிரியர்களுக்கும் எம் மன்றம் சார்பாக உளமார்ந்த நன்றிகள். மற்றும் இவ் வெளியீட்டிற்கு ஆக்கங்கள் தந்துதவிய மாணவர்களுக்கும் எமது உளங்கனிந்த நன்றிகள்.

எதிர் காலத்திலும் வணிக மாணவர் மன்றம் திறம்படச் செயற்பட வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பாகும்.

நன்றி.

யாழ். இந்து மகளிர் கல்லூரி

**வனஜா – ஸ்ரீ.**
தலைவர்
வணிக மாணவர் மன்றம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# செயலாளர் சிந்தனையிலிருந்து

எமது கல்லூரி வர்த்தக மாணவர் ஒன்றியத்தின் சிறந்த அறிவுப் பொக்கிஷமாகிய வணிக வனிதை என்ற மலர் தனது 7வது வயதில் காலடி எடுத்து வைப்பதையிட்டு என் மனம் பேருவகையடைகின்றது. இம் மலர் வெளியிடுவதற்குரிய காலங் கடந்துவிட்ட நிலையிலும் கூட மிக சொற்ப காலத்தில் திறம்பட இம் மலர் வெளிவருவதை இட்டு என் உள்ளம் உவகையடைகின்றது.

சிறப்பாக இம் மலர் தனது 7வது வயதில் காலடி எடுத்து வைக்க எதுவித தடங்கலும் இன்றி எம்மை வழி நடத்திய இறைவனுக்கு முதற்கண் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொண்டு வனிதையின் சிறப்பை மேலோங்கச் செய்த அதிபர், பிரதி அதிபர், பொறுப்பாசிரியர்கள், முன்னோடி மாணவர்கள் என்சக மாணவர்கள் அனைவருக்கும் இதன் வளர்ச்சிக்கும், மேம்பாட்டுக்கும் ஆக்கமும், ஊக்கமும் அளித்து ஊன்று கோலாகவும், வலுதுணையாகவும் இருந்து தமது பல்தனப் பங்களிப்பை மனமுவந்து அளித்து வந்துள்ளனர். இவர்களிற்கு செயலாளர் என்ற சார்பில் எனது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

மேலும் வனிதையின் 7வது வயதுப் பூர்த்தியை பறை சாற்றிய வர்த்தக பிரமுகர்கள், அபிமானிகள், மற்றும் இம் மலரை சிறப்பாக அச்சேற்றிய ஸ்ரீ சாமி அச்சகத்தார்கள் ஆகியோருக்கும் எனது இதயம் கனிந்த நன்றிகள். வனிதயானவள் தனது 7வது வயதைப் பூர்த்தி செய்வதற்கு உதவிய அனைத்து நெஞ்சங்களும் தொடர்ந்து வனிதையானவள் வானுயர வளர்ந்து செழிக்க முன்னின்று உதவுவார்கள் என்ற நம்பிக்கையுடன் அமைகின்றேன்.

*வாழ்க வணிக வனிதை – அதை*
*வளர்த்திடும் வணிக மன்றமே*
*ஓங்குக உன் புகழ் – ஒளி*
*கொடுத்திடுவாய் வணிகத்துறைக்கு!*



**த. கலைப்பிரியா**
செயலாளர்
வணிக மாணவர் மன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வணிக மன்றம்




இருப்பவர்கள் இடமிருந்து வலம்: திருமதி ஸ்ரீ. அருள்வேல், திருமதி. சி. ஞானசுப்பிரமணியம் (பொறுப்பாசிரியர்). திருமதி. த.ச. யோகீஸ்வரன், திருமதி. ச. ஜெயராசா (அதிபர்). செல்வி. பா. சுபாநிதி (தலைவர்). திருமதி. வெ. பேரின்பநாதன் (பிரதி அதிபர்), திருமதி. மி. செல்லையா (உப அதிபர்), திருமதி. கௌ. சிவகுமார்.

நிற்பவர்கள் இடமிருந்து வலம்: செல்வி. மே. வினோதா, செல்வி. உ. நிருஜா, செல்வி. யோ. யசிந்தா (செயலாளர்) செல்வி. க. நந்தினி, செல்வி. சி. சிந்துஜா, செல்வி. ம.துஷாரா, செல்வி. ம. சுமேதா, செல்வி. சி. தக்ஷாயினி, செல்வி. பு. சுபாகினி, செல்வி. த. ரசிக்கா, செல்வி. க. வரநிதி (பொருளாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வணிக மாணவர் மன்றம்
# 2004 நிர்வாகச் செயலணி

| | | |
|---|---|---|
| காப்பாளர் | : | **திருமதி ச. ஜெயராஜா** (அதிபர்) |
| துணைக் காப்பாளர் | : | **திருமதி வே. பேரின்பநாதன்** (பிரதி அதிபர்) |
| பொறுப்பாசிரியர் | : | **திருமதி சி. ஞானசுப்பிரமணியம்** |
| | | |
| தலைவர் | : | **செல்வி ஸ்ரீ. வனஜா** |
| உப தலைவர் | : | **செல்வி வ. ரேகா** |
| செயலாளர் | : | **செல்வி த. கலைப்பிரியா** |
| துணைச் செயலாளர் | : | **செல்வி பா. தாட்சாயினி** |
| பொருளாளர் | : | **செல்வி சு. சுமணா** |
| உப பொருளாளர் | : | **செல்வி இ. கஜீபனா** |
| இதழாசிரியர் | : | **செல்வி இ. கீர்த்திகா** |
| | | |
| ஆசிரிய ஆலோசகர்கள் | : | **திருமதி த. ச. யோகீஸ்வரன்** |
| | : | **திருமதி ஸ்ரீ. அருள்வேல்** |
| | : | **திருமதி கௌ. சிவகுமார்** |
| | : | **திருமதி ம. சிவானந்தநாதன்** |
| | | |
| மலர்க் குழு | : | **செல்வி ஸ்ரீ. ஜனனி** |
| | : | **செல்வி க. துவாரகா** |
| | : | **செல்வி க. ரோகிணிதேவி** |
| | : | **செல்வி க. மேகலா** |
| | : | **செல்வி ஸ்ரீ. ரதிகா** |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2003ஆம் ஆண்டு பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதி பெற்றோர் சராசரி Z புள்ளிகள் (1.3ற்கு மேல்)

| | | |
|---|---|---|
| 01) நர்ஷிலா ரட்ணம் | 3A | 2.0926 |
| 02) வரநிதி கனகசபாபதி | 3A | 1.9292 |
| 03) தாட்சாயிணி சின்னத்தம்பி | 3A | 1.9232 |
| 04) நளினி சிவலிங்கம் | 2A B | 1.8034 |
| 05) வத்சலா தங்கவேலாயுதம் | 2A B | 1.7515 |
| 06) ஹேமிலா ரட்ணசிங்கம் | A 2B | 1.5774 |
| 07) வசந்தகுமாரி செல்லத்துரை | A 2B | 1.4635 |
| 08) ஜேபிரியா ஸ்ரீஸ்கந்தராஜா | 3 B | 1.3830 |
| 09) நிஷாந்தி இராஜரட்ணம் | A 2B | 1.3650 |
| 10) பாலினி பாலசுப்பிரமணியம் | 2 BC | 1.3202 |
| 11) சுபாநிதி பாலசிங்கம் | A2 B | 1.3039 |


## 2003ஆம் ஆண்டு பல்கலைக்கழக அனுமதி பெற்றோர்

யாமளை கணேசமூர்த்தி

சுதாநிதி சின்னத்துரை

ராஸ்மி லோகேஸ்வரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நிற்பவர்கள் இடமிருந்து வலம்:-

நூ. கலைப்பிரியா, (செயலாளர்) இ. கஜீபனா (உப பொருளாளர்), ஸ்ரீ. ஜனனி (மலர்க் குழு), வ. ரேகா (உப தலைவர்), சு. சுமணா (பொருளாளர்), இ. கீர்த்திகா (பத்திராதிபதி), க. துவாரகா (மலர்க் குழு), க. ரோகிணிதேவி (மலர்க் குழு), க. மேகலா (மலர்க் குழு), பா. தாட்சாயணி (உப செயலாளர்) ஸ்ரீ. ரதிகா (மலர்க் குழு)

இருப்பவர்கள் இடமிருந்து வலம்:-

திருமதி மீ. செல்லையா, (உப அதிபர்), திருமதி ச. ஜெயராஜா (அதிபர்), ஸ்ரீ. வனஜா(தலைவர்), திருமதி வே. யோன்பநாதன் (பிரதி அதிபர்), திருமதி சி. ஞானசுப்பிரமணியம் (பொறுப்பாசிரியர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வனிதையின் வடிவங்கள்


01. வங்கியில் புதிய அணுகு முறைகள். 01

02. முகாமைத்துவமும் தொடர்பாடலும். 06

03. பங்குச் சந்தை. 08

04. உலகமயமாதலும் இலங்கையும். 12

05. கைமாற்றத்தக்க சாதனங்களில் ஒன்றான வணிகத்தாள். 17

06. இலங்கையின் அண்மைக்கால புள்ளி விபரங்கள். 19

07. கூட்டுறவுக் காப்புறுதிக் கம்பனி. 22

08. இலங்கையில் கொடுகடன் அட்டை. 28

09. உற்பத்தி. 31

10. திறைசேரி உண்டியல். 34

11. புதிய அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட
வரவு செலவுத் திட்ட அறிக்கை தொடர்பான தகவல்கள். 37

12. வறுமை 40

13. கட்டுப்பாட்டுக் கணக்கு. 43

14. கணக்கீட்டு அலகொன்றில் செல்வாக்குச் செலுத்தும் சூழற் காரணிகள். 46

15. தனி வியாபாரத்தை விட பங்குடமையில்
மேலதிகமாகத் தயாரிக்கப்படும் கணக்குகள். 50

16. வர்த்தக வங்கிகளின் நடைமுறை வைப்பு பற்றிய ஓர் நோக்கு. 55

17. மத்திய வங்கியின் நவீனமயப்படுத்தல். 59

18. நவீன வணிகத் தகவல்கள். 61

19. A - 9 பாதை திறப்பும் அதன் விளைவுகளும். 64

20. சமூக விஞ்ஞானம். 68

21. உலகின் ஓர் பார்வையில்...
இணையத்தினூடான இலத்திரனியல் வர்த்தகம். 73

22. செலவு தொகை இலாபப் பகுப்பாய்வு /
இலாப நட்டமற்ற புள்ளிப் பகுப்பாய்வு 75



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வங்கியில் புதிய அணுகு முறைகள்
# NEW APPROACHES IN BANKING
# இலத்திரனியற் பணம் ELECTRONIC CASH

**பணம் :**

மனிதன் இல்லாத பொருள் ஒன்றைத் தேடி அலைந்த காலத்திலிருந்தே அதை பெற்றுக் கொள்வதற்குரிய பல்வேறு வழிமுறைகள் பற்றிச் சிந்தித்துள்ளான். ஆரம்பத்தில் தன்னிடமுள்ள பொருட்களுடன் பண்டமாற்றில் அவன் ஈடுபட்டான். பழங்களுக்காக அரிசி பண்டமாற்று செய்யப்பட்டமை போல, பின்னர் தங்கம் வெள்ளி போன்ற உலோகங்களுக்காக பொருட்கள் பரிமாற்றப்பட்டன. அதனையடுத்து அரசர்கள் தங்கம், வெள்ளி போன்றவற்றிலான நாணயங்களை பண அலகுகளாக பயன் படுத்தினர்.

அதன் பின்னர் காகித நாணயம் அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் பின் ஏற்பட்ட தொழில்நுட்ப வளர்ச்சியில் கணனிப் பிரயோகம் இலத்திரனியல் பணத்தை (E - Money) உருவாக்க வழிவகுத்தது. தகவல் தொழில் நுட்பத்தில் ஏற்பட்ட வளர்ச்சி, கம்பியூட்டர் மயமாக்கம், தொலைத்தொடர்பு, பொழுது போக்கு போன்ற துறைகளில் பல புதிய திருப்பங்களுக்கு வழிகோலியுள்ளது. நாம் தற்சமயம் தகவல் சமூகம் (Information Society) ஒன்றில் வாழ்ந்து கொண்டிருக்கின் றோம். நாம் இன்று வியாபாரம் செய்யவல்ல மிகப் பெரிய உற்பத்திப் பொருள் தகவலே இதனடிப் படையில் உருவானதே இலத்திரனியல் பண மாகும். பணத்தின் கடமைகளை செய்வதற்கு மக்களால் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் எவையாயினும் பணம் எனக் கொள்ளப்படும் பணம் தன்னுடைய கடமைகளை செய்வதற்கு பௌதீக நிலையில் இருக்க வேண்டியதில்லை. மறுவார்த்தையில் கூறின் வெளிக்கிடைப் (Enplicit) பணமாக இருக்க வேண்டியதில்லை. உதாரணம் தாள்கள், நாணயங்கள் பணம் உட்கிடைப்பணமாக (Implicit) இருக்கின்ற போதும் பொதுவாக எல்லோரும் ஏற்றுக் கொள்ளப்படின் தனது கடமைகளை செய்யக் கூடியதாக இருக்கும். உட்கிடைப் பண வளர்ச் சியை இரு கட்டங்களில் மதிப்பீடு செய்யலாம்.

**முதலாவது கட்டம்:-** மக்களின் கேள்வி வைப் புக்கள், சேமிப்பு, கால வைப்புக்கள் வங்கிப் பணமாக (Bank Money) ஏற்றுக் கொள்ளப் படல் கேள்வி வைப்புக்களுக்கு எதிராக வரையப்படும் காசோலைகளும், சேமிப்புக்கால வைப்புகளில் உள்ள பணத்தை மாற்றுத் தேவைகளுக்கு பயன்படுத்தும் பொழுது அவை பௌதீகப் பணமாக கொள்ளப் படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இரண்டாவது கட்டம்:-** இரண்டாவது கட்டத்தில் இலத்திரனியில் பணம் முக்கிய இடத்தை வகிக்கின்றது. இது படிப்படியான வளர்ச்சிப் படிகளை கொண்டுள்ளது.

பிளாஸ்ரிக் அட்டைகள், எண்குறிப் பணம், இலத்திரனியல் பணப்பை என்ற படி முறையில் வளர்ந்து வருகின்றன.

**பிளாஸ்டிக் அட்டைகள்** (Plastic Cards)

வங்கிகளினதும் வாடிக்கையாளர்களினதும் கொடுக்கல் வாங்கல்களை இலகுவாக மேற்கொள்வதற்கு காலத்துக்கு காலம் புதிய ரக பிளாஸ்ரிக் அட்டைகள் நடைமுறைக்கு வருகின்றன.

**காசு / கடன் அட்டைகள்** (Cash /Credit Cards)

இலங்கையில் காணப்படும் எல்லா வணிக வங்கிகளாலும் இப்போது கடன் அட்டைகள் வழங்கப்படுகின்றன. அட்டைகளின் ஒரு புறத்தில் வாடிக்கையாளர் பெயர் கணக்கு இலக்கம் என்பனவும் பின்புறத்தில் ஒரு காந்த இணையும் காணப்படும். கடன் அட்டைகளை பன்படுத்தி குறித்துக் காட்டப்பட்டுள்ள வர்த்தகர்களிடம் பொருட்கள் சேவைகளை கடன் முறையில் பெற்றுக் கொள்ளலாம். உதாரணமாக விசா அட்டை, பாகலேயிஸ் அட்டை, சில வங்கிகள் வாடிக்கையாளரின் புகைப் படங்களையும் பொறிக்கும் முறையை ஆரம்பித்திருக்கின்றன. வங்கியாளர்களும் இலத்திரனியல் வல்லுனர்களும் இவற்றை ஊமை அட்டைகள் (Dump Cards) என அழைப்பதற்கு காரணம் அவை பாவனையாளர்கள் பற்றிய தகவல்களை குறைந்த அளவில் கொண்டிருப்பதாகும். அட்டைகளை சிறந்த முறையில் செயற்படுத்துவதற்கு வங்கிகளில் 250க்கு மேல் தன்னியக்க இயந்திரங்கள் காணப்படுகின்றன. சில வங்கிகள் தமது வாடிக்கையாளர்களில் அலுவலகங்களிலும் காசு கொடுக்கல் வாங்கல்களை ஒழுங்குபடுத்த காசு நிலைகள் (Cash Points) உருவாக்கி இயந்திர வசதியுடன் சேவைகளை தங்கள் வங்கிகளில் கணக்கு வைத்துள்ள உத்தியோகத்தர்களுக்கு வழங்கி வருகின்றன. தன்னியக்க ரெலர் இயந்திரங்கள் பணத்தை திரும்பப்பெறல், பணம் / காசோலை வைப்பிலிடல் மீதியினை சரிபார்த்தல் தகவல்களை மாற்றுதல் _ கொடுப்பனவுகளை இடைநிறுத்தல் காசோலை புத்தகத்தை பெறுதல் போன்ற சேவைகளை வழங்குகின்றன.

**கட்டுறுதி அட்டைகள்** (Smart Cards)

கட்டுறுதி அட்டைகள் நுண் செயற்படுத்தி (Micro Processor Chips) சேர்க்கப்பட்டுள்ளதால் அவற்றை இலத்திரனியல் முகப்பு படிப்பான ஊடாக (Electronic Terminal Readers) பயன்படுத்த முடியும். இடை தரவுகளை சேகரித்து வைக்கும் தன்மை இதனிடம் காணப் படுகின்றது.

காப்புறுதி அட்டைகள் அடிப்படையில் வாடிக்கையாளர் பற்றிய தகவல்களைச் சேகரித்துள்ள ஒரு கம்பியூட்டர் திட்டம் ஆனபடியால் அவை கட்டுறுதியாயுள்ளன. இந்த அட்டைகளை பயன்படுத்தும் முறை மிக எளிமையானதொன்று நாம் நூறு ரூபா பெறுமதியான இலத்திரனியல் பணத்தை வாங்குகின்றோம். இத்தொகை ஒரு பிளாஸ்டிக் அட்டையில் பதியப்பட்டு நாம் பொருள் கொள்வனவில் ஈடுபடும் ஒவ்வொரு தடவையும் இலத்திரனியல் ரீதியாக அழிக்கப்படுகின்றது. வேறு வார்த்தையில் கூறின் அவ்வட்டைக்கு ஞாபகத்திறன் உண்டு.

**எண்குறிப் பணம்** (Digital Cash)

எண்குறிப்பணம் என்பது அடிப்படையில் ஒரு பரிபாஷைத் (Crytographic) தொழில் நுட்பம் அடையாளச் சீட்டுகள், தகவல்கள், தகவற் துணுக்குகள், என்பன இம் முறையில் வழங்கப்படுகின்றன. இவை மோசடிக்குட் படுத்தப்பட முடியாதவை. உறுதிப்படுத்தக் கூடியவை. (குறைந்த பட்சம் விநியோகிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுவனங்களாவது) மற்றவர்களால் அறியப்பட முடியாதவை.

இன்று செல்வாக்கு மிக்கவர்கள் ஏனைய அனைத்துப் பணத்திற்கு பதிலாக இவ் வகைப் பணங்களையே பயன்படுத்த விரும்புகின்றனர். குறிப்பாக வங்கியாளர்கள் கோடிக் கணக்கான காசோலைகளை தரம்பிரிப் பதற்கு பயன்படுத்தப்படும் செலவு கூடிய, அதிக நேரம் எடுக்கும் முறைமைகளை நீக்கிவிட விளைகின்றனர்.

எமது வீட்டில் உள்ள பணம் எமது பாதுகாப்பு வைப்பு பொட்டகங்களில் உள்ள பணம் அனைத்தையும் வங்கி ஒன்றிற்கு எடுத்துச் செல்லுமாறு ஜனவரி 1ஆம் திகதியன்று சட்டரீதியாக வேண்டப்படுவதாக கற்பனை செய்வோம். எமது பணத்தின் மொத்தத் தொகையை வங்கி கணக்கிடும். உதாரணமாக அத்தொகை ரூ 20,000 மீதியுடைய பிளாஸ்ரிக் பண அட்டை (Plastic Money Cards) ஒன்றை வங்கி எமக்கு விநியோகிக்கும். பல்வேறு வர்த்தக வங்கிகள் சில்லறைக் கடைகள் தரகுக் கணக்குகள் போன்றவற்றில் உள்ள எமது கணக்கிலக்கம் காசுப்பதிவுகள் ஆகியவற்றை இவ் வட்டையில் பதிவு செய்ய முடியும். நீங்கள் எனக்கு ரூ 1000 தர விரும்பினால் காசு இயந்திரம் ஒன்றுக்குச் சென்று பட்டினை அழுத்துங்கள். அப்போது ரூ 1000 உங்கள் கணக்கிலிருந்து எனது கணக்கிற்கு மாற்றப்படும். இக் கொடுக்கல் வாங்கல்களுக்காக ஒரு காகித பற்றுச் சீட்டை நீங்கள் பெற்றுக் கொள்வீர்கள். இந்தக் காசு இயந்திரங்கள் காசுப்பதிவுகளை உடனுக்குடன் மேற் கொண்டு சரிபார்ப்பதுடன் அனைத்து வியாபார நிலையங்களிலும் வீடுகளிலும் கூட இவ் வியந்திரங்கள் ஸ்தாபிக்கப்பட முடியும். காசுப் பத்திரங்களை காசு இயந்திரங்களுக்குள் செலுத்துவதன் மூலம் நுகர் பொருட்களை எம்மால் வாங்கமுடியும். தொலைத்தொடர்வு கொள்வனவு (Teleshopping) முறையில் விற்பனை நிலையங்களுடன் எமது வீட்டில் இருக்கும் கணணியூடாக இதனை பயன்படுத்தி Public-key encryption என்ற ஒரு தொழில்நுட்ப அடிப்படையில் சினேகிதர்களோ எதிரிகளோ இந்த முறையில் கீழ் பணத்தை பிழையான முறையில் களவாடுதலைத் தடுக்கின்றது.

## இலத்திரனியல் காசு உறை (Electronic Purses)

ஒரு ஏ.ரி.எம் (அட்டை போன்ற பிளாஸ்ரிக்கிலான அட்டை இது ஆகும். இப் பத்திரத்தில் உள்ள சக்தி வாய்ந்த நுண்துண்ட மொன்று பத்திரத்தின் உரிமையாளர் ஒரு எ.ரி.எம். மீது பயன்படுத்துவதன் மூலம் பத்திரத்தில் ஒரு பெறுமானத்தை பதிவு செய் வதற்கு உதவுகின்றது. நிர்ணயிக்கப்பட்ட வர்த்தகர்களிடமிருந்து கொள்வனவுகளை மேற்கொள்ளும் போது அவர் இப் பத்திரத்தைப் பாவித்திருப்பின் எ.ரி.எம். மீது பயன்படுத்துவதன் மூலம் அதனை மீள்நிரப்ப முடியும். எனவே ஒரு ஏ.ரி.எம். இலிருந்து பணத்தை மீளப் பெறுவதற்கான ஒரு மாற்றூடாக இது அமை கிறது. இப் பத்திரத்தைப் பயன்படுத்துபவர் அதைப் பயன்படுத்த முன்னர் அப்பெறுமதியை அறிந்து கொள்ள வேண்டிவரும். அதை வாசித்து அறிந்து கொள்வதற்கு அவர் சொந்த அடையாள இலக்கத்தை (Pin) பயன்படுத்த வேண்டும். எனவே உரித்தற்ற நபரின் கையில் இருக்கின்ற போதும் இலத்திரனியல் காசு உறையினை பாதுகாப்பு உத்தரவாதப் படுத்தப்படுகிறது.

## கற் சுப்பர் அட்டை (Cat Super Card)

வங்கித்துறைகளில் ஏற்படுகின்ற முன்னேற்றகர மாற்றங்களை உடனுக்குடன் அறிமுகப்படுத்துவதில் என்றுமே முன்னனியில் திகழும் இலங்கை கொமர்ஷல் வங்கி Debit மற்றும் ஏ. ரி. எம். என இரட்டை நோக்கங்களுக்கு பயன்படுத்தக் கூடியதான (Cat Super) கற் சுப்பர் எனப் பெயரிடப் பட்டுள்ள அட்டையை (Card) வாடிக்கையாளர் களுக்கு புதிதாக அறிமுகம் செய்துள்ளது. மாஸ்டர் கார்ட் இன்டர் நஷனல் நிறுவனத் துடன் கொமர்ஷல் வங்கி இணைந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுள்ளதன் காரணமாகவே "கற் சுப்பர்" நடைமுறைச் சாத்தியமாகியுள்ளது. ஏற்கனவே பாவனையில் இந்து வருவதாக Cat ஏ.ரி.எம். (தானியக்க டொலர் மெஷின்) அட்டையுடன் Debit கடன் அட்டையில் ஆற்றக் கூடிய கருமங்களையும் ஒருங்கே இணைந்துள்ளதன் மூலம் "கற் சுப்பர்" நடைமுறைக்கு வந்துள்ளது. இதன் மூலம் உலகம் பூராகவும் உள்ள 465.000க்கு மேற்பட்ட ஏ.ரி.எம். இயந்திரங்களில் நிதி நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். கொமர்ஷல் வங்கியானது மாஸ்டர் கார்ட் இன்டர் நஷனல் நிறுவனத்துடன் இணைந்து கொண்டுள்ளமையால் சிரஸ் "Cirrus" எனப்படும் வலைப்பின்னல் ("Net Work") அமைப்பினூடாகவே சாத்தியமாகியுள்ளது.

"கற் சுப்பர்" அட்டையயைக் கொண்டிருப்பவர்கள் Maestr எனப்படும். வர்த்தக வலைப் பின்னலில் இணைந்துள்ளதால் உலகிலுள்ள இத்தகைய 4 மில்லியனுக்கு மேற்பட்ட சர்வதேச வர்த்தக ஸ்தாபனங்களுடன் கொள்வனவு நடவடிக்கைகளை மேற்கொள்ள வகை செய்யப்பட்டுள்ளது. "கற் சுப்பர்" அட்டையானது விசேடமாக வெளிநாட்டுக்கு பயணிப்பவர்களுக்கு பயனுடையதாகவிருக்கும் வெளி நாடொன்றில் பணத்தை பெற்றுக்கொள்ள வேண்டிய தேவை ஏற்படும் இடத்தில் பயணிகள் காசோலைகளை தவிர்த்துவிட்டு "கற் சுப்பர்" அட்டையை பயன்படுத்தி பணத்தை பெற்றுக் கொள்ள முடியும். அதே வேளை பணத்தைக் காவிச் செல்லுதலை தவிர்க்கும் வகையில் Debit Card கடன் அட்டையாகவும் இவை பயன்படுத்திக்கொள்ள முடியும்.

தற்போதைக்கு "கற் சுப்பர்" அட்டையானது கொமஷல் வங்கியில் நடைமுறைக் கணக்கு சேமிப்புக் கணக்கு, நிதிச் சந்தை (Money Market) கணக்கு வைத்திருப்பவர்களுக்கே கிடைக்கும். எனினும் குறித்த காலத்துக்குள்ளாக புதிய கணணி நிகழ்ச்சித்திட்டம் உருவாக்கப்பட்டு நடைமுறைக்கு வந்த பின்னர் வங்கியில் NRFC வதியாதோர் கணக்கு வைத்திருப்பவர்களுக்கு விஸ்தரிக்கப்படும். "கற் சுப்பர்" அட்டையைப் பயன்படுத்தி இலங்கையிலுள்ள 150 ஏ.ரி.எம். இயந்திரங்களில் நிதி நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் இதில் கொமர்ஷல் வங்கியில் 65 ஏ.ரி.எம். இயந்திரங்களுடன் சம்பத் வங்கி கொங்கொங் வங்கி, யூனியன் வங்கி, A.N.Z. கிறன்னலஸ் வங்கி ஆகியவற்றின். ஏ.ரி.எம். இயந்திரங்களும் அடங்கும். அத்துடன் உள்நாட்டில் 500 வரையான வர்த்தக ஸ்தாபனங்களிலும் Point of Sale Payment System முறையில் கொள்வனவு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.

இலத்திரனியல் பண அமைப்பில் பல்வேறு வகையான வடிவங்கள் காணப்பட்டு வருகின்றன. பல நிறுவனங்கள் உலக ரீதியான முக்கியத்துவம் பெற்று வருவதனை காண முடிகின்றது. மோன்டெக்ஸ் (Mondex) எனப்படும் புதிய இலத்திரனியல் பணம் (E-Cash) Timothy. L. Jones David Chavm என்பவர்களின் திறமையைப் பயன்படுத்தி பணக் கொடுக்கல் வாங்கல் பாதுகாப்புக்களை வலுப்படுத்தியுள்ளார். மேலதிகமாக இந்த முறையில் பங்கு கொள்கின்ற குறிப்பிடத்தக்கவர்கள் Cyber Cash, Microsoft, Xeron, Visa, Citi Corp முதலியன குறிப்பாக CITI Corp இப்பொழுது இலத்திரனியல் நாணய அமைப்பு (Electronic Monetary Systeml ஒன்றினை உருவாக்கி அதனூடாக எல்லா வங்கிகளாலும் பயன்படுத்தப்பட்டு வருகின்ற இந்த பண முறைமையினை ஒன்றி வைக்க முற்படுகின்றனர். Micro Sofi நிறுவனம் ஏனைய நிறுவனத்துடன் இணைந்து கடன் அட்டை கொடுக்கல் வாங்கலை Internent ஊடாக செய்வதற்கு முயற்சிகளை மேற்கொள்கின்றன. இலத்திரனியல் நிதி நகர்வு என்பது வங்கியில் ஒரு கணக்கிலிருந்து இன்னோர் கணக்கிற்கு எந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதமான அங்கீகரிக்கப்பட்ட அதிகாரமளிக்கப் பட்ட பத்திரங்களைப் பயன் படுத்தாமல் பணத்தை, மாற்றுவதற்கு வசதி செய்து கொடுக்கின்றது. வேகமாகவும் சரியாகவும் வரவு செலவு கணக்குகளை பதிய உதவுகின்றது. மேலும் அதிகளவு பாதுகாப்பும் அத்துடன் கணக்காய்வு நுட்பங்களும் உள்ளடக்கின்றன. தரவுகள் யாவும் கணனி சாதனங்களில் காணப் படுவதால் அசசுப்பிரதிகளை பெற வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. இலத்திரனியல் நிதி நுகர்வு முறையில் செயற்பாடுகள், தொடருளி, தொடரிலி நிதிநுகர்வு என்ற முறையில் பிரித்து ஆராயலாம்.

**இந்துஜா – ஜெயரட்ணம்**
A/L 2003 வர்த்தகம்.

## பொன் மொழிகள்

| | | | |
|---|---|---|---|
| வருவதும் போவதும் இரண்டு | – | இன்பம், | துன்பன் |
| வந்தால் போகாதது இரண்டு | – | புகழ், | பழி |
| போனால் வராதது இரண்டு | – | மானம், | உயிர் |
| தானாக வருவது இரண்டு | – | இளமை, | மூப்பு |
| நம்முடன் வருவது இரண்டு | – | பாவம், | புண்ணியம் |
| அடக்க முடியாத இரண்டு | – | ஆசை, | துக்கம் |
| தவிர்க்க முடியாத இரண்டு | – | பசி, | தாகம் |
| நம்மால் பிரிக்கமுடியாத இரண்டு | – | பந்தம், | பாசம் |
| அழிவைத் தருவது இரண்டு | – | பொறாமை, | கோபம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகாமைத்துவமும் தொடர்பாட்லும்

## முகாமைத்துவம்

நிறுவனத்தின் குறிக்கோள்களை வினைத்திறனுடனும் செயற் திறனுடனும் செயற்படுத்துவதற்கு பௌதீக நிதி, மனித, தகவல் போன்ற வளங்களை திட்டமிடுதல், ஒழுங்கமைத்தல், நெறிப்படுத்தல், கட்டுப் படுத்தல் போன்ற செயற்பாடுகளை உள்ளடக் கியது முகாமைத்துவம் ஆகும்.

## முகாமைச் செயற்பாடுகள்

**1) திட்டமிடுதல்:-**

அமைப்பு ஒன்றின் நோக்கத்தை நிச்ச யித்தலும் அதை அடைந்து கொள்வதற்கான செயற்பாடுகளை நிச்சயித்தலும் திட்டமிடுத லாகும்.

**2) ஒழுங்கமைத்தல்:-**

நிறுவனம் அதனது நோக்கத்தை அடைந்து கொள்வதற்காக ஆட்களுக்கும் வளங்களுக்கும் இடையே ஒழுங்கான தொடர்பை ஏற்படுத்தல் ஒழுங்கமைத்தலாகும்.

**3) நெறிப்படுத்தல்:-**

தலைமைத்துவம், தொடர்பாடல், ஊக் கப்படுத்தல் என்பவற்றை உள்ளடக்கியது நெறிப்படுத்தலாகும்.

**கட்டுப்படுத்தல்:-**

நிறுவனம் அதன் கருமங்கள் திட்ட மிட்ட முறையில் நடைபெறுகின்றனவா என் பதை உறுதி செய்யும் முகாமைத்துவ செயற் பாடு கடடுப்படுத்தலாகும்.

**தொடர்பாடல்:-**

செய்தியை அனுப்புதல், பெறுதல், புரிந்து கொள்ளுதல் தொடர்பாடலாகும். அல் லது கருத்துப் பரிமாற்றம் தொடர்பாடலாகும்.

**தொடர்பாடலின் நோக்கம்:-**

1) தகவலை வழங்குதல்
2) எதையாவது விளக்குவதற்கு
3) உரையாடுதல்
4) பொழுது போக்கு
5) எதையாவது புரிய வைத்தல்
6) உணர்வை விபரிக்க

**முகாமைச் செயற்பாடுகளில் தொடர் பாடலின் பங்கு**

1) முகாமைச் செயற்பாடுகளில் நெறிப்படுத் தலின் பகுதியாக தொடர்பாடல் அமைந் துள்ளது
2) திட்டமிடுதல், ஒழுங்கமைத்தல், கட்டுப்படுத் தல் போன்ற ஏனைய முகாமைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருமங்களின் நோக்கத்தை தொடர்பாடலின்றி அடைய முடியாது.

## முகாமையாளரும் தொடர்பாடலும்

இங்கிலாந்தில் கம்பனிகளில் பணி புரியும் 160 முகாமையாளர்களை வைத்து ஆய்வு செய்யப்பட்டது. இதன்படி முகாமை யாளர்கள் கடமை நேரத்தில் சுமார் 78% வரை தொடர்பாடலில் செலவிடுகின்றனர். இதில் 50%ஐ வாய்மொழி மூலமான தொடர்பாடலுக் கும் மீதி 28%ஐ வாசித்தல், எழுதுதல் போன்றவற்றிலும் செலவிட்டனர்.

இந்த வகையில் தொடர்பாடல் மிகவும் அவசியமாகும். தொடர்பாடல் இல்லாமல் முகாமை செய்ய முடியாது.

## முகாமைத்துவத்தில் தொடர்பாடலின் தேவைகள்

1) நிறுவனத்தின் குறிக்கோளையும் நோக்கங் களையும் உருவாக்க

2) திட்டங்களைத் தயாரிக்க

3) மானிட வளங்களையும் பௌதீக வளங் களையும் ஒருங்கிணைப்பதற்கு

4) ஊழியர்களை வேலைக்கு அமர்த்துவதற்கும் செயற்படுத்துவதற்கும்

5) ஊழியர்களை ஊக்குவிப்பதற்கும் தலைமை வகிப்பதற்கும்

6) நிறுவனத்தின் முழுமையான கட்டுப்பாட்டு கருமங்களுக்கு.

## முகாமைத்துவத்தில் தொடர்பாடலில் தடையை ஏற்படுத்தக் கூடிய காரணிகள்:

1) சத்தம் அல்லது இரைச்சல்

2) பௌதீக நிலமைகள்

3) தொடர்பாடல் வலையமைப்பை ஏற்படுத்து வதிலுள்ள தடைகள்

4) ஒருவர் ஒரு அர்த்தத்தில் கூறுவதை கேட்பவர் வேறு அர்த்தத்தில் புரிந்து கொள்ளுதல்.

5) செய்திக்கும் அங்க அசைவுக்குமான வேறுபாடு

## தொடர்பாடல் தடைகளை நீக்கக் கூடிய வழிகள்

1) சூழலில் ஏற்படும் சத்தத்தை தடுக்க நடவடிக்கை எடுத்தல்.

2) பௌதீக ரீதியான தடைகளை நீக்குதல்

3) சிறந்த தொடர்பாடல் வலையமைப்பை ஏற்படுத்தல்.

4) வேறுபட்ட அர்த்தத்தை கொடுக்கும் சொற்களை உபயோகிக்காது விடுதல்

5) செய்திக்கும் அங்க அசைவுக்குமான முரண்பாட்டை நீக்குதல்.

**தக்சாயினி சீ.**
2003 A/L Com "A"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்குச் சந்தை (STOCK MARKET)

இன்றைய 21ஆம் நூற்றாண்டு கால கட்டத்தில் வணிகத்தின் வளர்ச்சி மிக வேகமாக சென்று கொண்டு உள்ளது. மனித வாழ்க் கையுடன் பின்னிப் பிணைந்து இருக்கும் இவ் வணிகத்தினை இன்று அறியாதவர்கள் இல்லை என்றே கூறலாம். இதற்கு எடுத்துக் காட்டாக வணிகத்துறை கல்வி பெறுவோர் வீதம் உயர்வடைந்து செல்கிறது. வளங்கள் ஒதுக்கீடும், வருமானம் ஈட்டலும் வணிகத்துறை யிலேயே உள்ளது. ஒருவன் தனது வாழ்க் கையை கொண்டு செல்ல பணம் எவ்வளவு முக்கியமானதோ அவ்வாறு ஒரு நாடு தனது பொருளாதாரத்தை விருத்தி செய்ய வணிகம் முக்கியம் பெறுகின்றது.

ஒருவன் தனது நுட்பத்தினைப் பயன்படுத்தி பணத்தை உழைக்கப் பார்ப்பான் இதே போல் நிதியினை உடையவன் மேலும் அதனை அதிகரிக்க முற்படுவான். இவ் அடிப்படையில் நிதி தேவைப்படுபவரையும் நிதியினை வைத்து இருப்பவரையும் தொடர்பு உறுத்தும் ஒரு அம்சமாக இவ் விடயம் அமைகின்றது. ஒரு நிறுவனம் இயங்குவதற்கு நிதி தேவைப்படுகின்றது. அதனை உடனடியாக பெற்றுக் கொள்வதும் அதனை பயன்படுத்தலும் என்ற அடிப்படையில் உருவானதே நிதிச் சந்தை அமைப்பு இதில் பிரதானமாக இடம் பெறுவது

### 1) பணச் சந்தை (Money Market)

குறுங்கால தேவையின் பொருட்டு நிதி பெற்றுக் கொள்வதற்கு ஏற்ற செயற்பாடுகளை கொண்டது இது ஆகும். ஒரு வருடத்திற்கோ அல்லது அதற்கு உட்பட்ட கால நிதி, ஆவணங்களை கைமாற்றம் செய்து கொள்ளல் முக்கியம் பெறும். இங்கு திறைசேரி, உண்டியல், வர்த்தகத்தாள், வைப்புச் சான்றிதழ், மத்திய வங்கியின் குறுங்காலப் பிணைப் பத்திரம், வியாபார உண்டியல், வரி ஒதுக்குச் சான்றிதழ் என்பன அடங்கும்.

பணச் சந்தையின் பிரதான நிறுவனங்க ளாவன, மத்திவங்கி, வர்த்தக வங்கிகள், பிராந்திய அபிவிருத்தி வங்கிகள், பணத்தரகர் நிறுவனங்கள், நிதிக்கம்பனிகள், கழிவீட்டு இல்லங்கள், காரணிப்படுத்தும் கம்பனிகள் என்பன இடம் பெறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2) மூலதனச் சந்தை** (Capital Market)

நிறுவனங்களிற்கு நீண்டகால, நடுத்தர கால நிதித் தேவையை நிறைவு செய்யும் வகையில் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட கால நிதி ஆவணங்களை பரிமாற்றம் செய்யும் சந்தை அமைப்பு மூலதனச் சந்தை ஆகும். இங்கு கைமாற்றம் செய்யும் பிரதான ஆவணங்கள் அல்லது கருவிகளாக பங்குகள், முறிகள் முக்கியம் பெறும்.

இலங்கையில் மூலதனச் சந்தையில் இடம் பெறும் நிறுவனங்களை தொகுப்பு செய்யும் போது,

*1) பங்குச் சந்தை*
உ-ம் :- கொழும்புப் பங்குச் சந்தை
*2) வர்த்தக வங்கிகள்*
உ-ம்:- இலங்கை வங்கி
*3) அபிவிருத்தி வங்கி*
உ-ம்:- அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம்
*4) காப்புறுதி தாபனங்கள்*
உ-ம்:- இலங்கை காப்புறுதிக் கூட்டுத் தாபனம்
*5) குத்தகைக் கம்பனி*
உ-ம்:- லங்கா மெசினறிக் கம்பனி
*6) அலகுப் பொறுப்பாட்சி நிறுவனம்*
உ-ம்:- சீ பேங்க் நம்பிக்கை அலகு
*7) நிதிக் கம்பனிகள்*
உ-ம்:- வங்கிகள்
*8) ஊழியர் சேமலாப நிதியம்*
*9) ஊழியர் நம்பிக்கை நிதியம்*

இவ் அமைப்பில் பல நிறுவனங்கள் பங்குகள் மூலமே தமது நிதியினை திரட்டி உள்ளனர்.

## இலங்கையின் பங்குச் சந்தையின் தோற்றம், வளர்ச்சி

முதலீட்டாளர்கள் தமது முதலீட்டினை பட்டியலிட்டு கம்பனிகளின் பங்குகளை கொள்வனவு செய்வதும், விற்பனை செய்வதும் போன்ற செயல்கள் நிகழக்கூடிய தளம் பங்குச் சந்தை ஆகும். இதனை இலங்கையில் கொழும்பு பங்குச் சந்தை (Colombo Share Market) என்ற நிறுவன அமைப்பு வழங்குகின்றது. இந்த நிறுவனத்தில் தற்போது 239 கம்பனிகளிற்கு மேல் பட்டியல் இடப்பட்டுள்ளது. இவ் நிறுவனம் தனது செயற்பாடுகளை 16 துறைகளாக வகுத்து இந்த சேவையை வழங்கி வருகின்றது. ஒரு பொருளின் விலை எவ்வாறு கேள்வி (Demand) நிரம்பல் (Supply) என்பவற்றால் தீர்மானிக்கப்படுகின்றதோ? அவ்வாறே பங்குகளிற்கான கேள்வி, நிரம்பல் அடிப்படையில் அதற்கான விலை நிர்ணயிக்கப்படுகின்றது.

பங்குகள் வழங்கும் முறையில் நிறுவனம் ஒன்று முதன் முதலாக பங்குகளை பொதுமக்களிற்கு வழங்கும் போது அதனை முதலாம் தர சந்தை (Primary Market) எனவும், மூதலீட்டாளர்கள் தங்களிற்கு இடையே பங்குகளை கைமாற்றிக் கொள்ளுதல் இரண்டாந்தரச் சந்தை (Secondary Market) எனவும் அழைக்கப்படும். கொழும்பு பங்கு சந்தையில் மக்கள் தமது பங்குகளை கொள்வனவு செய்வதன் மூலம் இவ்வாறான முதலீடுகளை மேற் கொள்ள முடியும்.

### இலங்கைப் பங்குச் சந்தைத் தோற்றம்

1870களில் கோப்பிச் செய்கையின் வீழ்ச்சியைத் தொடர்ந்து தேயிலைச் செய்கை ஆரம்பிக்கப்படுவதற்கு நிதி பற்றாக்குறை ஏற்பட்டது என்பதனால் 1896இல் கொழும்பு பங்குச் சந்தை தோற்றம் பெற்றது. இதன் ஆரம்பகால நிர்வாகம் பங்குத் தரகர் சங்கம் (The Share Brokers Association) மூலம் நிர்வகிக்கப்பட்டு வந்தது. பின்னர் 1904ஆம் ஆண்டில் பங்குத் தரகர் சங்கம், கொழும்பு பங்கு தரகர் சங்கம் (Colombo Brokers Association) என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. 1948ஆம் ஆண்டு செலாவணிக் கட்டுப்பாட்டு விதிகள் அறிமுகம் செய்யப்பட்ட போது கொழும்பு பங்கு தரகர் சங்கத்தில் 140 கம்பனிகள் மட்டும் பட்டியல் இட்டு இருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1975ஆம் ஆண்டு காலகட்டத்தில் காணிச் சீர்திருத்தச் சட்டமூலம் பெருந்தோட்ட காணிகள் அரச உடமை ஆக்கப்பட்டது. இதனால் நிதிப் பிரச்சினையை எதிர் கொண்ட நிறுவனங்கள் 76ஆக குறைவுற்றன. 1984ஆம் ஆண்டுக்கு பின்னர் பங்குச்சந்தை பரம்பல் வளர்ச்சி பெறத் தொடங்கியது. 1985ஆம் ஆண்டு இரு அமைப்புகளும் ஒன்றிணைந்து கொழும்பு பிணைகள் பரிமாற்று நிறுவகம் (Colombo Stock Exchange) ஆரம்பிக்கப்பட்டது. இதன் பின்னரே பொது மக்களும் நேரடியாக பங்குக் கொள்வனவில் உள்வாங்கப்பட்டனர். 1997 இல் பங்கு மாற்றல் தன்னியக்க வியாபார முறைகக்கு மாறியது. (Automated Trading System) கணணி மயப்படுத்தப்பட்டது. பங்குகள் தேவைப்படுவோன், விற்போன் தரவுகள் கணணியில் கொடுக்கப்பட்டு கணணி மூலமே தரவு இணைப்பு பெற்று கொடுக்கல் வாங்கல் இடம் பெறுகிறது. பங்குகள் பரிமாற்று நிறுவகம் கம்பனி கட்டப்பதிவு பெற்றமையால் இங்கு பங்கு தரகர் நிறுவனங்களும் இடம் பெற்று உள்ளன. அவர்களில் முக்கியமாக,

01) எலைட் பிளிப் பிணைகள் கம்பனி
02) ஏசிய பிணைகள் (தனியார்) கம்பனி
03) பார்டனீட் மேலோரி பங்கு தரகர் (தனியார்) கம்பனி
04) C.T செசுன் கம்பர்பெச் பங்கு தரகர் (தனியார்) கம்பனி
05) De இஸ்பின் பங்குத்தரகர் (தனியார்) கம்பனி
06) De சில்வா & அபெயவர்தன பங்குத் தரகர் (தனியார்) கம்பனி
07) பொப்ஸ் & ABN அம்ரோ பங்கு தரகர் (தனியார்) கம்பனி
08) ஜாடின் பிளபின் N.N.B பிணைகள் (தனியார்) கம்பனி
09) J. B. பிணைகள் (தனியார்) கம்பனி
10) ஜோன் கீல்ஸ் பங்கு தரகர் (தனியார்) கம்பனி
11) லங்கா பிணைகள் (தனியார்) கம்பனி
12) NDBS பங்கு தரகர் (தனியார்) கம்பனி
13) சமர்வீல் பங்கு தரகர் (தனியார்) கம்பனி
14) T.A பிணைகள் (தனியார்) கம்பனி
15) சிலின்கோ பங்கு தரகர் (தனியார்) கம்பனி

பங்கு சந்தையில் தமது பங்குகளை பட்டியல் இட இரண்டு முறையில் காட்சிப் படுத்தலாம்.

**1) முதலாந்தர பட்டியல் திரை (Main Board):-**

இங்கு தற்போது 23.5 கம்பனிகள் அங்கத்துவம் பெற்று உள்ளது. இதனை 16 துறைகள் ஆக வகுத்து உள்ளன.

**2) இரண்டாந்தர பட்டியல்:-**

இதில் 4 கம்பனிகள் உள்ளன. இதை விட OTC பட்டியல் (OTC Board) திறந்த முறையில் பங்குகளை காட்சிப்படுத்தியும் தமது பங்குகளை கை மாற்றம் செய்து கொள்ளலாம்.

**உ-ம்:-** ஜனசக்தி ஆயுள் காப்புறுதிக் கம்பனி பங்குச் சந்தையில் தரகர்களின் பணிகள் மிக முக்கியம் பெறுகின்றது. பொது மக்களிற்கு பங்கு இவர்கள் மூலமே வழங்கப்படுகின்றது.

இங்கு பொதுக்கம்பனிகளின் சாதாரண பங்குகள் தவிர முன்னுரிமைப் பங்குகள், பங்கு ஆணைப் பத்திரங்கள், முறிகள், என்பனவும் பட்டியல் படுத்தப்படும். இதனை விட வாக்குரிமை அற்ற பங்குகள், கம்பனி தொகுதிக் கடன்கள் போன்றவற்றின் மூலமும் நிதியினைத் திரட்டிக் கொள்ளலாம்.

## மத்திய வைப்புத் திட்டம்

(Central Depository System)

பங்குச் சந்தை தீர்வக நடவடிக்கைகள் செயற்படுத்தல் பங்கு கைமாற்றல்களைத் தீர்த்துக் கொள்வதற்கான பதிவு செய்தல் ஆகிய பணிகளை மேற் கொள்வதற்கான தனியார் கம்பனியொன்றாக மத்திய வைப்புத் திட்டம் (CDS) உருவாக்கப்பட்டுள்ளது. கொழும்புப் பங்குச் சந்தை இக் கம்பனியின் தொழிற்பாட்டிற்கு முழுமையான மூலதனப் பங்களிப்பை வழங்கியுள்ளது. இதன் செயற் பாடுகளாவன,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1) வாடிக்கையாளர்கள் பதிவு செய்தல் அல்லது வாடிக்கையாளர்கள் சார்பாக கணக்குகள் ஆரம்பித்தல் (Registration of Clients)
2) பங்குகள் வைப்பிலிடல் (Deposit of Shares)
3) பங்குகள் மீளப்பெறுதல் (Withdlrwal of Shares)
4) பங்குகள் கைமாற்றல் (Transfer of Shares)
5) தீர்வக நடவடிக்கைகள் (Clearing) மேற்கொள்ளல்
6) கொடுக்கல் - வாங்கல்கள் தீர்த்து வைத்தல் (Settlement)
7) பதிவு செய்தல் (Registation)
8) புதியதும் தவணையிட்டதுமான பங்கு வழங்கல்கள் பற்றிய செயற்பாடுகளில் (Handling of New & Subsequent Issues) ஈடுபடல்.

**பங்குச் சந்தைச் சுட்டி**
(Stock Market Indices)

ஏதாவது சந்தை ஒன்றின் விலைமட்டங்கள் சுட்டி ஒன்றின் மூலம் கணித்து காட்டப்படும். இதனால் பங்குச் சந்தை ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் காணும் விலைகளை சுட்டி மூலம் அறிந்து கொள்ள முடியும். இங்கு

1) சம நிறையிடப்பட்ட சுட்டி
2) விலை நிறையிடப்பட்ட சுட்டி
3) பெறுமானம் - விலை நிறையிடப்பட்ட சுட்டி எனப் பாகுபடுத்தலாம்.

இலங்கைப் பங்குச் சந்தையில் மூன்று சுட்டிகள் இடம் பெறுகிறது.

1) அனைத்து பங்கு விலைச் சுட்டி
2) மிலங்க விலைச் சுட்டி
3) உணர்திறன் விலைச் சுட்டி

**இலங்கை பிணைகள் பரிமாற்று ஆணைக் குழு:**

இவ் அமைப்பு 1987ஆம் ஆண்டு 36ஆம் இலக்க பிணைகள் ஆணைக்குழு சபைச் சட்டம் மூலம் உருவாக்கப்பட்டது. இது நியாயமானதும், முறைமை சார்ந்ததும் ஆன பிணைகள் சந்தை ஒன்று செயற்பட இது வழி செய்வதுடன் மேற்பார்வை செய்கின்றது. முதலீட்டாளர்களுக்கு பாதுகாப்பு, தரகர்களில் இருந்து, பாதுகாப்பு தரம் வாய்ந்த பிணைகள் சந்தைத் தொழிற்பாட்டிற்கு இது உறுதி அளித்தல் போன்ற சேவைகளை வழங்குகின்றது. இது 1991ஆம் ஆண்டு 26ஆம் இலக்க சட்ட மூலம் முன்னைய சட்டம் திருத்தப்பட்டு இவ் ஆணைக் குழு இலங்கைப் பிணைகள் பரிமாற்று ஆணைக்குழு எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இது ஒரு சட்ட ஆளுமை கொண்ட நிறுவனமாகச் செயற்படுகின்றது.

நிதிச் சந்தை என்ற பாரிய விடயத்துள் பல்வேறு அம்சங்கள் உள்ளன. அவற்றை நிதிச் சந்தை அறிமுகமும், பங்குச் சந்தை பற்றிய விபரங்களும் இதில் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. நாளாந்தம் மாறும் வணிக உலகில் இத் தகவல்கள் பெரிதும் உதவும் என்பது நம்பிக்கை.

**உசாத்துணை நூல்கள்:**

♣ இலங்கைப் பிணைகள் சந்தை
♣ பொருளியல் நோக்கு
♣ மத்தியவங்கி அறிக்கை

ஆக்கம்:
**க. துவாரகா**
க. பொ. த. (உ/த) 2004
வணிகத்துறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகமயமாதலும் இலங்கையும்

## அறிமுகம்

## பொருளாதார உலகமயமாதல்

நாடுகள் தேசிய பொருளாதாரம் என்ற நிலையில் இருந்து உலக பொருளாதாரம் என்ற நிலையை நோக்கி நகர்தல் உலகமயமாதல் எனப்படுகின்றது. அதாவது இன்றைய உலகில் தேசிய அடிப்படையிலான உற்பத்தி, வர்த்தகம், தொழில்நுட்பம், தொடர்பாடல், சமூக கலாச்சாரம் என்ற நிலையிலிருந்து உலக உற்பத்தி, வர்த்தகம், தொழில்நுட்பம், தொடர்பாடல், சமூக கலாச்சாரம் என்ற அடிப்படையில் உலக ளாவிய முறைமை ஒன்று தோற்றம் பெற்று வருவதாகும்.

எனவே உலகமயமாதல் என்பது பின் வரும் 4 வகைகளை உள்ளடக்கியது.

1) பொருளாதாரம்
2) தொழில்நுட்பம்
3) தொடர்பாடல்
4) சமூக கலாச்சாரம்

## உலக மயமாதலின் ஆரம்பம்:

1960ஆம் ஆண்டுகளில் உலக மய மாதலுக்கு அடித்தளம் இடப்பட்டது. இதற்கு அடிப்டையாக அபிவிருத்தி அடைந்த நாடு களில் பல்தேசிய கம்பனிகள், வியாபார பல் கூட்டமைப்புக்கள் என்பன தமது வியாபார உற்பத்தி திறன்களை மாற்றி 3ஆம் மண்டல நாடுகளில் பொருளாதாரத்தின் மீது ஆதிக்கம் செலுத்தின. இதன் ஆரம்பப் படியாக அமெரிக்காவின் பல்தேசிய நிறுவனங்களின் தீவிர விஸ்தரிப்பும், அபிவிருத்தி அடைந்த நாடுகளின் பல்தேசிய நிறுவனங்கள் இணைந் தமையும் ஆகும். மேலும் கரை கடந்த கம்பனி களும், பல்தேசிய கம்பனிகளும் உலகின் பெரும்பாலான நிறுவனங்களும் உற்பத்தி சந் தைப்படுத்தல் என்பவற்றை தமது கட்டுப் பாட்டில் வைத்திருந்தன.

**Eg:-** கொக்காகோலா, பெச்சிக்கோலா, சிடிபேங்க, எவரெடி டொயோட்டா, நிசான், ஹொண்டா, ஜமஹா, சோனிநேஸனல், ஐ.பீ.எம். கொடெக், பியுஜீ, அமெரிக்கன் எக்ஸ்பிறஸ் வங்கி, செல், நெஸ்டே, பாட்டா போன்ற நிறுவனங்கள்களை குறிப்பிட முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உலகமயமாதலுக்கான காரணங்கள்

1) நவீன தொழில்நுட்ப கண்டுபிடிப்புக்கள்

2) மிக விரைவாக வளர்ச்சியடைந்து வரும் தொடர்பாடல்

3) குறைந்த போக்குவரத்து செலவு

4) வளர்ச்சியடைந்த கணனி செயற்பாடு

5) சர்வதேச வலைப்பின்னல் விருத்தி

6) பல்தேசிய கம்பனிகளின் பொருளாதார மேலாதிக்கம்

7) வளர்ச்சி அடைந்த கைத்தொழில் நாடுகளின் உற்பத்தி திறன் அதிகரிப்பு

8) உலக நாடுகளுக்கிடையேயான வர்த்தகப் போட்டி.

### வளர்முக நாடுகளும் உலகமயமாதலும்

உலக மயமாதல் நடவடிக்கை காரணமாக வளர்முக நாடுகளின் பொருளாதாரம் வளர்ச்சி அடைந்த நாடுகளினால் பெருமளவு சூறையாடப்படுகின்றன. இதற்கு சர்வதேச நாணய நிதியம், உலகவங்கி, உலக வர்த்தக அமைப்பு என்பனவும் துணையாக அமைகின்றன.

3ஆம் உலக நாடுகளின் மீது அதன் தேசியவாத பொருளாதார கொள்கைக்கு சவால் விடும் வகையில் சர்வதேச பொருளாதாரத்துடன் இணைந்து செயற்படுமாறும், அமைப்பு சீராக்கல்களை மேற்கொள்ளும் மாறும் மேற்படி அமைப்புக்ககள் நிர்ப்பந்திக்கின்றன.

உதாரணமாக 1977ஆம் ஆண்டுகளில் உலக வங்கியும் சர்வதேச நாணய நிதியமும் அதன் அங்கமாக இலங்கை மீது பின்வரும் பொருளாதார சீர்திருத்தங்களை திணித்தன.

1) வர்த்தகத்தை தராண்மைப்படுத்தல்

2) நாணய மாற்று விகித கட்டுப்பாடுகளை தளர்த்தல்

3) பல்தேசிய கம்பனிகளில் முதலீடுகளை வரவழைத்தல்

4) வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையைக் குறைத்தல்.

5) பொருளாதாரத்தில் அரசின் தலையீட்டைக் குறைத்தல்.

6) உலக வர்த்தக ஒன்றியத்துடன் இணைந்து வர்த்தக கொள்கைகளை நடைமுறைப்படுத்தல்

7) சந்தை முறைமையை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரத்தை கட்டியெழுப்புதல்

8) மானியங்களைக் குறைத்தல்

9) நேரடி வெளிநாட்டு முதலீடு தொடர்பாக வரிக்கட்டுப்பாடுகளைத் தளர்த்துதல்.

10) நிதிச் சந்தைகளைப் பன்முகப்படுத்துதல்.

### உலக மயமாதலும் இலங்கையும்

உலக மயமாதல் செயற்பாட்டில் இலங்கை விரும்பியோ விரும்பாமலோ ஈடுபட வேண்டிய தேவை உள்ளது. 1980ஆம் ஆண்டுகளில் உலக மயமாதல் செயன்முறை சர்வதேச ரீதியில் தாக்கத்தை ஏற்படுத்தி கொண்டிருந்த போது இலங்கையும் தாராளமயமாக்கல் கொள்கையின் ஊடாக உலக மயப்படுத்தலுக்கான பாதையை திறந்து விட்டது. இது இலங்கையின் பொருளாதாரத்தின் மீது பின்வரும் தாக்கங்களை ஏற்படுத்தியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1) வெளிநாட்டு வர்த்தகத்தில் வளர்ச்சி ஏற்பட்டமை

1970ஆம் ஆண்டுகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4% மாகக் காணப் பட்ட வெளிநாட்டு வர்த்தகத்தின் பங்கு 1990ஆம் ஆண்டுகளில் 8.5% ஆக அதிகரித் தது.

2) வெளிநாட்டு முதலீடுகளின் உட்பாய்ச் சல்கள் அதிகரித்தமை.

1970ஆம் ஆண்டுகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1%ஆக காணப்பட்ட வெளிநாட்ட முதலீடு 1990ஆம் ஆண்டுகளில் 6.5% ஆக அதிகரித்தது.

3) வேலை வாய்ப்புக்கள் பெருமளவு அதிக ரித்து வேலையின்மை வீழ்ச்சி அடைந்தது.

1970ஆம் ஆண்டுகளில் ஊழியப்படை 26% வரை காணப்பட்ட வேலையின்மை 1990ஆம் ஆண்டுகளில் ஏறத்தாழ 10%இற்கு குறைந்தது.

4) பொருளாதார வளர்ச்சியிலும் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டது.

1970ஆம் ஆண்டிலிருந்து 1977ஆம் ஆண்டு வரை 3%ஆகக் காணப்பட்ட சராசரி பொருளாதார வளர்ச்சி வீதம் 1991ஆம் ஆண்டிலிருந்து 1999ஆம் ஆண்டு வரை 45% ஆக அதிகரித்தது.

5) பொருளாதாரத்தில் கைத்தொழில் சேவைகள் துறை நன்கு வளர்ச்சி அடைந்தது.

1978ஆம் ஆண்டுகளில் கைத்தொழில் சேவைத்துறை மொத்த உள்நாட்டு உற்பத்தி யில் 70% ஆக காணப்பட்டு 2000ஆம் ஆண்டுகளில் 80%ஆக அதிகரித்தது.

6) வருமான பங்கீட்டிலும், ஓரளவு நியாயமான தன்மை ஏற்பட்டது.

நகரங்களை மட்டுமே அடிப்படையாகக் கொண்ட கீழ்க்கட்டுமானங்கள் கிராம புறங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டமை.

## உலகமயப் படுத்தலானது வளர்முக நாடுகள் மீது பின்வரும் அம்சங் களைத் திணித்தன

- ♣ தொழில் நுட்ப ஏகபோகம்
- ♣ இயற்கை வளங்கள் மீதான ஏகபோகம்
- ♣ ஊகம் மற்றும் தொடர்பாடல் மீதான ஏக போக உரிமை Eg:- Star, B.B.C.
- ♣ உலகளாவிய நிதிச்சந்தை மீதான கட்டுப் பாடும் சர்வதேச நிதிநிறுவனங்களை கட் டுப்படுத்தியமையும்.
- ♣ அழிவுக்கரமான ஆயுதங்களுக்கு வித்திட்ட மையும்.
- ♣ உலகமயமாதலின் அனுகூலங்கள் உலகின் அனைத்துப் பகுதிக்கும் ஒரு மூலையிலிருந்து தகவலையோ பொருளையோ பணத்தையோ பரிமாற்ற முடிகிறது.
- ♣ உலக நாடுகளின் நாணய நிதிச்சந்தைத் தொடர்புகள் வலிமை பெற்றிப்பதால் வளர் முக நாடுகள் நிதிவசதி பெறக்கூடியதாயுள் ளது.
- ♣ அனைத்துலக நாடுகளும் எதிர்நோக்கும் சூழல் மாசுறல், இயற்கை வளங்கள் முடிவ டைதல், வீண் விரயங்கள் கடன் சுமை போன்றவற்றுக்கு ஒன்றிணைந்து தீர்வு காணல் சாத்தியமாகிறது.
- ♣ போட்டி நிர்ப்பந்தத்தால் 3ஆம் உலக நாடு கள் தமது வினைத்திறனை அதிகரித்து அதனூடாக வாழ்கைத் தரத்தை உயர்த்தலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

♣ நாடுகளிடையேயான பொருளாதார அரசியல் நல்லுறவுகள் வளர்ச்சியடையும்.

♣ மக்கள் தரமான பொருட்கள் சேவைகளை மலிவாகப் பெற முடியும்.

**உலக மயமாக்கல் தொடர்பாக வளர்ந்து வரும் கண்டனங்கள்:**

பத்து வருட செயலாற்றங்கள் உலக மயமாதல் தொடர்பான அவ நம்பிக்கைகளையே அதிகரிக்க செய்துள்ளன. உலக பொருளாதார கூட்டமைப்பின் ஸ்தாபகரமான கிளெவ்ஸ் சவாப் (Kalaus Schwab) மற்றும் அதன் முகாமை இயக்குனர் குளோடா மாட்ஜா (Clauda Smodja) போன்றோர் உலகமயமாதல் பற்றிப் பகிரங்கமாகவே கண்டனங்கள் தெரிவித்துள்ளனர்.

**உலகமயமாதல் தொடர்பாக தெரிவிக்கப்படும் கண்டனங்களில் முதன்மையானவை வருமாறு:**

1) பொருளாதார வளர்ச்சிக்கான மையத்தளங்களை நிலை பெயர செய்வதில் உலக மயமாக்கம் தீவிரமாக செயற்படுகின்றது. ஒரு பொருளாதார குவிமையத்திலிருந்து வளர்ச்சி வேறு பிராந்திய மையத்திற்கு நகர்த்தப் படுகின்றது. இதன் காரணமாக சமூக உறுதி யின்மை அதிகரித்துள்ளது.

2) உலக மயமாக்கல் பல நாடுகளில் புதிதாக உருவாக்கிய வேலைவாய்ப்புக்களை விட அவை இல்லாமற் செய்த வேலை வாய்ப்புக்களே அதிகம் அதாவது வேலை வாய்ப்புகள் அதிகரித்தது போல் தோன்றினாலும் பல மட்டங்களில் தொழில் வாய்ப்பை மூடவும் செய்துள்ளது.

3) உலகமயமாதல் போட்டியில் வெற்றி பெற்றால் பன்மடங்கு லாபம் குவிவது உண்மையாயினும் இப் போட்டியில் தோல்வியடையும் சிறிய நாடுகள் மிகவும் மோசமான இழப்புகளை எதிர் கொள்கின்றன. இந் நிலையில் சிறிய நாடுகள் பலவற்றை உலகமயமாதலுக்கு முன்பிருந்த நிலையை விடவும் மோசமானதாக்கி விடக் கூடியது.

4) தொழில் நிறுவனங்களை உலக மயமாதல் செயற்பாட்டால் மிக உயர்ந்த இலாபத்தை ஈட்டுகின்றன ஆனால் மறுதலையாக பணியாற்றுவோருக்கு தொழில் உத்தரவாதம் ஏதுமில்லை. அவர்களுக்கு நியாயமான வேதனை மட்டங்களுமில்லை. தனி நபர்களின் இழப்புகளில் கூட்டு நிறுவனங்கள் செழித்து வளர உலக மயமாதல் இடமளிக்கின்றது.

5) தற்போது உலகில் காணப்படும் வருமான, செல்வ சமநிலையின்மையை உலக மயமாதல் பன்மடங்கு அதிகரித்து செல்கின்றது. பில்லியன் டொலர்கள் கொண்ட 358 செல்வந்தர்களின் சொத்து 760 பில்லியன் டொலர்களாகும். உலகின் அரைவாசி வறிய மக்களின் சொத்துகளை விட இவை உயர்வானவை என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

6) உலக ரீதியில் தலத்தில் இல்லாத முதலாளிகளையும் கண்ணுக்குப் புலனாகாத ஊழியத்தையும் உலக மயமாக்கம் வளர்ந்து வருகிறது. லாபம்பெறும் முதலாளியை விட ஒருபோதும் காண முடியாத மில்லியன் கணக்கிலான ஊழியத்தை உலகமயமாதல் வளர்த்து வருகின்றது. இது புதிய ஆனால் விரும்பத்தகாத வளர்ச்சியாகும்.

7) தேசிய மக்கள் அவர்களின் அபிலாஷைகள் முடிவுகள் மேற்கொள்வதில் அவர்களுக்கிருந்த அதிகாரம் போன்ற எல்லாவற்றை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் உலக மயமாக்கல் சிதைத்து வருகின்றது. தேசிய வளங்கள்மீது சொந்த நாட்டு மக்களுக்கு கட்டுப்பாடு இல்லை. சர்வதேச நிறுவனங்களோ இத்தகைய முடிவுகளை எடுக்கின்றன. அதன் பலா பலன்கள் நன்மையாயினும் தீமையாயினும் அனுபவிக்கும் தகுதி மாத்திரமே சுதேசிய மக்களுக்கு உண்டு.

## உலகமயப்படுத்தலின் துரிதகதியை உறுதி செய்த காரணிகள்

- ♣ பொது உடமை நாடுகளின் வீழ்ச்சி
- ♣ சர்வதேச வியாபாரத்தின் பெரும் வளர்ச்சி
- ♣ கிழக்கு, மேற்கு ஜேர்மனி இணைவும் ஐரோப்பிய பொருளாதார அரசியல் மாற்றமும்.
- ♣ விஞ்ஞான தொழில்நுட்ப புரட்சியும் தகவல் துறையின் புதுமைகளும்.
- ♣ அபிவிருத்தி அடைந்த நாடுகளின் உதவி அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்கு விரிவாக்கப்படுதல்.

எவ்வாறிருந்த போதிலும் வளர்ச்சி அடைந்த நாடுகளுக்கே பெரும்பாலும் உலக மயமாதல் வாய்பாக உள்ளது. ஆசிய நாடுகளின் பொருளாதாரங்கள் ஸ்திரத்தன்மையற்ற கீழ் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

**T. தனுஜா**
2004 வர்த்தகம்.

---

நல்லவனாய் பிறப்பது சந்தர்ப்பத்தினால்
நல்லவனாய் வாழ்வது முயற்சியினால்

நிதானத்தைக் கடைப்பிடி, அதுவே வெற்றியின் முதற்படி

நீ மௌனமாக இருக்கும் போது
பிறர் உன்னை முட்டாள் என சந்தேகிக்கக் கூடும்
வாயைத் திறப்பதன் மூலம் அதனை உறுதிப்படுத்தி விடாதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைமாற்றத்தக்க சாதனங்களில் ஒன்றான வணிகத்தாள்

முதற்தர கம்பனி அல்லது நிதியியல் நிறுவனம் அதி பெறுமானம் கொண்ட குறுங் காலக் கடனைப் பெற்றுக் கொள்வதற்காக வெளியிடும் ஒரு வகை பிணைப் பத்திரம் வணிகத்தாளாகும்.

### வணிகத்தாளின் பண்புகள்

1) கம்பனி குறுங்கால கடனைப் பெற பயன் படுத்தும் பிணைப் பத்திரம்
2) இதன் முதிர்ச்சிக் காலம் 2-270 நாட்கள். ஆனால் 3,6 மாத முதிர்ச்சி கொண்டவை அதிகமாக காணப்படுகின்றன.
3) இதன் முகப் பெறுமதி 2000-3000 MR
4) முகப் பெறுமதியில் கழிவு விலையில் விற்கப்படும்
5) முதிர்வு நாளில் முகப் பெறுமதியைப் பெற்றுக் கொள்ளலாம்.

### வணிகத்தாளில் அடங்க வேண்டிய விடயங்கள்

1) வணிகத்தாள் என்ற சொல்
2) வழங்கும் நிறுவனத்தின் பெயர்
3) தொடரிலக்கம்
4) வரையப்படும் இடம்
5) வரையப்படும் திகதி
6) முதிர்வு திகதி
7) தொகை எழுத்திலும், இலக்கத்திலும்
8) வரையும் நிறுவனத்தின் அதிகாரம் பெற்ற வர்களின் கையொப்பம்
9) இக் கொடுப்பனவை உறுதி செய்பவர்களின் ஒப்பம்.

### வணிகத்தாளில் பணத்தை முதலீடு செய்வோர்

1) ஓய்வூதிய நிதியங்கள்
2) அலகு பொறுப்பாட்சி ஸ்தாபனங்கள்
3) காப்புறுதி நிறுவனங்கள்
4) ஊழிய சேமலாப நிதியம்

### வணிகத்தாளை வெளியிட்ட நிறுவனங்களுக்கு உதாரணங்கள்

1) வரையறுத்த ஜோன்சீல்ஸ் கம்பனி
2) வரையறுத்த எயிற்சின் ஸ்பென்ஸ் கம்பனி

### வணிகத்தாளில் முதலீடு செய்வோர் அடையும் நன்மைகள்

1) வட்டி வருமானத்தை பெறலாம்
2) முதிர்வு திகதிக்கு முன் கழிவு நீக்கம் செய்து கைமமாற்றம் செய்யலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வணிகத்தாளை வெளியிடுவோர் அடையும் நன்மைகள்**

1) அதிக பெறுமானங் கொண்ட குறுங்காலக் கடனை இலகுவாக பெறலாம்.

2) பணச் சந்தையின் தொடர்புகள் இன்றி நிதி திரட்டலாம்

இவ்வாறாக கைமாறத்தக்க சாதனங்களின் வளர்ச்சியானது படிப்படியாக முன்னேற்றமடைந்து செல்கின்றது.

**பவித்திரா அருள்ராசன்**
2004 Com

## பல நாட்டு பல மொழிகள்

தாய்க்கு உதவாதவன் யாருக்கு உதவுவான் – (இந்தியா)

கோபத்தால் செத்துப்போ! வழக்கப்படாதே!
பசியால் செத்துப்போ களவு செய்யாதே – (சீனா)

உள்ளே நுழையும் முன் வெளியே வருவதைப் பற்றிச் சிந்தனை செய் – (அரேபியா)


சொன்ன சொல்லையும் எறிந்த கல்லையும் திருப்பி அழைக்க முடியாது – (இங்கிலாந்து)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகளிரின் வனிதை கொழிக்க
வாழ்த்துக்கள்

தரமானதும் சுவையானதுமான தயாரிப்புக்களுக்கு
இன்றே நாடுங்கள்



# கல்யாணி



73, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சௌமியா ரெக்ஸ்

காலத்திற்கேற்ப கவர்ச்சி வடிவங்களில்

அழகிய ஆடைத் தினிசுகள் அத்தனையும்

அங்கிங்கென்றலையாது

ஓரிடமாகப் பெற்றிட நாடுங்கள்









# சௌமியா ரெக்ஸ்

இல. 4, பெரியகடை வீதி,

யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Best Wishes to Vanika Vanithai
from

**SIVA MILL,**
46/1, Brown Road,
Jaffna.

**PILLAIYAR MILL,**
188/3, Hospital Road,
Jaffna.

**Kajeeban Stores**

132, Ramanathan Road,
Jaffna.

**வசந்தன்**
**கிறீம் ஹவுஸ்**

உரும்பிராய் சந்தி
உரும்பிராய்.

**குயின்சி ரவல்ஸ்**


சுவினை
குப்பிளான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SAIVENGADA GEMS AND JEWLLERY

**Gems Paradise in Jaffna Penin Sula**

ஏக விநியோகஸ்த்தராகிய எங்களிடம் சர்வதேச தரம் பெற்ற Signity Company இன்
Swiss A.D. மற்றும் இராசிக் கேற்ற நவரத்தினக் கற்கள்,
வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட தரமான
முத்துக்கள், மற்றும் பல்வேறு வகையான கற்களையும்,
மொத்தமாகவும், சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ளலாம்.



**Colombo Office:**
**108 2/2, Sea Street**
**Colombo - 11**
**Tel - 472881**
**Fax - 472876**

**Branch:**
**No - 299 or 301**
**Kasthuriyar Road,**
**Jaffna.**
**Tele/Fax - 021 - 2225476**

---

வணிக வனிதை இதழ் சிறப்புற
நல் வாழ்த்துக்கள்

# D.C.M.

பழம் ரோட், கந்தர் மடம்.

# D. C. M

பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# EXPO AIR

*Your Friend in the skies....*

# எக்ஸ்போ எயார்

வான்வெளியில் உங்கள் நண்பன்



இலங்கையில் முன்னணி வகிக்கும் நம்பத்தகுந்த
உள்ளூர் விமான சேவை

ஒதுக்கீடுகளுக்கு: 021 2223891 021 2226297
0712 348888 071 2349999
074 512666 021 360290 012 360291

*E mail: Jaffna @ expoavlcom*

**464, Galle Road,**
**Colombo-03.**
**T.p 074 512666** (3) Lines)
Fax: 074514700

**296 A/1, Galle Road,**
**Colombo-03.**
**T.p: 01 2360290/2360291**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் அண்மைக்கால புள்ளி விபரங்கள்

க. பொ. த. உயர்தர மாணவர்கள் கற்கும் பாடங்களில் ஒன்றான பொருளியல் சம்பந்த மான புள்ளி விபரங்களை இத் தொகுப்பு உள்ளடக்கியுள்ளது. அதாவது இறுதியாக வெளிவந்த புள்ளி விபரங்கள் தொகுக்கப் பட்டுள்ளன. இத் தொகுப்பானது 2004இல் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு பெரிதும் உதவியாக இருக்கும் என நம்புகிறேன்.

## உற்பத்தி அல்லது வெளியீட்டு முறையிலான தேசிய வருமானக் கணிப்பீட்டில் வரும் புள்ளி விபரங்கள் (2001 ஆம் ஆண்டு)

| துறை | மொத்த தேசிய உற்பத்தியின் சதவீதப் பங்கு (2001) |
|---|---|
| 01) வேளாண்மை, காட்டுத் தொழில்,கடற்றொழில் | 20.1 |
| 02) சுரங்கமகழ்தலும் கல்லுடைத்தலும் | 1.8 |
| 03) தயாரிப்புத் தொழில் | 16-9 |
| 04) கட்டடவாக்கம் | 7.3 |
| 05) மின்வலு, வாயு, நீா் | 1.4 |
| 06) போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல், தொடர்பு | 12.5 |
| 07) மொத்த சில்லறை வர்த்தகம் | 21 |
| 08) வங்கித் தொழில், காப்புறுதி, உண்மைச் சொத்து | 8.1 |
| 09) குடியிருப்புக்களின் உடமை | 1.8 |
| 10) பொது நிர்வாகமும் பாதுகாப்பும் | 5.0 |
| 11) பணிகள் (வேறு எங்கும் குறிப்பிடப்படாதவை) | 4.1 |

| | 2001 மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதப் பங்கு |
|---|---|
| நுகர்வு | 84.7 |
| முதலீடு | 22.0 |
| பொருட்கள் காரணியல்லாபணிகளின் ஏற்றுமதி | 37.0 |
| பொருட்கள் காரணியல்லா பணிகளின் இறக்குமதி | 43.7 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| உள்நாட்டு சேமிப்பு | 15.3 |
| தேசிய காரணி வருமானம் | 4.2 |
| தேசிய சேமிப்பு | 19.5 |

## அரசின் இறைத் தொழிற்பாடுகள் பற்றிய புள்ளி விபரங்கள்

| | மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதம் |
|---|---|
| 1) மொத்த அரசிறை | 17.5 |
| வரி அரசிறை | 15.0 |
| வரியல்லா அரசிறை | 2.6 |
| 2) நடைமுறை செலவு | 21.0 |
| 3) மூலதனமும் தேறிய கடன் வழங்கலும் | 5.1 |
| 4) நடைமுறை க/கு நிலுவை | -3.4 |
| 5) முதன்மை க/கு நிலுவை | -1.2 |
| 6) மொத்த நிலுவை (கொடைகளுக்கு முன்) | -8.5 |
| 7) நிதியிடல் | 8.5 |
| i) வெளிநாட்டு நிதியிடல் | 1.7 |
| ✳ தேறிய கடன் பெறுகை | 1.2 |
| ✳ கொடைகள் | 0.5 |
| ii) உள்நாட்டு நிதியிடல் | 5.5 |
| ✳ சந்தைக் கடன் பெறுகை | 5.5 |
| வங்கியல்லா | 6.8 |
| வங்கி | -1.2 |
| வர்த்தக வங்கி | -1.2 |
| iii) தனியார் மயமாக்கல் பெறுகை | 1.3 |

(2002ஆம் ஆண்டுக்குரிய பாதீடு செய்யப்பட்ட தகவல்கள்)

## வரியமைப்பு

| | மொத்த அரசிறையின் வீதம் (2002) |
|---|---|
| 1) வரி அரசிறை | 85 |
| 2) வருமான வரி | 14 |
| 3) உள்நாட்டுப் பொருட்கள் பணிகள் மீதானவரி | 57 |
| 4) சர்வதேச வர்த்தகம் மீதானவரி | 12 |
| 5) வரி அல்லா அரசிறை | 15 |
| 6) மொத்தப் படுகடன் பணி | 117 |
| 7) மொத்தப்படுகடன் (அரச செலவினம்) | 50 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விலைச்சுட்டெண்**

| | 2001 |
|---|---|
| 1) கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் | 2899.4 |
| 2) கொழும்பு பெரும்பாக நுகர்வோர் விலைச் சுட்டெண் | 279.6 |
| 3) கொழும்பு மாவட்ட நுகர்வோர் விலைச் சுட்டெண் | 129.7 |
| 4) மொத்த விற்பனை விலைச் சுட்டெண் | 1471.2 |

**ஏற்றுமதிக் கட்டமைப்பு**

| ஏற்றுமதி வகை | 2001 |
|---|---|
| 1) விவசாய ஏற்றுமதி | 19% |
| 2) கைத்தொழில் ஏற்றுமதி | 77% |
| 3) கனிப்பொருள் ஏற்றுமதி | 1% |
| 4) வகைப்படுத்தப்படாதவை | 3% |

**இறக்குமதி கட்டமைப்பு**

| இறக்குமதி வகை | 2001 |
|---|---|
| 1) நுகர்வுப் பொருட்கள் | 21% |
| 2) இடைத்தரப் பொருட்கள் | 56% |
| 3) முதலீட்டுப் பொருட்கள் | 18% |
| 4) வகைப் படுத்தப்படாதவை | 5% |

**பொருளாதாரக் கட்டமைப்பு**

| துறை | 2001 |
|---|---|
| 1) விவசாயத்துறை | 19% |
| 2) கைத்தொழில் துறை | 28% |
| 3) சேவைத்துறை | 53% |

**சனத்தொகையுடன் தொடர்பான புள்ளி விபரங்கள்**

| | | 2001 |
|---|---|---|
| 01) பருமட்டான பிறப்பு வீதம் | | 18% |
| 02) பருமட்டான இறப்பு வீதம் | | 6% |
| 03) சிசுமரண வீதம் | | 12% |
| 04) இயற்கை அதிகரிப்பு வீதம் (நூற்றுக்கு) | | 1.2% |
| 05) சிறுவர் தங்கியிருப்பு வீதம் | | 37.9% |
| 06) முதியோர் தங்கியிருப்பு வீதம் | | 15.4% |
| 07) சிறுவர் முதியோர் சுட்டெண் | | 26% |
| 08) வயதுக் கட்டமைப்பு | 0 - 14 வயது | 24.8% |
| | 15 - 59 வயது | 65.2% |
| | 60க்கு மேல் | 10% |
| 09) தொழிற்படையின் பங்கேற்பு வீதம் | ஆண் | 66% |
| | பெண் | 31.5% |
| 10) மொத்த ஊழியப்படை | | 48.3% |

**வ. ரேகா**
2004 வர்த்தகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டுறவு காப்புறுதிக் கம்பனி

கூட்டுறவு காப்புறுதி கம்பனியானது தேசிய கூட்டுறவு சபையினாலும், அதன் தலைவர் லயனர் சமரசிங்க வாலும் 1999ஆம் ஆண்டு மார்ச் மாதம் 2ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இக் கம்பனியின் காப்புறுதி ஒப்பந்தங்கள் ஆவன,

01) சமகி 2000
02) சிசுசெத (சிறுவர் நலன் திட்டம்)
03) சமகி சரண (வருமானம் குறைந்தவர்களுக்கு 2001 மட்டும்)

1) இதோ! சமகி ஆயுள் 2000 ஆதார நிதிக் காப்புறுதி

**பொருள் பற்றி:**

தனிச் சிறப்பு வாய்ந்த இந்த ஆயுள் காப்புறுதித் திட்டம், காப்புறுதி முதிர்ச்சி பெற்ற பின்னர் மேற் கொண்டு கட்டுப் பணம் செலுத்தாமலே இலவச மாக காலவரையறையின்றி ஆயுள் காப்புறுதி வசதியை காப்புறுதிதாரர் அனுபவிக்க வகை செய்யும் விதத்தில் உருவாக்கப் பட்டதாகும். இக் காப்புறுதித் திட்டத்தில் விசேட சிறப்பு என்னவென்றால் காப்புறுதி செய்து கொண்டவரின் காப்புறுதித் திட்டம் தேர்ச்சி பெற்ற பின்னரும் அவரின் மரணம் ஏற்படும் போது மேலும் ஒரு கொடுப்பனவு உறுதிப் படுத்தப்பட்டுள்ளதென்றும் மன நிம்மதியை அளிக்கின்றதென்பதுமாகும்.

குறிப்பிட்ட ஒரு காலத்திற்குக் காப்புறுதி செய்து அந்த காலவரையறை முடிந்த பின்னர் காப்புறுதித் தொகையும் அதனோடு சேர்ந்த போனஸ் தொகைகளும் காப்புறுதிதாரருக்கு வழங்கப்பட்ட பிறகும் அன்னார் மேற் கொண்டு கட்டுப் பணம் செலுத்தாமலே ஆரம்பத்தில் காப்புறுதி செய்து கொண்ட அடிப்படைத் தொகைக்கு சமனான தொகையை இலவச மரண காப்புறுதிக் கொடுப்பனவாகப் பெறத் தகுதியுடையவர் ஆவார்.

**இந்தக் காப்புறுதியின் தனிச் சிறப்பு என்ன?**

ஆயுள் காப்புறுதி செய்து கொள்ளும் ஒருவர் தன் ஆயுள் காலம் முழுதும் நிதிசார் அனுகூலங்களை அனுபவிக்க இடமளிக்கும் திட்டம் இது ஒன்றே. மேலும் ஆயுள் காப்புறுதி செய்து கொண்டவர் ஒரே பொலிசியில் வேறுபல அனுகூலங்களையும் உள்ளடக்கி யாவும் இணைந்த ஒரு பொக்கிசமாக அதனை அமைத்துக் கொள்ள இடமளிக்கின்றது. அதாவது வெவ்வேறு பொலிசிகளை வாங்காமல் எல்லா அம்சங்களையும் ஒரே பொலிசியில் அடக்கி கொள்ளலாம். தனிப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவைகளுக்கு இசையும் வகையில் மேலதிக அனுகூலங்களையும் அது வழங்கும். உதாரணமாக பென்சன் அனுகூலம் அடங்கலாக கீழே விவரித்திருக்கும் எல்லா நன்மைகளையும் பெற்று ஒரே பொலிசியில் ஆயுள் காப்புறுதியுடன் பென்சனையும் இணைத்துக் கொள்ளலாம்.

### யாருக்கு இந்தக் காப்புறுதி சிறந்தது

18-60 வயதுக்கிடைப்பட்ட தனி ஆட்களுக்கு தனிப்பட்டவர்களின் பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்யத்தக்க பூரண ஆயுள் காப்புறுதித் தொகுதித் திட்டமாகும். ஒவ்வொருவரின் வருவாய்க்கு ஏற்ற வகையிலும் இது வகுக்கப்பட்டுள்ளது.

இந்தக் காப்புறுதியில் சேர்த்துக் கொள்ளக் கூடிய மேலதிக துணை அனுகூலங்கள் யாவை?

### மேலதிக அந்திம கால நலன்கள்

ஆயுள் காப்புறுதி செய்து கொண்ட ஒருவர் விபத்தின் நிமித்தமோ, இயற்கை காரணங்களாலோ அகால மரணமடைய நேரிட்டால் அன்னாரை அண்டி வாழ்வோரின் நன்மைக்காக உயரிய ஆயுட் காப்புறுதி அனுகூலத்தை குறைந்த கட்டுப்பணத்திற் பெற வகை செய்கிறது. காப்புறுதி செய்து கொண்டவர் காப்புறுதி நடைமுறையிலுள்ள காலத்தில் இறக்க நேர்ந்தால் காப்புறுதி செய்யப்பெற்ற அடிப்படைத் தொகையுடன் இந்த அனுகூலத்தின் பிரகாரம் காப்புறுதி செய்யப்பெற்ற மேலதிக தொகையும் கொடுப்பனவிற்கு உரியதாகும்.

காப்புறுதி செய்த தொகையின் 6 மடங்கு அல்லது அதிக பட்சம் 10 மில்லியன் இந்த இரண்டில் எது குறைவோ அந்த தொகை மரணத்தின் போது வழங்கப்பட வேண்டிய தொகையாக சேர்த்துக் கொள்ளப்படலாம்.

"விபத்தால் ஏற்படும் மரணம் / பூரண நிரந்தர ஊனம் / நிரந்தரமான அரைகுறை ஊனம் ஆகியவற்றின் பேரிலான அனுகூலங்களும் கட்டுப்பண விலக்காகும்."

### விபத்தால் ஏற்படும் மரணத்தின் பேரிலான அனுகூலம்

ஆயுட் காப்புறுதி செய்து கொண்ட ஒருவர் விபத்தின் நிமித்தமாக மரணமடைந்தால் அன்னாரை அண்டி வாழ்வோருக்கு குறைந்த கட்டுப் பணத்தோடு உச்ச ஆயுட் காப்புறுதி நலனைப் பெற்றுக் கொடுக்க வாய்ப்பளிக்கிறது. காப்புறுதி செய்த அடிப்படைத் தொகையின் நான்கு (4) மடங்கு அல்லது அதிக பட்சம் 10 மில்லியன் இரண்டில் எது குறைந்ததோ அந்த தொகையை விபத்தின் நிமித்தமான காப்புறுதித் தொகையாகச் சேர்த்துக் கொள்ளலாம்.

### முழுமையான நிரந்தர ஊனம் தொடர்பான நலன்

ஆயுள் காப்புறுதி செய்து கொண்ட ஒருவர் விபத்துக் காரணமாக முழுமையான நிரந்தர ஊனமடைந்தால்,

அ) எதிர்கால கட்டுப்பணக் கொடுப்பனவுகள் நிறுத்தப்படும்

ஆ) விபத்தின் நிமித்தமான மரணத்தை முன்னிட்டு காப்புறுதி செய்யப் பெற்ற மேலதிக தொகைக்கு சமனான ஒருதொகை பத்து (10) தவணைகளில் சமமாக பிரித்து வழங்கப்படும்.

இ) மேற்படி தொகையுடன காப்புறுதி முதிர்ச்சி பெறும் தேதியில் அடிப்படையாக காப்புறுதி செய்த தொகை கொடுப்பனவுக்கு உரியதாகும்.

### நிரந்தரமான அரைகுறை ஊனம்

ஆயுட் காப்புறுதி செய்து கொண்டவர் விபத்தின் காரணமாக நிரந்தரமான அரைகுறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊனமாறினால் ஊனத்தின் தன்மையைப் பொறுத்து நிரந்தர அரைகுறை ஊனம் தொடர்பாகக் காப்புறுதி செய்யப்பெற்ற தொகையின் விகிதத் தொகை கொடுப்பனவுக்கு உரிய தாகும். இந்த அனுகூலத்தின் பிரகாரம் காப்புறுதி செய்யப்படும் தொகை முழுமை யான நிரந்தர ஊனம் தொடர்பான நலனுக்கு காப்புறுதி செய்யும் தொகையில் அரைவாசி யாக அமையும்.

(மேற் குறித்த மூன்று அனுகூலங்களினதும் மற்றொரு சிறப்பம்சம் காப்புறுதி செய்து கொண்டவர் 65 வயது வரை பயன் பெறுவார் என்பதாகும்)

## தீராத நோய்கள் (பயங்கர நோய்கள் தொடர்பான நலன்)

இந்த அனுகூலம் 21 வகையான பெரும் நோய்களின் பேரில் வழங்கப்படுகிறது. காப்புறுதி பெற்ற ஒருவர் பின்வருவனவற்றின் ஏதாவதொரு நோயின் நிமித்தமாக வாழ்க்கை போக்கில் மாற்றம் காரணமான வைத்திய செலவுகள், பராமரிப்பு கட்டணங்கள் மற்றும் ஏனைய செலவுகளை சமாளிப்பதற்கு வகை செய்கிறது.

1) புற்றுநோய் 2) இருதயநோய் 3) பாரிசவாதம் 4) சிறுநீரகக்கோளாறு 5) பார்வை இழப்பு 6) பிரதான உறுப்பு மாற்றுச் சிகிச்சை 7) சோர்வாதம் 8) செவிப்புலன் இழப்பு 9) அறிவிழந்த மயக்கநிலை 10) தீவிரசுவாசநோய் 11) தீவிர ஈரல் கோளாறு 12) எரிகாயங்கள் 13) இருதய வால்வு மாற்றுச்சிகிச்சை 14) இரத்த குழாய் சத்திர சிகிச்சை 15) செங்கைமாரி 16) இரத்த அழுத்த நோய் 17) பன்முக நரம்புக்கோளாறு 18 இரத்தகுழாய் மாற்று அறுவைச் சிகிச்சை 19) பேச்சுத்திறன் இழப்பு 20) தசைத் தளர்ச்சி 21) நோய் நிமித்தமான நிரந்தர ஊனம் இத் திட்டத்தின் பிரகாரம் காப்புறுதியாகும் தொகை பிரதான காப்புறுதியின் அடிப்படைத் தொகை அல்லது ஒரு மில்லியன் ஆகிய இரண்டில் குறைந்தது எதுவோ அதுவாக அமையும்.

காப்புறுதி செய்து கொண்டவர் பிரதான பயங்கர நோய் எதனாலும் பீடிக்கப்பட்டால் நிலையான ஒரு தொகையை உறுதிப்படுத்த வாய்ப்பளிக்கிறது.

## வைத்தியசாலைச் செலவு அனுகூலம்

விபத்து அல்லது நோய் காரணமாக வைத்திய சாலையில் தங்கியிருப்பதற்கான செலவுக்கு ஆதாரமாக இந்த அனுகூலம் அமைகிறது. ஒரு நாளைக்கு அதிக பட்ச தொகையான ரூ 2000/ உம் குறைந்தபட்ச தொகையாக ரூ 200 உம் அமையும் ஐ. சி. யூ எனும் தீவிர பராமரிப்பு பிரிவில் வைத்தியம் நடைபெற்றால், மேற்படி தொகை இருமடங்காக நடைபெறும். எந்த ஒரு வருடத்திலும் 365 நாளுக்கு இந்த அனுகூலம் வழங்கப்படும்.

## பென்சன் அனுகூலம்

இந்த அனுகூலத்தின் சிறப்பம்சம் ஆயுட் காப்புறுதி செய்து கொண்டவர் பிரதான காப்புறுதியின் பிரகாரம் ஆயுட் காப்புறுதி அனுகூலத்தைப் பெறும் அதே சமயத்தில் 55 அல்லது 60 வயதில் பென்சனும் வழங்கப் பெறுகிறார். என்பதாகும். இந்த பென்சன் ஆண்டு தோறும் 5% வட்டிக்கு வட்டியாக அதிகரித்து 10 வருடத்திற்கு நிட்சயமாகவும் அதன் பின்னர் ஆயுள் பரியந்தமாகவும் கொடுப்பனவிற்குரியதாகும். 18-50 வயதிற் கிடைப்பட்டோர் ஓய்வு பெறும் காலத்தில் கிரம மான பென்சன் கிடைக்கப் பெறும் பொருட்டு இந்த அனுகூலத்தை பயன் படுத்தலாம்.

## ஈமக்கிரியைச் செலவு அனுகூலம்

இதன் பிரகாரம் எக்காரணத்தினால் மரணம் சம்பவித்தாலும் ரூ 50,000/- வரையான தொகை அதிகபட்ச கொடுப்பனவாக வழங்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படும். இதன் நோக்கம் ஈமக்கிரியைகள் தொடர்பான அவசர தேவைகளை சமாளிப்பதாகும். இந்த திட்டத்தின்படி காப்புறுதி செய்யப் பெற்ற தொகை இறப்புச் சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட்ட உடனேயே வழங்கப்படும்.

## துணைவருக்குரிய காப்புறுதி

இத்திட்டம், ஆயுள் காப்புறுதி செய்து கொண்டவரின் துணைவருக்கும் ஆயுள் காப்புறுதி வழங்குகிறது. மேலதிகமாக பெறக் கூடிய இறப்பு அனுகூலம், பென்சன் அனுகூலம் ஆகியவற்றை தவிர மற்றெல்லா மேலதிக அனுகூலங்களையும் அவர் தம் ஆயுள் பெயரில் அனுபவிக்கலாம். துணைவருக்கான காப்புறுதி தொகை பிரதான ஆயுள் காப்புறுதியாளருக்கு உரியதாகும். இந்த அனுகூலத்தின் பிரகாரம் அடிப்படை காப்புறுதித் தொகையின் நான்கு (4) மடங்கு அல்லது 2000 மில்லியன் (2,000.000/-) ஆகிய இரண்டில் எது குறைவோ அந்த தொகையை பெறலாம். ஆயுள் காப்புறுதி செய்து கொண்ட கணவன் மனைவி இருவரும் இப்பயனைப் பெறலாம்.

## சிசுசெத: சிறுவர் நலன் காப்புறுதி திட்டம்

❖ காப்புறுதி கால முடிவில் காப்புறுதி முழுத் தொகையின் 275% மான மொத்த கொடுப்பனவு.

❖ காப்புறுதி கால முடிவின் பின்னர் பெற்றார் / பாதுகாவலருக்கான இலவச ஆயுள் காப்புறுதி.

❖ காப்புறுதியாளர் (சிறுவர் மருத்துவ மனையில் சேர்க்கப்படுமிடத்து ரூ 2000/- வரை நாட் கொடுப்பனவு (வருடத்தின் 365 நாட்களும் அடங்கும்)

❖ அவசர சிகிச்சை பிரிவு (ICU) இல் சேர்க்கப்படின் மேற்குறித்த தொகையின் இரட்டிப்பு.

❖ தனியார் மருத்துவ மனையில் சேர்க்கப்படின் &gh 50,000/- வரை பிரதிலாபம் (வருடம் ஒருமுறை)

❖ தவணை பண நிலுவை இலவசமாக்கப்படும் வாய்ப்பு, பெற்றார்/ பாதுகாவலர் பூரண நிரந்தர ஊனமடைந்தால் வழங்கப்படும்.

❖ மேலும் துணை காப்புறுதிகளான

1) மேலதிக ஆயுள் காப்புறுதி
2) திடீர் விபத்து காப்புறுதி
3) பூரண, நிரந்தர ஊன பிரதிலாபம்
4) நிரந்தர பகுதி ஊன பிரதிலாபம்
5) மருத்துவ மனைச் செலவு காப்புறுதி
6) ஓய்வூதியம்.

எங்கள் கூட்டுறவு காப்புறுதி கம்பனி உங்களுக்காக அறிமுகப்படுத்திய "சமகி" 2000 நினைவில் உள்ளதா.....

அதே தரத்துடன் மீண்டும் ஒருமுறை உங்கள் வாரிசின் நலன் கருதி "சிசுசெத" சிறுவர் நலன் திட்டம்.

## இதன் முக்கிய அம்சம் என்னவென்றால்?

இது ஒரு தனி ஆயுள் காப்புறுதியாகவோ இல்லை சமகி 2000த்துடனான துணைக் காப்புறுதி திட்டமாகவோ பெற்றுக் கொள்ள முடிவதே.

## இதன் முக்கிய இலாபம் என்ன?

சிறுவர்களின் எதிர்கால கல்வி தேவைக் கான க. பொ. த. சா/த, / க. பொ. த. உ/த. பல்கலைக்கழகம் மேற்படிப்பு என்பவற்றிட்கான நிதி உதவி வழங்குவதே ஆகும்.

## இத் திட்டம் யாருக்கு வடிவமைக் கப்பட்டது?

18-60 வரையான பெற்றார் / பாது காவலரால் வயது 0 முதல் 12 வரையான சிறுவர்களுக்கான நலன் திட்டமே இதுவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ✳ எப்போது எவ்வாறு "சிசுசெத" நிதி உதவி வழங்குகின்றது?

காப்புறுதியாளரின் (சிறுவர்களின்) 16, 17, 18, 19, 20 வயதுகளில் காப்புறுதி தொகையில் 20%மும், (சிறுவர்களின்) காப்புறுதியாளரின் 21, 22, 23, 24, 25 வயதுகளில் காப்புறுதி தொகையின் 15%மும் வழங்கப்படுகின்றது. மொத்தமாக நோக்கும் போது முழு காப்புறுதி தொகையின் 175% இவ்விதம் மீழப் பெறப்படுகிறது.

## பெற்றார் / பாதுகாவலரின் அகால மரணம் சம்பவிக்குமானால்?

இந்நிலையானது காப்புறுதி காலகட்டத் திற்குள் ஏற்படுமாயின் முழுக்காப்புறுதி தொகையானது காப்புறுதியாளருக்கு உடனடி யாக வழங்கப்படும். மேலும் எந்த தவணை அறவீடுமின்றி காப்புறுதியாளரின் 16 வயது வரை "சிசுசெத" நலன் திட்ட நடாத்தப்பட்டு சகல பிரதிலாபங்களும் வழங்கப்படும் அதே வேளை பெற்றார் / பாதுகாவலர் உயிரோடு இருப்பதனால் அவருக்கு இலவச (முழு கா / தி தொகைக்கு சமனான) ஆயுள் காப்புறுதி வழங்கப்படும்.

## திடீர் மருத்துவமனை செலவா:

திடீர் விபத்து / நோய் காரணமாக மருத்துவமனை செலவுகள் ஏற்பட்டால்... சொற்ப தொகை மேலதிக பணம் செலுத்தி மருத்துவமனை செலவு நிவாரணம் பெறலாம். இது நாளொன்றிட்கு ரூபா 2000/- வரையான தொகையை மருத்து மனையில் தங்கியிருந்த ஒவ்வொரு நாளுக்கும் (வருடத்தில் 365 நாளும்) வழங்கக் கூடியது. அதே நேரம் அவசர சிகிச்சை பிரிவு (ICU) இல் அனுமதிக்கபடின் இத் தொகை இரட்டிப்படைகிறது. மேலும் தனியார் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டால் ரூபா 50,000/- வரை மருத்துவ செலவிற்காக வருடத்திற்கு ஒருமுறை வழங்கப்படும். இப் பெரும் இலாபம் வேறு எந்த ஆயுள் காப்புறு தியிலும் இதற்கு முன் வழங்கப்படவில்லை.

## ஏனைய லாபங்கள்:

உயிர் வாழும் காலம் முழுவதும் பெற்றார் பாதுகாவலருக்கான ஆயுள் காப்புறுதி திடீர் விபத்துக் காப்புறுதி, கொடும் நோய் நிவாரண காப்புறுதி, பூரண நிரந்தர ஊனம் ஏற்பட்டால் தவணை பண நிவாரணம் மேலும் சிறுவர்களது அனைத்து கல்வி தேவைகளுக்கு மான நிதி உதவிகளும் வழங்கப்படுகிறது.

(இத்தனை நலன்களும் அடங்கிய சிசுசெத சிறுவர் நலன் திட்டம் பற்றிய மேலும் விபரங்களுக்கு அழையுங்கள் 507039, 556567)

## ✳ கூட்டுறவுக் காப்புறுதிக் கம்பனி யின் பொதுக் காப்புறுதித் திட்டங்கள்:

*1. தீ விபத்துக் காப்புறுதி:*

✳ வியாபார இடையூறு
✳ நிர்மாணிப்புச் சார்ந்த அபாயங்கள்
✳ வர்த்தக ஆதனங்கள்
✳ ஹெட்டேல் உரிமையாளர்களின் சகல அபாயங்களும்
✳ கொந்தராத்துகள் சார் அபாயங்கள்
✳ தனியார் குடி மனைகள்
✳ கணிப் பொறி சார் அபாயங்கள்
✳ இயந்திராதிகள் பழுதடைதல்

*2. பொதுவான விபத்து:*

✳ திருட்டு
✳ நம்பிக்கை பொறுப்பு உத்தரவாதம்
✳ சத்திர சிகிச்சை மற்றும் வைத்தியசாலை செலவுகள்
✳ தொழிலாளர் நட்ட ஈடு
✳ இடம் பெயரும் நட்ட ஈடு
✳ இடம் பெயரும் ரொக்க பணம்
✳ பொதுக் கடன்பாடு
✳ தனிப்பட்ட விபத்து

*3. கடல் சார் காப்புறுதி*

✳ கடல் வழி சரக்கு ஏற்றுமதிகள்
✳ அணியக் காப்புறுதி
✳ கடல் வழி சரக்கு இறக்குமதிகள்
✳ இடம் பெயரும் சரக்குகள்

*4. மோட்டார் காப்புறுதி*


✳ சகல வகையான மோட்டார் வாகனங்களினதும் காப்புறுதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# CICL STRUCTURE AND MANAGEMENT

## ORGANIZATION CHART OF THE CO-OPERATIVE INSURANCE COMPANY LIMITED




கு. கார்சினி
2004 வணிகப் பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் கொடுகடன் அட்டை

**அறிமுகம் :**

உலகம் முழுவதும் காணப்படும் தொழில் நுட்பவியல் மேம்பாடுகள் 1977ஆம் ஆண்டின் பின் பகுதியில் இருந்து தொடங்கப் பட்ட நிதியியல் துறை நடவடிக்கையின் படிப்படியான தளர்த்தல்கள் என்பவற்றை தொடர்ந்து இலங்கை மிகுந்த இயக்கத்தன்மை வாய்ந்தது புதுமை நிறைந்ததுமான வங்கி தொழிலை உருவாக்குவதற்காக பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. அத்தகைய நடவடிக்கைகளில் ஒன்றாக கொடுகடன் அட்டைகளின் நடைமுறைப் படுத்தல் விளங்கியதுடன் இது காசற்ற சமுதா யத்தை நோக்கி இலங்கை எடுத்து வைத்த முதலடியையும் இது குறிக்கின்றது.

**இலங்கையில் பயன்பாட்டில் உள்ள சில கொடுகடன் அட்டைகள்**

01) Cey Bank International Card
02) Peoples Card
03) Sampath Master Card
04) Cat Card
05) Own Card
06) Pay Phone Card
07) Petrol Card
08) Famer's Credit Card
09) Apsar Credit Card
10) Debit Card

இலங்கையில் முதற் தடவையாக கொடுகடன் அட்டை 1980இன் தொடக்கத்தில் "கோல்டன், ஜீ கிரடிட் காட்" தனியார் கம்பனி ஒன்றினால் அறிமுகப்படுத்தப்பட்டது. இவ் அட்டையின் வரையறுக்கப்பட்டளவிலான அங்கீகாரம் பிளாத்திக் பணத்தை பயன்படுத்து வதில் உள்ள நன்மைகளை இட்டு, வாடிக்கை யாளர்களையும் வணிகர்களையும் நம்பவைப் பதில் உள்ள இடர்பாடுகள் மற்றும் கொடுகடன் அட்டையின் பயன்பாடு பற்றி மக்களுக்கு போதியளவு அறிவின்மை என்பவற்றின் காரண மாக ஆரம்பத்தில் கொடுகடன் அட்டையின் பயன்பாடு வரையறுக்கப்பட்டிருந்தது. எனினும் கடந்த பல ஆண்டுகளாக அட்டையை ஏற்றுக் கொள்ளும் தன்மை அதிகரித்து விட்டதுடன் தற்போது 15000றக்கு மேற்பட்டோர் அட்டையை வைத்திருக்கின்றனர். வர்த்தக வங்கிகள் 80ஆம் ஆண்டு தொடக்கத்தில் பரந்தளவிலான வீச்சுக்களை கொடை புதிய நிதியியல் கருவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


களின் அறிமுகத்துடன் கொடுகடன் அட்டைகளை வழங்க தொடங்கின. இவை உள்ளூர் கொடுக்கல் வாங்கலுக்கு மட்டுமே ஆகும். 1994ஆம் ஆண்டு நடைமுறை கணக்கு தாராள மயமாக்கப்பட்டதன் காரணங்கள் வங்கிகள் உலகெங்கும் பெறக் கூடிய கொடுகடன் அட்டை அனுகூலம் பற்றிய அறிவு அதிகரித்து கொடுகடன் அட்டை பிரபல்யம் அடைந்தது.

இலங்கையில் தற்போது 6 உள்ளூர் வங்கியும் 3 வெளிநாட்டு வங்கியும் கொடுகடன் அட்டைகளை வழங்குகின்றன. கொடுகடன் அட்டைகளின் பயன்பாடு தனியார் துறை கொடுகடனின் விரைவான வளர்ச்சிக்கும் வழிவகுக்கும். மேலும், கொடுகடன் அட்டைப் பாவனை மூலம் பொது மக்களின் காசு உடமையில் ஏற்பட்ட வீழ்ச்சி பணப் பெருக்கி யையும் அதிகரிக்கக் கூடும். உலகின் பல நாடுகளிலும் இது ஏற்றுக் கொள்ளும் தன்மை காணப்படுவதால் மக்களது பெருமளவிலான வசதிகளை உறுதிப்படுத்துவதாக உள்ளது.

கடனட்டையை வழங்கும் நிறுவனங்கள் அனுமதிக்கும் சலுகைகள் அதிகரித்தமை யாலும், அவற்றின் விளம்பர பிரச்சார நடவடிக்கைகள் அதிகரித்தமையாலும் அண்மைக் காலத்தில் இவற்றின் பாவனை அதிகரித்துள்ளது. இலங்கையில் அரச வர்த்தக வங்கிகள் ஆன இலங்கை வங்கி, மக்கள் வங்கி என்பனவும், தனியார் வர்த்தக வங்கிகள் ஆன செலான் வங்கி, கொமஷல் வங்கி சம்பத் வங்கி என்பனவும் கொடுகடன் அட்டைகளை வழங்குகின்றன.

கடன் அட்டையை வழங்கும் நிறுவனம் ஆக CREDIT CARDS CENTRE ம், கடன் அட்டையின் உரிமை ஆளராக CREDIT CARDS HOLDER உம் கருதப்படும்.

## கொடுகடன் அட்டை பயன்படுத்தும் முறை




1) வாடிக்கையாளர் வங்கிக்கு பணம் செலுத்த வேண்டும்.
2) வங்கி Visa Card Center பணத்தை அனுப் பும்
3) வாடிக்கையாளர் பெயரில் Visa Card Center கணக்கொன்றை ஆரம்பிக்கும்.
4) வங்கி வாடிக்கையாளருக்கு கொடுகடன் அட்டையை வழங்கும்
5) வாடிக்கையாளர் கொடுகடன் அட்டையைப் பயன்படுத்தி பொருட்கள் கொள்வனவு செய்யலாம்.
6) வாடிக்கையாளர் கொள்வனவு செய்த பொருட்களின் பெறுமதியை 3 நாளிற்கு முன் வவுச்சர் வடிவில் சமர்ப்பித்தல்.
7) வங்கி அதன் பின்பு 15 நாட்களுக்குள் பணத்தை கடைக்கு செலுத்த வேண்டும்.
8) வாடிக்கையாளர் பொருட்களை கொடுப் பனவு செய்து 45 நாட்களில் பணத்தை Visa Card Centerக்கு செலுத்த வேண்டும்.
9) Visa Card Center வாடிக்கையாளருக்கு வைப்பு எடுப்பனவு பற்றிய விபரத்தை மாதம் ஒருமுறை அனுப்ப வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கொடுகடன் அட்டையை வைத்திருப்பவருக்கு வங்கி காப்புறுதிச் சேவையை வழங்குகின்றது. இவ் அட்டையை உடையவர் நேரடியாகச் சென்றே பொருட்கள் சேவையைக் கொள்வனவு செய்ய வேண்டும்.

- வியாபாரிக்கு வங்கி அல்லது கொடுகடன் அட்டை வழங்கும் நிறுவனங்கள் 2% தரகினை அறிவிடும்.

**முடிவுரை**

இலங்கையில் கொடுகடன் அட்டைப் பாவனை சாதாரண மக்களின் நுகர்வுத் தேவையை பூர்த்தி செய்வதில் இருந்து சர்வதேச வர்த்தக பயன்பாட்டு வரை உதவும் வகையில் உலகம் முழுவதும் பரவி உள்ளது. நுகர்வோருக்கும் பெரிதும் நன்மை பயக்கின்றது. தொழில் முன்னேற்றம் கண்டதும் இன்றைய அபிவிருத்திகளுடன் இணைந்து செல்லும் விதத்தில் மின்னியல் பண்பை அமைக்கக் கூடிய கொடுகடன் அட்டைப் பாவனை மிகவும் அதிகரித்து வருகின்றது.

**ஶ்ரீ. வனஜா**
2004 வர்த்தகம்

## நீயொட்ஷேயின் நிஜமொழிகள்

நம்பிக்கைகளுக்காக இல்லாமல் தீவிர ஆராய்ச்சிக்காகத் தன்னை நியமித்துக் கொண்டவன் எல்லா நம்பிக்கை வாதிகளையும் வெறும் கூச்சலிடுகின்றவர்கள் என்றும். தன் நம்பிக்கைகளை மற்றவர்கள் மீது திணிக்கின்றவர்கள் என்றும் தான் கருதிக் கொள்வான். அவர்களிடமிருந்து தன்னை பாதுகாத்துக் கொள்வதில்லை. எப்போதுமே எச்சரிக்கையாயிருப்பவன் அவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உற்பத்தி (PRODUCTION)

நடைமுறையில் மக்களின் பயன் பாட்டுக்கு பொருட்களும் சேவைகளும் பெருமள வில் வேண்டப்படுகின்றன. இத்தகைய பொருட் கள் சேவைகள் ஆகியவற்றை ஆக்கித்தரும் ஒரு கருமமே உற்பத்தி என வரையறுக்கப்படும். அதாவது நுகர்வோர் தேவையைத் திருப் திப் படுத்தக்கூடிய முறையில் தயார் செய் யப்பட்ட எதனையும் உற்பத்தி எனக் கொள்ள முடியும். மக்களின் தேவைக்கென ஆக்கம் செய்யப்படும் பொருட்களையும். சேவைகளையும், வளங்குகின்ற கைத் தொழிலை ஐந்து வகைக்குள்ளே அடக்கிக் கொள்ள முடியும்.

அவையாவன:

1) பிரித்தெடுத்தல் கைத்தொழில்
(Abstracticer Industry)

2) தயாரித்தல் கைத்தொழில்
(Manufacturing Industry)

3) நிர்மாணக் கைத்தொழில்
(Constructive Industry)

4) இனவிருத்திக் கைத்தொழில்
(Generative Industry)

5) சேவைக் கைத்தொழில்
(Service Industry)

பிரித்தெடுத்தல் கைத்தொழில் என்பது. இயற்கையின் உதவியுடன் நிலத்திலிருந்தும் அகழ்ந்தெடுக்கப்படுகின்ற உற்பத்திகளை அடக்குவதாகும். அரச நிறுவனங்களாலும் தனி யார் நிறுவனங்களாலும் இலங்கையில் மேற் கொள்ளப்படும் இக் கைத்தொழில் உற்பத்தி கள் ஒரு கணிசமான இடத்தைக் கொண்டுள் ளன. சுரங்கக் கைத்தொழில், காட்டு வளக் கைத்தொழில், மீன்பிடிக் கைத்தொழில் போன் றவை அகழ்தல் கைத்தொழிலுக்குள் அடங்கு வதனால் அரச இரத்தினக்கல் கூட்டு ஸ்தாபனம், இலங்கை மீன்பிடிக் கூட்டுஸ் தாபனம் போன்றவை பிரித்தெடுத்தல் ஈடுபட்டிருப்பவையாக கருதிக் கொள்ளப்படும்.

தயாரித்தல் கைத்தொழில் என்பது தொழிற்சாலையில் மேற்கொள்ளப்படும் உற் பத்திகளை குறிக்கும். தொழிற்சாலையில் மேற் கொள்ளப்படும் உற்பத்திகளை மேலும் 2 கைத் தொழில்களாக வகுத்துக் கொள்ள முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1) புரள்மானக் கைத்தொழில்
2) கோப்பு முறைக் கைத்தொழில் அல்லது இணைத்தல் கைத்தொழில்,

இதில் புரள்மானக் கைத்தொழில் என்பது நுகர்வோருக்கு பயன்படாது இருக்கும் மூலப்பொருட்களை அவர்களுக்கு பயனுள்ள முடிவுப் பொருட்களாக மாற்றிக் கொடுக்க உதவும். கைத்தொழிலைக் குறிக்கும். இத்தகைய கைத்தொழில் நடவடிக்கைகளில் இலங்கை சீமெந்து கூட்டுஸ்தாபனம், கடதாசி கூட்டுஸ்தாபனம் ஆகியவை ஈடுபட்டிருப்பதனைக் காணலாம். மாறாக கோப்பு முறைக் கைத்தொழில் என்பது பல்வேறு உதிரிப்பாகங்களை இணைத்து நடைபெறும் உற்பத்திகளை குறிப்பதாகும். இவை உதிரிப்பாகங்களை இணைப்பதே முடிவுப் பொருள் ஒன்றை ஆக்குவதனால் அவை கோப்புக் கைத் தொழிலாக இனம் காணப்படும். இதற்கென லங்கா அசோக் லேடன் LTD போன்ற நிறுவனங்கள் அரசாங்கத்தால் உருவாக்கப் பட்டிருப்பதுடன் பெருந்தொகையான தனியார் நிறுவனங்களும் பங்கு கொண்டுள்ளன.

உற்பத்தி முகாமையை பொறுத்தவரை தொழிற்சாலையில் இடம்பெறும் உற்பத்திகளே பிரதான இடத்தை வகிப்பதனால் கூடிய முக்கியத்துவத்தை தயாரித்தல் கைத்தொழிலே பெற்றுக் கொள்கின்றது.

நிர்மாணக் கைத்தொழில் என்பது நீண்டகால பாவனைக்குரிய பொருட்களை உற்பத்தி செய்கின்ற ஒரு கைத்தொழிலைக் கருதும். இவை அதிக பணச் செலவுடன் இடம் பெறுவது மட்டுமன்றி நீண்டகாலப் பாவனையை குறிக்கோளைக் கொண்டும் உற்பத்தி செய்யப் படும். கட்டிடங்கள், பாதைகள், பாலங்கள் இவற்றை அைப்பது தொடர்பான கைத் தொழிலே நிர்மாணக் கைத்தொழில் என்பர். இலங்கையைப் பொறுத்தவரை கட்டிடத் திணைக்களம், தெரு அபிவிருத்தி அதிகாரசபை போன்றவை நிர்மாணக் கைத்தொழிலை ஆக்கித் தருபவையாகும்.

இனவிருத்திக் கைத்தொழில் என்பது இனங்களை விருத்தி செய்வதுடன் குறிப்பாக கமத் தொழில் நடவடிக்கையுடன் சம்பந்தப்பட்ட ஒரு கைத்தொழிலைக் குறிக்கும். பறவைகள், செடிகள், மிருகங்கள் ஆகியவற்றின் உற்பத் தியை இனவிருத்திக் கைத்தொழில் எனக் கருதுவர். தற்காலத்திலே கமத்தொழில் நடவடிக்கையின் கீழ் இருந்த அநேக உற்பத் திகள் கைத்தொழில்களாக மாற்றம் பெறுவ தனால் அவற்றை இனவிருத்திக் கைத் தொழில் அடங்கியிருக்கும். இதன் அடிப்படையிலேயே மக்கள் பெருந்தோட்ட அபிவித்திச் சபை, நலன்புரிக் கூட்டுஸ்தாபனம் போன்றவை அரசாங்கத்தினால் அமைக்கப்பட்டுள்ளன.

சேவைக் கைத்தொழில் என்பது கண்ணுக்கு தெரியாத வகையில் மக்களுக்கு தேவைப்படும் சேவைகளை உற்பத்தி செய்வ தாகும். அவையாவன.

1) நேர் சேவை
2) நேரில் சேவை

குளிர் சாதனப் பெட்டியொன்றைக் கொள்வனவு செய்யும் போது, குளிச் சாதனப் பெட்டி மட்டுமல்லாது, பொருத்துதல், பேணு தல், உத்தரவாதம் செய்தல் போன்ற சேவை களையும் கொள்வனவு செய்ய வேண்டி யிருக்கும். பொருள் விற்பனையிலும் பார்க்க சேவைச் சந்தைப்படுத்தல் சவால்கள் நிறைந் தது. சேவை வழங்கு முன்னரே சேவை நலன் களை உறுதிப்படுத்தி நம்பவைத்தல் முடியாது. பொருட்களைப்போல் சேவைகள் கண்களுக்குப் புலப்படமாட்டாது தொட்டுணர முடியாது.

தொழிற்சாலையில் இடம் பெறுகின்ற உற்பத்திகள் உற்பத்தி முகாமையில் மேற் கொள்ளப்படுவதனால் அவை ஆற்றப்படுகின்ற வெவ்வேறு உ/தி முறைகளும் முக்கியம் பெறுகின்றது. இது நிறுவனங்களது விருப்பங் களுக்கு ஏற்ப தீர்மானிக்கப்பட்டு மேற்கொள் ளப்படும். எப்போதும் ஒரு நிறுவனம் எவ்வளவு தொகையான பொருட்களை உற்பத்தி செய்ய வேண்டும் என்ற அளவே (Quantity) உ/தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகையினை தீர்மானிக்கும் நடைமுறையிலே
1) வேலை உற்பத்தி (Unit Production)
2) தொகுதி உற்பத்தி (Batch Production)
3) பாய்ச்சல் உற்பத்தி (Flow Production)
4) குழுத் தொழில் நுட்பம் (Group Technology)

என உற்பத்தியை வரையறுக்கலாம்.

**வேலை உற்பத்தி** (Unit Production)

நுகர்வோரது விருப்பத்திற்கு ஏற்ப இடம் பெறும் உற்பத்திகள் வேலை உற்பத்தி என கொள்ளப்படுகின்றது. இங்கு மக்கள் கொண்டிருக்கும் அப்போதைய விருப்பங்களுக்கு ஏற்ப உற்பத்தி நடைபெறும். இதனால் ஒரு முறை ஆற்றப்பட வேண்டிய உற்பத்தி மீண்டும் ஆற றப்பட வேண்டும் என்ற அவசியம் இல்லை. வேலை உற்பத்தியைப் பொறுத்தவரை பொருத்தப்பட்டிருக்கும் இயந்திரங்களும் வேலைக் கமர்த்தப்பட்ட ஊழியர்களும் எல்லா வேலைகளையும் ஆற்றக் கூடியவர்களாக அமைதல் வேண்டும். இவ் வேலை உற்பத்தியில் ஈடுபடும் ஊழியர்கள் அதிநுட்பம் மிக்கவர்களாக இருத்தல் வேண்டும்.

**தொகுதி உற்பத்தி** (Batch Production)

ஒரு குறிப்பிட்ட தொகைப் பொருளை குறிப்பிட்ட நேரத்திலும் குறித்த இயந்திரத்திலும் உற்பத்தி செய்ய எடுக்கும் நடவடிக்கையே தொகுதி உற்பத்தியாகும். இது குறிப்பிட்ட உற்பத்திப் பொருள் ஒன்றை நிலையான அளவில் உற்பத்தி செய்வதனைக் காட்டும். இத் தொகுதி உற்பத்தியிலே முடிவுப் பொருட்களும் உதிரிப்பாகங்களும் உற்பத்தி செய்யப்பட முடியும். ஆனால் நடைபெறும் உற்பத்தி ஒரே முறையில் பெருந் தொகையாக அமைந்திருக்கும். வழமையிலே ஒரு நிறுவனத்திற்கு தேவையான உதிரிப்பாகங்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்களே தொகுதி உற்பத்தியைக் கைக்கொள்ளுகின்றன. இங்கு ஒரு தொகுதியில் எவ்வளவு பொருட்களை உற்பத்தி செய்வது என்பது அலகுச் செலவால் நிச்சயிக்கப்படும். இதன்படி ஒரே முறையில் எவ்வளவு பொருட்களை உ/தி செய்வது ஆகக் குறைந்த மொத்தச் செலவை அதாவது ஒரு அலகுக்கான செலவினத்தை ஏற்படுத்தும் என்பதனை கருத்திற்கொண்டே உற்பத்திக்கான தொகுதிகள் தீர்மானிக்கப்படும்.

**பாய்ச்சல் உற்பத்தி பேரளவு உற்பத்தி** (Flow or Mass Production)

ஒரு நிறுவனத்தினால் மேற்கொள்ளப் படும் இடைவிடாத உற்பத்தி முறையைக் காட்டுவதே பாய்ச்சல் உற்பத்தி ஆகும். இங்கு நுகர்வோரது அன்றாட பாவனைக்குத் தேவை யான பொருட்கள் உற்பத்தி செய்யப்படு வதனாலேயே இதனை தொடர் உற்பத்தி (Continuous Production) எனவும் கொள்வர். இங்கு பெருந்தொகையான இயந்திரங்களும் ஊழியர்களும் வேலைக்கென அமர்த்தப்பட்டிருப்பதுடன் தொழிற் பிரிப்பும் அறிமுகப்படுத் தப்பட்டு பேரளவாக உற்பத்தி நடைபெற்று வரும். இந்த உற்பத்தி முறையிலுள்ள மிகப் பிரதான குறைபாடு யாதெனில் ஒரு இயந்திரத் தில் பழுது ஏற்படும் பொழுது ஏனைய இயந்தி ரங்கள் உற்பத்தியை பாதிப்படையச் செய்யும்.

**குழுத் தொழில்நுட்பம்** (Group Technology)

இது இங்கிலாந்திலே அறிமுகப்படுத் தப்பட்ட ஒரு உற்பத்தி வகையாக காணப்படு கின்றது. ஒரே வகையான உற்பத்திகளை கூட்டமாக ஓரிடத்தில் வைத்து உற்பத்தி செய்வது இதன் நோக்கமாகும். இதற்கென இயந்திரங்களும், மூலப்பொருட்களும், தொழி லாளர்களும் கூட்டமாக ஓரிடத்திலே இணைக் கப்பட்டிருக்கும். ஒவ்வொரு தேவைக்குரிய உற் பத்திகளும் தனித்தனியாக ஆற்றப்படுவதனைத் தடைசெய்வதற்காகவே குழுத் தொழில்நுட்பம் அறிமுகப்படுத்திக் கொண்டு வரப்பட்டது.

பொதுவாக மனிதனது வாழ்க்கைக் காலத்தில் நுகரும் அனைத்து உற்பத்தி களையும் முதல் நிலை, இரண்டாம்நிலை, மூன்றாம்நிலை உற்பத்திகள் என்பவற்றுக்குள் உள்ளடக்கலாம்.

**கோவர்த்தனி சாம்பசிவம்**
2004 A/L Com "A"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திறைசேரி உண்டியல்

பணச் சந்தையில் காணப்படும் முக்கிய கருவிகளில் ஒன்றாக திறைசேரி உண்டியல் காணப்படுகிறது. அரச வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையினை ஈடு செய்வதற்காக உள நாட்டிலிருந்து கடனைப் பெற்றுக்கொள்ள பயன்படுத்தும் ஒரு குறுங்காலக் கருவியாக இது தொழிற்படுகின்றது. இவ்வுண்டியல் வெளி யிடுவது தொடர்பான சட்ட ஏற்பாடுகள் 1923ஆம் ஆண்டு 7ஆம் இலக்க திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டத்திற்கு அமைவாக இலங்கை அரசால் வெளியிடப்பட்டது. மத்திய வங்கி உருவாக்கப்பட்ட பின் 1953இல் இருந்து திறைசேரி உண்டியலை வெளியிடும் அதிகாரம் மத்திய வங்கிக்கு வழங்கப்பட்டது. அரசு குறுங்கால பாதீட்டுப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் திட்டமிட்ட செலவுகள் அதிகரிக்கும் போது வெளிநாட்டு உதவிகள் தடைப்படும் போதும் அல்லது தாமதம் அடையும் போதும் திறைசேரி உண்டியல் வெளியிடப்படுகின்றது.

திறைசேரி உண்டியல் ஒன்று வெளி யிடப்படுமிடத்து அந்த உண்டியல் எத்தொகை குறித்து வெளியிடப்பட்டதோ அத் தொகையை யும் அதன் மீதான வட்டியையும், சட்டத்தில் குறிப்பிடப்பட்ட விதிமுறைகள் என்பவற்றிற்கு ஏற்ப அதில் குறிப்பிடப்பட்டிருக்கும் திகதியில் அவ்வுண்டியலை விடுவித்துக் கொள்வதற்காக அதன் சார்பில் வைத்துக் கொள்ளப்பட்டிருக்கும் ஒரு பொருளின் பிரகாரம் பணம் செலுத்துவ தற்கு அரசாங்கம் பணத்தினை மீளச் செலுத் துவதற்கு கட்டுப்பாட்டினை கொண்டிருக்கும்.

திறைசேரி உண்டியலுக்கான கேள்வியை திறைசேரி உண்டியலுக்கான வட்டி வீதம், வர்த்தக வங்கிகள் செலுத்தும் வட்டி வீதம், பங்குச் சந்தையின் நிலையற்ற தன்மை, இரண்டாம் தரச் சந்தையின் கேள்வி போன்ற சூழ்நிலைகள் என்பன தீர்மானிக்கின்றன. திறை சேரி உண்டியலுக்கான சிறப்பம்சமாக பின்வருவனவற்றைக் கூறலாம்.

- ❋ இலங்கை அரசாங்கத்தின் சார்பில் இலங்கை மத்திய வங்கி பொதுமக்களுக்காக வெளி யிடும் ஓர் குறுங்கால கடன் கருவியாகும்.
- ❋ புறக்குறிப்பிட்டு ஒப்படைப்பதன் மூலம் ஒருவர் தன் வசமுள்ள திறைசேரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்டியலை மற்றொருவருக்கு கைமாற்றிக் கொடுக்கலாம். இதன் காரணமாக சந்தையில் இலகுவில் சந்தைப்படுத்தக்கூடிய கருவியாக இருந்து வருகிறது.

❋ இவ் உண்டியல் முத்திரை வரியில் இருந்து விலக்கு பெறுகின்றது.

❋ வட்டி வருமானத்தின் மீது பிடித்து வைத்தல் வரி அறவிடப்படுவதில்லை.

❋ திருப்பிச் செலுத்துதல் உரிய திகதியில் மத்திய வங்கியினால் நியமிக்கப்பட்ட முகவர்களினால் வழங்கப்படுகிறது.

❋ திறைசேரி உண்டியல் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்காக மத்திய வங்கி பொதுப்படுகடன் திணைக்களம் ஒன்றினை உருவாக்கி அதன் மூலம் மேற்கொள்கிறது.

❋ ஆரம்ப நிலை வணிகர்கள் மற்றும் உரிமம் பெற்றுள்ள நிறுவன முதலீட்டாளர்கள் மட்டும் இதற்கு விண்ணப்பிக்க முடியும். பொது மக்கள் தமக்கு தேவையான உண்டியல்களை முதன்னிலை வணிகர்களிடம் இருந்து கொள்வனவு செய்தல் வேண்டும்.

❋ ஏல விற்பனை முறையின் கீழ் விற்பனை செய்யப்படுகின்றது.

❋ திறைசேரி உண்டியலை அதே விலையில், கூடிய விலையில் அல்லது குறைந்த விலையில் பெற்றுக் கொள்ள முடியும்.

❋ கடன் சந்தை மற்றும் மூலதனச் சந்தை, இரண்டாந்தரச் சந்தைகளின் வளர்ச்சிக்கு துணைபுரிகின்றது.

❋ இத் திறைசேரி உண்டியலில் வங்கி, வங்கியல்லாத் துறை என்பன முதலீடு செய்கின்றன.

❋ திறைசேரி உண்டியலிற்காக உருவாக்கப்பட்ட நேர் மாற்று கொள்வனவு சந்தையில் வர்த்தக வங்கிகள் மட்டுமே ஈடுபடலாம்.

திறைசேரி உண்டியல்களின் முதிர்வு காலம் 3, 6, 12, 24 மாதங்களாகும். புறக்குறிப்பிடுவதன் மூலம் மற்றொருவருக்கு கைமாற்ற முடியும். கைமாற்றப்படும் போது புறக்குறிப்பிடுபவரின் ஒப்பம் வர்த்தக வங்கி ஒன்றினால் அல்லது முதனிலை வணிகரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

வட்டிக் கொடுப்பனவு மேற்கொள்ளப்படாது மத்திய வங்கியினால் ஏல விற்பனை மூலம் கழிவுடன் சேர்த்து விற்பனை செய்யப்படுகின்றன.

அரசாங்கத்தின் சார்பில் மத்திய வங்கி ஆரம்பச் சந்தையில் வெளியிடப்படுகிறது திறைசேரி உண்டியல்களில் விற்பனையாகாமல் எஞ்சி இருக்கும் உண்டியல்களின் பெறுமதிக்கு சமனாக மத்திய வங்கி கொள்வனவு செய்யப்படுகிறது.

திறைசேரி உண்டியல்கள் அரசாங்கத்தின் சார்பில் மத்திய வங்கியினால் வெளியிடப்படுவதனால் அவை எத்தகைய நட்ட அச்சத்தினையும் கொண்டிராது 100% நம்பகத் தன்மையுடையதாக காணப்படுகிறது.

இவற்றை அரசு வெயிடுவதால் பொது மக்களிடம் முடங்கியிருக்கும் பணத்தின் மூலம் அபிவிருத்திகளை மேற்கொள்ளல், முதலீடு அதிகரித்து வருமான மார்க்கங்கள் அதிகரிக்கும். பாதீட்டு பற்றாக்குறைக்கு நிதியீட்டம் செய்தல் போன்றன மூலம் பொருளாதாரத்திற்கு நன்மையைப் பெற்றுக் கொடுக்கிறது.

இலங்கையில் திறைசேரி உண்டியல் வெளியீட்டில் வளர்ச்சிப் போக்கினை நோக்கின் இலங்கை மத்திய வங்கி அரசாங்கத்தின் சார்பில் வெளியிடப்பட்ட முதலாவது திறைசேரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்டியல் 1953ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. 1981இல் திறைசேரி உண்டியலிலிருந்து இரண்டாந்தரச் சந்தை உருவாக்கப்பட்ட பின் இதன் விற்பனை அதிகரித்துக் காணப்பட்டது. 1986இல் முதலாம் தரச் சந்தையில் திறைசேரி உண்டியலிற்கான ஏலவிற்பைனை ஆரம்பிக்கப்பட்டது. 1992இல் திறைசேரி உண்டியலிற்கான முதலினை வணிகர்களை அறிமுகம் செய்யப்பட்டனர். இதே ஆண்டில் முதன் முதலாக 24 மாத கால உண்டியல் அறிமுகம் செய்யப்பட்டது. எனினும் குறைந்த கேள்வியில் இது இடை நிறுத்தப்பட்டது.

1993இல் திறைசேரி உண்டியலுக்கான மீள் கொள்வனவுச் சந்தை அறிமுகப்படுத் தப்பட்டது. 1994இல் திறைசேரி உண்டிய லிற்கான தடுத்து வைத்தல் நிராகரிக்கப்பட்டது. 1995இல் நேர்மாறிறு மீள் கொள்வனவு ஒப்பந்தம் இலங்கை மத்திய வங்கியால் அறிமுகம் செய்யப்பட்டது. இருந்தாலும் பல காரணங்களினால் இம் முறை நீக்கப்பட்டது.

தற்போது 3 வகையான நேர்மாற்று மீள் கொள்வனவு சந்தையே காணப்படுகின்றன.

1) இலங்கை மத்திய வங்கியுடனான நேர்மாற்று மீள் கொள்வனவுச் சந்தை
2) வங்கிகளுக்கிடையிலான நேர்மாற்று மீள் கொள்வனவுச் சந்தை.
3) வங்கிகளுக்கும் பொது மக்களுக்கும் இடையிலான நேர் மாற்று மீள் கொள்வனவுச் சந்தை

திறைசேரி உண்டியலுக்கான இரண்டாம் தரச் சந்தை உருவாக்கப்பட்டமையாலும் பல்வேறு முதிர்வு காலமுடைய உண்டியல்கள் அறிமுகப்படுத்தப்பட்டமையாலும் திறைசேரி உண்டியலுக்கான முதனிலை வணிகர்கள் உருவாக்கப்பட்டமையாலும் மக்கள் மத்தியில் இது பிரபல்யப்படுத்தப்பட்டது.

**கவிதா கனகசபாபதி**
2004 Com

---

மூன்று நாட்கள் விரதம் இருப்பதை விட
ஒரு நற்காரியம் செய்வது மேலானது

உனக்கு முழு நம்பிக்கை வந்து விட்டது என்றால்
முன் வைத்த காலை நீ பின் வைக்காதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்ட அறிக்கை தொடர்பான தகவல்கள்

இரண்டாயிரத்து இரண்டாம் ஆண்டு பங்குனி மாதம் நிதி அமைச்சர் சொக்ஸி தலைமையில் "பணவீக்கத்தை கட்டுப்படுத்தும் வழிமுறைகள் மூலம் பற்றாக்குறையை நிவர்த்திக்கும் திட்டம்'' என்ற முக்கிய குறிக்கோளுடன் முன்னைய ஆண்டு அறிக்கைகளைவிட வேறுபட்ட வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

இதில் பின்வரும் முக்கிய விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

- ❋ பொருட்கள் சேவைகள் வரி, தேசிய பாதுகாப்பு வரி நீக்கப்பட்டது.
- ❋ அரசாங்க முத்திரைத் தீர்வை முழுமையாக அகற்றப்பட்டது.
- ❋ இறக்குமதித் தீர்வை மேலதிக கட்டணம் 40% ஆனது 20% ஆக குறைக்கப்பட்டது.
- ❋ அதிகரித்த வதிவிட விசாநீக்கம்
- ❋ வெளிநாட்டில் தொழில்புரிவோருக்கான தீர்வை பற்றபடி அதிகரிப்பு
- ❋ அரசாங்க வீடுகளிற்கான வாடகை அதிகரிப்பு
- ❋ தனிப்பட்ட வருமானவரி விலக்களிப்பு 240,000/- ஆக அதிகரிப்பு.
- ❋ பழைய வாகன இறக்குமதிக்கு சலுகை தேய்மானம் 2.5% குறைப்பு.
- ❋ கம்பனி வரி முற்பணம் நீக்கம்
- ❋ சொத்து கைமாற்றல்வரி 100%ஆல் நீக்கம்
- ❋ பெறுமதி கூட்டல் வரி அறிமுகம்
- ❋ சூதாட்டத்திற்கு முற்பண தீர்வை ஆண்டொன்றுக்கு 12m
- ❋ பந்தயதிடலுக்கு ஆண்டுத் தீர்வை 500000/- கம்பனி வரி விதிப்புக்காக நிறுவனங்கள் 2 வகையாக பிரிக்கப்பட்டது.
- ❋ ஆடையொன்றிற்கு விற்பனை விலையில் 25/- கட்டணம் விதிக்கப்பட்டது.
- ❋ பங்கு இலாப வரி 10%ஆக மட்டுப்படுத்தப்பட்டது.
- ❋ ஏற்றுமதி இறக்குமதி உரிமங்களிற்கு கட்டணம்.
- ❋ ஏற்றுமதி கட்டுப்பாட்டு அனுமதிப்பத்திரத்திற்கு 100/- தீர்வை.

**மறு சீரமைப்பு நடவடிக்கைகள்:**

- ❋ பெற்றோலிய கூட்டுத்தாபனம் தனியார் மயமாக்கப்பட்டது.
- ❋ கலால் வரியமைப்பில் மாற்றம்
- ❋ ஓய்வூதியத்திற்கான ஊழிய பங்களிப்பு 8% அரச பங்களிப்பு 12%
- ❋ வரி நிர்வாகம் சீரமைப்பு
- ❋ ஆடைத் தொழிலிற்கு ஊக்குவிப்பு

**புதிய யோசனைகள்**

- ❋ தீர்வை ஆணைக்குழு உருவாக்கம்.
- ❋ கடன்வரி துறைமுக விமான நிலைய அபிவிருத்தி வரி அறிமுகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❋ நலன்புரி சட்டம் உருவாக்கம்.

❋ கறுப்பு பணத்தை கண்டுபிடித்து வரிவிதிக்க ஏற்பாடு.

## வரி விதித்தல்

கடந்த சில ஆண்டுகளில் மொத்த உள் நாட்டு உற்பத்தி விகிதம் உறுதியாக வீழ்ச்சி அடைந்துள்ளது. பெரும்பாலான சந்தர்பங்களில் அதே கொடுக்கல் வாங்கல்களுக்காக தேசிய பாதுகாப்புத் தீர்வை, GST, சுங்க தீர்வை முத்திரை தீர்வைகள் வருமானவரி போன்ற பலதரப்பட்டவரிகளை வரி செலுத்துவோர் எதிர் நோக்க வேண்டியிருக்கின்றது. இதற்கு மேலதிகமாக அவ்வப் போதைய கொள்கை வழிமுறைகளின் நடைமுறைப்படுத்தல், திட்டமிடப்படாத சலுகைகளும் விலக்களிப் புக்களும் வழங்கப்படல் ஆகியன வரி நிர்வா கத்தினை செயல் முறையில் சாத்திய மற்ற தாக்கி விடுகின்றன. வரிமுறை ஆனது அரசின் வருவாய் தேவைகளையும் எதிர்நோக்கத் தவறி உள்ளது.

2002ஆம் ஆண்டு மேற் கூறப்பட்ட வரிகளை நீக்குவதன் மூலம் வருவாய் இழப்பானதும் புதிதாக அறிமுகப் படுத்தி உள்ள "பெறுமதி கூட்டியவரி" (Valueadded tax) மூலம் ஈடு செய்யப்படுகின்றது. வருவாய் தளத்தினை வலுப்படுத்துவதற்காகவும், ஏனைய பல வரி களை நடைமுறை படுத்துவதற்கும் புதிய VAT முறையானது வரி இசைவை அதிகரிக்கச் செய்வதோடு வருவாயில் உறுதியான அதி கரிப்பு ஒன்றினையும் உறுதிப்படுத்தும்.

வலு, பெற்றோலியம், அத்தியாவசிய உண வுப் பொருட்கள், பசளை, மருந்தாககற் பொருட் களும், வைத்திய உபகரணங்கள், கைத் தொழில் விவசாய மற்றும் மீன்பிடி உபகர ணங்கள் என்பவற்றிற்கு தாழ்ந்த 10 % மும், ஏனைய பொருட்கள் சேவைகளிற்கு உயர்ந்த 20%மும் பிரயோகிக்கப்படும். 2002ஆம் ஆண்டு அரசிறையின் அதிகரிப்பு VAT யின் அறிமுகத்தின் மூலம் 3.5 Millon ஆக இருக்கும்.

## தீர்வை ஆணைக்குழு

கடந்த காலத்தில் பலதரப்பட்ட இறக்குமதி தீர்வைகள், கட்டணம் உரிமங்கள் மற்றும் நிர்வாகத் தேவைப்பாடுகள் என்பன எமது சர்வதேச போட்டித் தன்மையினை நலிவடைய செய்துள்ளதோடு எமது தொழில் முயற்சிகள் மூலதனம் மற்றும் மூலப்பொருட்களை செலுத்த இயலும் விலைகளில் பெற்று கொள்வதையும் தடை செய்துள்ளன. பெருமளவு போட்டித் தன்மை கொண்ட சுங்க முறை ஒன்றினை நிறுவுதற்கான நோக்கில் நிலுவைகளைப் பரிசீலனை செய்யும் நிறுவன ரீதியான பொறி முறை யொன்றாக 2002இல் நிரந்தர தீர்வை ஆணைக்குழு உருவாக்கப்பட்டுள்ளது. இது நிதி அமைச்சு, தொழில் முயற்சி அபிவிருத்தி கைத்தொழில் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு பிரதிநிதிகளை உள்ளடக்கி இருக் கும்.

## சுங்கத் தீர்வை:

தற்போது சுங்கத் தீர்வை ஆனது 40% இல் இருந்து 20% ஆக குறைக்கப்பட்டுள்ளது. இதனால் விலை அழுத்தம் இலகு படுத்தப்பட்டுள்ளது. விவசாய உற்பத்திக்கான அதி உயர் தீர்வைகளும், இறக்குமதி உரிமங்களும், பாதுகாப்பு வீதம் ஒன்றினால் மாற்றீடு செய்யப்படும். இது இறக்குமதிகளின் கொண்டு வரப்பட்ட செலவின் 60% சமனாக இருக்கும்.

பொதி அஞ்சல் மூலமாக இறக்குமதி செய்யப்படும் 10,000/- குறைவான பெறுமதி உடைய பொருட்களிற்கு பிரயோகிக்கப்படுகின்ற தீர்வைகள் கட்டணங்கள் நீக்கப்படும். பற்றிற்கு தற்காலிக வழிமுறை ஒன்றாக 0.1% இல் பற்று வரி அறிமுகப்படுத்தப்படும். இது 1950m உருவாக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## உற்பத்தி வரிகள்

தற்போதைய எமது உற்பத்தி தீர்வைகள் பலதரப்பட்ட நலிவுகளைக் கொண்டுள்ளது. இதற்காக பல்வேறு மாற்றங்கள் கொண்டு வரப்பட்டுள்ளது. கள்ளத்தனமான உற்பத்திக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரப்பட்டுள்ளது. இதன் மூலம் 400m கொண்ட மேலதிக வரியை உருவாக்கும்.

## வட்டி மீதான வரி

வருமானங்களின் ஏனைய மூலங்களைப் போலவே வட்டி வருவாய்களும் அதே உயர் வீதத்தில் வட்டி விதிப்பதைவிட வைப்புக் களிற்கு அவர்களினால் பெறப்பட்ட வட்டியின் மீதான வரியினைத் தாழ்த்துவதன் மூலம் சேமிப்புக் களை மேற்கொள்ளுவோருக்கு நன்மையை ஏற்படுத்த முடியும். வரி வீதமானம் 10% மட்டுமே அமைந்து வட்டிக் கொடுப்பனவின் போது வரவு அல்லது வட்டி வைக்கப்படும். ஆண்டொன் றிற்கு 6000/- அல்லது அதற்கு குறைவான வட்டி இந்த வரிக்கு தகைமை பெறாது.

## கலால் வரி சீர்திருத்தம்

தற்போது சுங்கத் திணைக்களத்தின் உற்பத்தி பிரிவும் கலால் திணைக்களமும் மற்றும் உற்பத்தி தீர்வைகளை கலால் நிர்வாகத்தினை இலகுபடுத்த பியர் மீதான 10% வரியும் வெறியக்குடிவகை மீதான 30% வரியும் அகற்றப்படும்.

## புதிய வருமானவரி ஏற்பாடுகள்

1 அனுமதித் தக்க செலவுகளும் விலக்களிப் புகளும்

**கழிக்கப்பட வேண்டிய செலவுகள்**

- தொட்டுணர முடியாத சொத்துகளின் செலவு
- பணிமனைகளை திருத்த வேலைகள்
- ஆராய்ச்சியும், அபிவிருத்தியும்
- அலுவலர் பயிற்சி
- வாணிபப் பயணம்
- களியாட்ட செலவுகள்
- கொடுப்பனவு செய்யத்தக்க தொகையினை அடிப்படையாக கொண்ட செலவுகள்.

## நேர்வரிச் சீர்திருத்தங்கள்

எமது நேர்வரி முறையானது சிக்கலானதும் அதி உயர் எல்லை வீதங்களின் பண்பையும் கொண்டதாகும். எமது நீண்டகால குறிக்கோள் நுகர்வோர் மீது சுமையை ஏற்படுத்தும் மறை முக வரியில் தங்கி இருப்பதைக் குறைக் கின்ற வேளையில் நியாயமான மட்டமொன்றின் நேர்வரிகள் மீது தங்கி இருத்தலை கிரமமாக அதிகரிப்பதாகும். இதற்காக வேண்டி நேர்வரி முறையினை இலகுபடுத்தி நேர் வரிகளத்தினை விரிவாக்குவதற்கு நோக்கம் கொண்ட சீர் திருத்தம் தற்போது அறிமுகப்படுத்தி உள்ளது.

## தனிப்பட்ட வருமான வரி

2002றகு முன் வரி செலுத்தும் அடி வரு மானம் 144000/- ஆகும். 2003ற்கான வரவு செலவு திட்டத்தில் தனிப்பட்ட வருமான வரியின் உச்ச வீதம் 35% - 25%ஆக குறைக் கப்படும். இவ் ஆண்டில் கடுமையான அரசி றைக் கட்டுப்பாடுகளின் காரணமாக தனிப்பட்ட வருமான வரியின் உச்ச வீதத்தை எம்மால் குறைப்பதற்கு இயலாது காணப்படுகின்றது. தற்போது அடிமட்ட ஆண் டொன்றிற்கு வரி விலக்களிப்பு 240000/-ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

| வரி அறவிடத்தக்க வருமானம் | | -வரி வீதம் |
|---|---|---|
| 1வது | 180 000/- | 10 % |
| அடுத்த | 180 000/- | 20 % |
| மேற்பட்ட வருமானம் | | 3.5 % |

***இந்த ஆண்டு மொத்த வருவாய் இழப்பு 1300m ஆக அமையும் இழைப்பாற்று நடவடிக்கைகள்:***

| | | |
|---|---|---|
| முதல் | 1000 000 | -0 % |
| அடுத்த | 500 000 | -5 % |
| அடுத்த | 500 000 | -10 % |
| எஞ்சிய தொகைக்கு | | -15% |

அமைய வழங்கப்படும்.

தற்போதைய வரவு செலவுத்திட்டத்திற்கு அமைய / அரசிறை மொத்த வருமானம் 27820 கோடி

அரசி மொத்த செலவீனம் - 41360 கோடி
துண்டு விழும் தொகை - 13540 கோடி
உத்தேச வரி மூலவருமானம் -23710 கோடி
வெளிநாட்டு நன்கொடை கடன் -750 கோடி

மேற் கூறப்பட்ட தகவல்கள் உறுதிப்படுத் தப்பட்டு முடிவு செய்யப்பட்டுள்ளது.

**Supanithy B.**
2003 A/L Com.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வறுமை

சமூகத்தினால் ஏற்றுக்கொள்ளக் கூடிய அளவிற்கு குறைந்தபட்ச வாழ்கைத் தரத்தினை பேண முடியாத நிலையினையே வறுமை எனப்படும். அதாவது அடிப்படை தேவைகளான உணவும், போசாக்கும், கல்வி, மருத்துவ சுகாதார வசதிகள், இருப்பிடவசதி என்பன பூர்த்தி செய்யப்படமுடியாத நிலமை யினை கருதும். எனவே அடிப்படை தேவை களைப் பூர்த்தி செய்யத் தேவைப்படும் குறைந்த பட்சவருமானத்தை கூடபெற்றுக் கொள்ள முடியாத நிலையினை இது புலப்படுத்துகின்றது. இதன்படி இலங்கையின் சனத் தொகையில் ஏறத்தாழ 20-30% வறுமை நிலவுகின்றது. இவ்வறுமை ஆனது 2 வகை யில் நோக்கப்படுகின்றது.

1) சார்பு வறுமை
2) முழு வறுமை

சார்பு வறுமை என்பது வெவ்வேறுபட்ட வருமானம் பெறும் பிரிவினர் என்ற அடிப் படையில் ஒப்பிட்டுக் கூறப்படுகின்ற வறுமை யினையே சார்பு வறுமை எனப்படுகின்றது. இங்கு மிக உயர்ந்த வருமானம் பெறும் பிரிவினருடன் மிக குறைந்த வருமானம் பெறும் பிரிவினரை ஒப்பிட்டு கூறும் வறுமை ஆகும்.

முழு வறுமை என்பது நிர்ணயிக்கப் பட்ட வறுமைக்கோட்டு வருமானத்தைவிட குறைந்த வருமானம் பெறுவோரின் நிலமை யினை ஒப்பிட்டுக்கூறும் வறுமையினையே முழு வறுமை எனப்படுகின்றது. அதாவது அடிப் படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான குறைந்தபட்ச வருமானத்தைவிட குறைந்த வருமானம் பெறுவோர் என்ற அடிப் படையில் குறிப்பிடப்படும் வறுமை ஆகும்.

## இலங்கையும் வறுமையும்

இலங்கையின் பொருளாதார அபிவிருத் திக்கு தடையாக உள்ள காரணி வறுமையே ஆகும். ஆனால் ஏனைய வளர்முக நாடுகளு டன் ஒப்பிடும் பொழுது இலங்கையில் சமூக நல குறிகாட்டிகள் முன்னேற்றகரமாக இருப்பத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னால் வறுமை நிலை சற்று குறைவாகவே உள்ளது. ஏனெனில் வறுமை குறிகாட்டிகளான கல்வி, மருத்துவ, சுகாதார வசதிகள், சிசு மரண வீதம், எதிர்பார்ப்பு ஆயுட்காலம், பௌதீக வாழ்க்கை பண்புச் சுட்டெண், மனித வள அபிவிருத்தி சுட்டெண் என்பன ஓரளவு சாதகமாகவே உள்ளது. இதற்குக் காரணம் ஆரம்ப காலம் தொடக்கம் அரசு சமூகநலன் மீது அதிக செலவினங்கள் மேற்கொண்டு வந்தமையே ஆகும்.

எனினும் இலங்கையில் வேலை இன்மை, வருமான பங்கீட்டு நிலை என்பன சற்று பாதகமாக உள்ளது. வருமான ஏற்றத் தாழ்வு, வேலையின்மை என்பன நீக்கப்படு மாயின் வறுமை நிலையும் குறைக்கப்படலாம். இலங்கையின் வறுமை நிலை 40%த்தில் இருந்து 20-25வரை குறைக்கப்பட்டுள்ளது.

வறுமை தணிப்புத் திட்டங்களாக

1) ஜனசவிய
2) சமுர்த்தி

போன்ற திட்டங்கள் காணப்படுகின்றன. இவை அண்மைக் காலத்தில் அறிமுகப்படுத்தப் பட்ட திட்டங்களாகும். இவை 1989ன் பின்னர் அறிமுகப்படுத்தப்பட்டன. வறியவர்களுக்கு உணவு உதவி வழங்குவதுடன் அவர்களின் உற்பத்தி ஆற்றலை விருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளை இத் திட்டங்கள் மேற் கொள்கின்றன. 2001ஆம் ஆண்டு தகவலின் படி மனித வறுமைச் சுட்டி 23%

## வறுமையைத் தோற்றுவிக்கும் காரணிகள்

1) பௌதீக உற்பத்திக்கான உற்பத்தி வளங் கள் இன்மை
2) உற்பத்திக்குத் தேவையான வசதிகள்
3) பொருளாதார வளர்ச்சி இன்மையால் வேலை வாய்ப்பு குறைவாக இருத்தல்
4) நிறைதொழில் மட்டத்தை அடைதல்.

**1. வறுமைக் கோட்டு வருமான மட்டம்**

வறுமைக்கோட்டு வருமானம் என்பது ஆகக் குறைந்த வருமான மட்டத்தைக் குறிக்கின்றது. 2002ஆம் ஆண்டின் மத்திய வங்கியின் தரவுகளின் படி 800 US $ ஆகக் காணப்படுகின்றது.

**2. உணவும் போசாக்கும்**

இது ஒரு நபர் உட்கொள்ள வேண்டிய கலோரியின் அளவினைக் குறிக்கின்றது. இது இலங்கையில் 2357 கலோரி அளவாக காணப் படுகின்றது.

**3. இருப்பிடவசதி**

வீடமைப்பு கடன், வீடமைப்புத் திட்டங் கள் போன்றவற்றை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் இருப்பிடவசதிக் குறையை நிவர்த்தி செய்து வருகின்றது. தனியாரும் வீடமைத்துக் கொடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**4. கல்வி அறிவு**

இலங்கையில் கல்வி கற்றோர் வீதம் ஏனைய வளர்முக நாடுகளுடன் ஒப்பிடும் போது உயர்வாகக் காணப்படுகின்றது. அபிவிருத்தி அடைந்த நாடுகளுடன் ஒப்பிடும் போதும் இலங்கை ஓரளவு முன்னணியில் உள்ளது.

**5. வேலையின்மை**

இலங்கையில் வேலையின்மை வீதம் மிக அதிகமாகக் காணப்படுகின்றது. இது ஏறக்குறைய 9.1%ஆகக் காணப்படுகின்றது.

**6. சிசுமரணம**

2002ஆம் ஆண்டு மத்திய வங்கியின் அறிக்கையின் படி 12.2% ஆகக் காணப்படுகின்றது. இது பிறக்கும் குழந்தை இறக்குமளவினை அடிப்படையாகக் கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. **வீட்டுத்துறையின் செலவில் உணவின் பங்கு உயர்வாக இருத்தல்**

மாணவர்களுக்கு இலவச மதிய போசனம் மற்றும் வீட்டுத்துறையினருக்கு நிவாரணங்கள் போன்றவற்றை வழங்குவதன் மூலம் வீட்டுத்துறையின் செலவில் உணவின் பங்கினை முக்கிய இடம் வகிக்க வைக்க அரசாங்கம் முயல்கின்றது.

## வறுமையின் குறிகாட்டிகள்

1) வறுமை கோட்டு வருமான மட்டம்
2) உணவும் போசாக்கும்
3) இருப்பிட வசதி
4) கல்வி அறிவு
5) வேலையின்மை
6) சிசு மரணம்
7) வீட்டுத்துறையினரின் செலவில் உணவின் பங்கு உயர்வாக இருக்கும்.

## வறுமையின் நச்சு வட்டம்:

வறுமையின் பிடிக்குள்ளிருந்து மீள முடியாதிருக்கும் தன்மையே வறுமையின் நச்சு வட்டமாகும். வருமானம் குறைவாக இருப்பதால் சேமிப்பு ஆற்றல் குறைவாக உள்ளது. இதனால் மூலதன ஆக்கம் குறைந்து முதலீடு குறைவாகும். இது உற்பத்தித்திறன் குறைவோடு வருமான குறைவுக்கும் வழிவகுக்கும்.

இலங்கையில் காணப்படும் வறுமையை நீக்க அரசாங்கம் சமூகநலச் செலவுகளை அதிகளவில் மேற்கொள்கின்றது. இலங்கையின் தலாவருமானம் 837US $ கொள்வனவு சக்திச் சமன்பாடு மூலம் 2797US $.

வேலையின்மை இலங்கையில் ஏறக்குறைய ஊழியப்படையில் 9.1% ஆகக் காணப்படுகின்றது. இதனை நீக்க அரசாங்கம் சிறிய நடுத்தரக் கைத்தொழில்களுக்கு ஊக்குவிப்பளித்தல் மற்றும் வசதிகளைச் செய்து கொடுப்பதன் மூலம் வேலையின்மையைக் குறைக்க நடவடிக்கை எடுக்கின்றது.

கல்வி அறிவு ஒப்பீட்டளவில் இலங்கையில் உயர்வாகக் காணப்படுகின்றது. 92% ஆகக் காணப்படுகின்றது. இதற்கு காரணம் அரசாங்கத்தின் இலவசக் கல்வியே ஆகும்.

இலங்கையில் வைத்திய வசதிகள் அதிகமாகக் காணப்படுகின்றது என்பதால் சிசு மரண வீதமும் ஒப்பீட்டளவில் குறைவாகக் காணப்படுகின்றது.

இலங்கையில் வறுமைக்கு அரசாங்கம் பல எதிர் நடவடிக்கைகள் மேற்கொள்வதால் ஏனைய அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுடன் ஒப்பிடும் போது இலங்கை சிறிது முன்னேற்றமடைந்து காணப்படுகிறது.

உசாத்துணை நூல்
**மாணிக்கம் லோகசிங்கம்**
இலங்கை பொருளாதாரம்
2002ஆம் ஆண்டு
மத்திய வங்கி அறிக்கை.

**ஸ்ரீ. வனஜா**
13A Com

கல்வியால், பணத்தால் மட்டும் உயர்வது போதாது
உள்ளத்தாலும் உயர வேண்டும்.

எமது உடலுறுப்புக்களில் மிகவும் கெட்ட உறுப்பு நாக்கு. நாக்கைக் கவனமாக உபயோகிக்க கற்றுக்கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டுப்பாட்டுக் கணக்கு

பேரேடுகள் பிரிபடும் போது அவற்றுக் கிடையான பதிவும் பிரிபடுகின்றன. எனவே அப்பேரேடுகளிற்கிடையில் ஓர் இணக்கத் தன்மையினை ஏற்படுத்துமுகமாக தயாரிக்கப் படும் மொத்த கணக்குகளே கட்டுப்பாட்டுக் கணக்காகும்.

மிக பெரிய வியாபார நிறுவனத்தில் நாளாந்தம் அதிகளவான வியாபார கொடுக்கல் வாங்கல் இடம் பெறுவதால் கணக்கியல் வேலைகளை இலகுவாகவும் விரைவாகவும் எண் கணித பிழையின்றியும் மேற்கொள்ளும் நோக்குடன் பேரேடானது பின்வரும் 3 வகை யாக பாகுபடுத்தி பதிவுகள் மேற்கொள்ளப் படுகின்றன.

**1) விற்பனை பேரேடு**

கடன்பட்டோர் கணக்குகளை மட்டும் கொண்டமைந்த பேரேடு விற்பனை பேரேடாகும்.

Eg:- A கணக்கு
ரமேஸ் கணக்கு

**2) கொள்வனவுபேரேடு**

கடன் கொடுத்தோர் கணக்குகளை மட்டும் கொண்ட பேரேடு கொள்வனவு பேரேடாகும்.

Eg:- கணக்கு
மாறன் கணக்கு

**3) பொது பேரேடு**

கடன்பட்டோர், கடன்கொடுத்தோர் கணக்கு தவிர்ந்த ஏனைய அனைத்து கணக்குகளும் கொண்டமைந்த பேரேடு இதுவாகும்.

Eg:- சம்பளக் கணக்கு
வாடகைக் கணக்கு

இக் கட்டுப்பாட்டு கணக்கினை தயாரிப்பதற்கு தேவையான அனைத்து தகவலும் முதல் பதிவேட்டிலிருந்து பெற்றுக்கொள்ளப் படும். மேலும் இக் கட்டுப்பாட்டு கணக்கில் இடம்பெறும் பதிவு அனைத்தும் மொத்தமாகப் பதியப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கட்டுப்பாட்டின் கணக்கின் வகைகள்:**

1) பொதுப் பேரேட்டில்
கடன்பட்டோர் பேரேட்டு கட்டுப்பாட்டு க/கு
கடன் பேரேட்டு கட்டுப்பாட்டுக் கணக்கு

2) விற்பனை பேரேட்டில் பொதுப் பேரேட்டு கட்டுப்பாட்டு க/ கு
3) கொள்வனவு பேரேட்டில் பொதுப் பேரேட்டு கட்டுபாட்டு க/ கு

**பொது பேரேட்டு கட்டுப்பாட்டு க / கு**

பொது பேரேட்டில் காணப்படும் தக வல்களைக் கொண்டு ஓர் பரீட்சை மீதி தயாரிக்கப்படுமாயின் அங்கு பிரதானமாக 2 கணக்கு மீதி காணப்படமாட்டாது.

1) கடன் படுநர் க / கு மீதி
2) கடன் கொடுநர் க / கு மீதி

எனவே இவ் இரண்டு கணக்கு மீதிகளையும் கண்டுகொள்ளும் நோக்குடன்

2 மொத்த கணக்கு தயாரிக்கப்படும்
1) கடன் பட்டோர் கட்டுப்பாட்டு க / கு
2) கடன் கொடுநர் கட்டுப்பாட்டு க / கு

**கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு செலவு மீதியாகவரும் சந்தர்ப்பங்கள்**

1) பெறப்படவேண்டிய தொகையிலும் கூடுதலாக பணம் பெறப்பட்டிருப்பின்

2) முற்பணமாக பணம் பெறப்பட்டிருப்பின்

3) கணக்கினை முற்றாக தீர்த்தபின் பொருட்களை உட்திருப்பம் செய்யப்பட்டிருப் பின்

**கடன்பட்டோர் கட்டுப்பாட்டு கணக்கு**

| | | | | |
|---|---|---|---|---|
| மீ / வ | xxx | | மீ / வ | xxx |
| கடன் விற்பனை | xx | | பெற்றகாசு | xx |
| மறுக்கப்பட்ட உண்டியல் | xx | | வருமதி உண்டியல் | xx |
| மறுக்கப்பட்ட காசோலை | xx | | அறவிடமுடியாகடன் | xx |
| விதித்தவட்டி | xx | | உட்திரும்பல் | xx |
| ரத்துசெய்த கழிவு | xx | | கொடுத்தகழிவு | xx |
| மீளபெற்ற அறிவிடமுடியாக்கடன் | xx | | ரத்துசெய்த வட்டி | xx |
| திருப்பிச் செலுத்தியகாசு | xx | | மீ. பெற்ற அ. மு.கடன் | xx |
| மீ / செ | xx | | எதிரீடு | xx |
| | | | மீ / செ | xx |
| | xxxx | | | xxxx |
| மீ / வ | xx | | மீ / வ | xx |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடன் கொடுநர் கட்டுப்பாட்டு க / கு

| | | | |
|---|---|---|---|
| மீ / வ | xxx | மீ / வ | xxx |
| கொடுத்த காசு | xx | மறுக்கப்பட்ட சென்மதி உண்டியல் | xx |
| கொடுத்த காசோலை | xx | மறுக்கப்பட்ட கொடுத்த காசோலை | xx |
| பெற்ற கழிவு | xx | கொடுத்த வட்டி | xx |
| வெளிதிரும்பல் | xx | மீளபெற்ற காசு | xx |
| சென்மதி உண்டியல் | xx | கடன்கொள்வனவு | xx |
| ரத்து செய்த வட்டி | xx | ரத்துசெய்த கழிவு | xx |
| எதிரீடு | xx | மீ / செ | xx |
| மீ / செ | xx | | |
| | xxxx | | xxxx |
| மீ / வ | xx | மீ / வ | xx |

**கடன் கொடுநர் கட்டுப்பாட்டு கணக்கு மீதி வரவு மீதியாக வரும்சந்தர்ப்பம்**

1) செலுத்த வேண்டிய தொகையிலும் கூடுதலாக பணம் செலுத்தப்பட்டிருப்பின்
2) முற் பணமாக பணம் செலுத்தப்பட்டிருப்பின்
3) கணக்கினை முற்றாக தீர்த்த பின் பொருட்களை வெளித் திருப்பம் செய்யப்பட்டிருப்பின்

பாரிய நிறுவனங்களில் கட்டுப்பாட்டுக் கணக்கைப் பேணும் முறை தற்போதும் நடைமுறை யில் உள்ளது.

**ஸ்ரீ ஜனனி**
2004 வணிகப்பிரிவு

சிந்திக்காமல் படிப்பது வீண், படிக்காமல் சிந்திப்பது ஆபத்தானது
— கன்பூசியஸ் —

அறிவுக்கு முற்றுப்புள்ளி வைக்காதே நீ சாகும் வரைக்கும் உன் அறிவுக்கு கதவு திறந்தே இருக்கட்டும்
— ராஜாகி —

சுதந்திரமாகப் பிறந்த மனிதன் எங்கெங்கு நோக்கினும் சங்கிலிகளால் தளைபிடப்பட்டிருக்கின்றான்
— ரூஸோ —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணக்கீட்டு அலகொன்றில் செல்வாக்குச் செலுத்தும் சூழற் காரணிகள்

நிறுவனம் ஒன்றின் வெற்றியானது அந் நிறுவனத்தை சூழவுள்ள சூழற் காரணிகளால் நிர்மானிக்கப்படுகின்றன. எனவே எந்த வகை யான நிறுவனத்தையும் சிறப்புற நடத்துவதற்கு அடிப்படையான சூழல் வணிகச் சூழல் எனப்படும்.

நிறுவனத்திற்கு வியாபார நடவடிக்கை பிரதான நடவடிக்கையாகும். எனவே இவ் வியாபார நடவடிக்கையை உயர்ந்த நிலையில் வைத்திருப்பதற்கு இவ் வணிகச் சூழலைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சியால் மக்களின் வருமானம் உயர்வடைந்து அதனூ டாக விற்பனை வருமானம் அதிகரிக்கும். நிறுவன முகாமை சிறப்பாகத் திட்டமிட்டு தீர்மான நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்த வேண்டும். இவ்வாறு நிறுவனம் வெற்றியுடன் செயற்பட தொடர்புறும் நிறுவனம் யாவும் வணி கச் சூழலாகும்.

இவ் வணிகச் சூழல் 02 வகைப்படும்

- **அகச் சூழல் or, சிற்றினச் சூழல்**
- **புறச் சூழல் or, பேரினச் சூழல்**

அகச் சூழல் என்பது நிறுவனத்தால் கட்டுப்படுத்தக் கூடியதும் நிறுவனத்தைக் கட்டுப்படுத்தக் கூடியதுமான சூழலாகும். இவற்றுள்,

**முகாமையாளர்**
**உரிமையாளர்**
**ஊழியர்**
**வாடிக்கையாளர்**
**போன்ற காரணிகளுள்ளன.**

புறச் சூழல் என்பது நிறுவனத்தால் கட்டுப்படுத்த முடியாததும் நிறுவனத்தை கட்டுப்படுத்தக் கூடியதுமான சூழலாகும். இவற்றுள்

**பொருளாதார சூழல்**
**சமூக கலாசாரச் சூழல்**
**அரசியல் சட்டச் சூழல்**
**தொழில் நுட்பச் சூழல்**
**பூகோள சூழல்**
**சமூக சூழல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற காரணிகளும் காணப்படுகின்றன. இதனைப் போன்று நிறுவனத்தில் அகச் சூழல் புறச் சூழல் முக்கியத்துவம் பெறுவது போல மாற்றங்களையும் பேண வேண்டியுள்ளது. நிறுவனத்தின் புறச் சூழலை அவதானிக்கும் போது பல்வேறு மாற்றங்கள் உள்ளடக்கப்படுகின்றது. அவையாவன,

## பொருளாதாரச் சூழல் அல்லது பொருளியல்ச் சூழல்:


வணிக நடவடிக்கை சம்பந்தமான தீர்மானங்களை மேற் கொள்ளவும் நாட்டின் பொருளாதாரக் கொள்கைக்கு ஏற்ப வணிக முயற்சிகளை விரிவுபடுத்திக் கொள்ளவும் இவ் பொருளாதர சூழற் காரணி முக்கியமானதாகக் காணப்படுகின்றது. இவற்றுள் தேசிய உற்பத்தி, செலாவணி விகிதம், விலைமட்டம், வருமானப் பரம்பல், சம்பளமட்டம், முதலீடு, சேமிப்பு ஆகியன வணிக முயற்சிகளைத் தீர்மானிக்கின்றன.

***சம்பள மட்டம்:-*** உற்பத்திக்கு வழங்கப்படும் ஊழியம் ஆகும்.

***செலாவணி விகிதம்:-*** ஒரு நாட்டின் நாணயத்தை இன்னொரு நாட்டின் வடிவில் கூறுதலாகும்.

***கடன் வட்டி:-*** நிறுவனம் கடனுக்கு வழங்கும் வட்டியாகும்.


போன்றவைகளே வியாபாரத்தில் மாற்றம் அடையச் செய்கிறது. இவற்றை விளக்கப் படம் மூலம் காட்டுதல்:




**சமூக கலாச்சாரச் சூழல்:-** ஒவ்வொரு மனிதனும் வாழும் சமூகம் கொண்டுள்ள மாற்றங்கள் அதாவது சமூக கலாசாரத்தில் ஏற்படக் கூடிய மாற்றங்கள் கருத்தில் கொள்ளப்பட்டு அதற்கேற்ற வகையில் வியாபார நடவடிக்கைகளை திட்டமிட்டுக் கொள்ளல் வேண்டும்.

மாற்றங்கள் எனும் போது குடித்தொகையமைப்பு, வாழ்க்கைமுறை, சமய ஒழுங்கமைப்பு, மக்களின் மனப்பாங்கு, வெளிநாட்டு சமூக அமைப்புக்கள், கல்வி போன்ற செயற்பாடுகளில் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

இச் சூழல் காரணிகள் மாற்றமடைவதை விளக்கப்படம் மூலம் காட்டுதல்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


**அரசியல் சட்டச் சூழல்:-** நாட்டின் அரசியல் மாற்றங்களுக்கேற்ப அமையும் கொள்கைகள் ஒவ்வொரு நிறுவனத்தின் மீதும் நேரடியாகவோ அன்றி மறைமுகமாகவோ செல்வாக்குச் செலுத்துகின்றன. இவ் அரசி யல்ச் சட்டச் சூழலானது:-

**சர்வதேச சட்ட திட்டம்**
**உள்நாட்டுத் திட்டம்**
**அரச கொள்கை**

அரச அமைப்புப் போன்ற நடவடிக்கை யினூடாக ஓர் வாணிப நடவடிக்கையில் நுகர் வோரைப் பாதுகாத்தல் வணிக முயற்சி பாதுகாப்பு, சமூக பாதுகாப்பு போன்றன அரசின் பிரதான நோக்கங்களாகக் காணப்பட்டாலும் கூட வணிகத்தில் உற்பத்தி நியமம் வகுத்தல்.


**நியாயமான விலை**
**வரிக் கொள்கை**
**நிறுத்தல், அளத்தல், தரநிர்ணயம்**

உணவுப் பொருட்கள் போன்றவற்றி னைக் குறிப்பிட்டுக் கொள்ளலாம். இவற்றை விளக்கப்படம் மூலம் காட்டின்.




**புவியியற் சூழல்:-** வணிக முயற்சி யொன்றிக்கு அமைவிடம் பிரதானமானது. அந்த வகையில் காலநிலை, அமைவிடம், வளம் போன்றன முக்கியம் பெறுகின்றன. இச் சூழல்க் காரணிகளால் நிறுவனங்கள் குறித்த ஓர் இடத்தில் செறிந்தும் அல்லது பரவலாகவும் காணப்படுகின்றன. இதனூடாக பிரதேச ரீதியான சிறப்புத் தேர்ச்சிகள் போன்ற செயற்பாடுகள் வெற்றியளிக்கின்றன. மற்றும் சூழல் மாசடைதலும் புவியியல்ச் சூழலினுள் அடங்கும்.

இவற்றை விளக்கப்படம் மூலம் காட்டின்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தொழில் நுட்பச் சூழல்:-** விஞ்ஞான தொழில் நுட்பச் சூழலினால் வணிக நடவடிக் கைகள் வளர்ச்சியடைந்து வருகின்றன. இந்த வகையில் கைத்தொழில் பாரிய இயந்திர தொழிற்சாலைகள் ஆகவும் குடிசைக் கைத தொழில் பேரளவுக் கைத்தொழிலாகவும் வளர்ச்சியடைந்து வருவதற்கு இவ் தொழில் நுட்பச் சூழல் முக்கியமானது.

தொழில் நுட்பச் சூழலாக நவீன பொறிகளின் ஆறிமுகம். கணணி முறை, முறைமை மாற்றம், நவீன தொழில் நுட்பம், விஞ்ஞான அறிவு வளர்ச்சி, புதிய கண்டு பிடிப்பு என்பவற்றின் மூலம் வணிக செயற் பாடுகளில் தாக்கங்கள் ஏற்படுகின்றன.

இவ் விஞ்ஞான தொழில்நுட்ப சூழல் மாற்றங்களினால் அண்மையில் தொடர்பாடல், போக்குவரத்து, வைத்தியம், எண்சார் கணனித் தொழில் நுட்பம் என்பன அபிவிருத்தி கண்டுள் ளன.


இவற்றை விளக்கப் படம் மூலம் காட்டின்




**சமூக சூழல்:-** குடித்தொகை, குடித்தொகை வளர்ச்சி, ஆண், பெண், கட்டமைப்பு ஆகிய குடித்தொகைக் காரணிகள் வியாபாரம் மீது தாக்கம் ஏற்படுத்தும். இவ்வாறான ஓர் நடவடிக்கை சமூக சூழலாகக் கருதப்படும்.

வணிகத்தினூடாக உற்பத்தி செய்யப் படும் பண்டங்கள் மக்களுக்கு விற்பனை செய்யப்படும் பொழுது மக்களின் வளர்ச்சி, பரம்பல், இன ரீதியான வேறுபாடு, கல்வித் தரம் போன்றவற்றில் நம்பிக்கைத் தன்மை கொண்டு காணப்படுதல் வேண்டும்.

நிறுவனத்தின் இலாபம், நட்டம் மேற் கூறப்பட்ட குடித்தொகைக் காரணிகள் மூலம் தீர்மானிக்கப்படுகின்றது. ஓர் வாணிபச் சூழலை சமூக சூழலாக மாற்ற முடியாது. ஆனால் சமூக சூழலுக்கேற்ப வணிகமுயற்சி மாற்றமும் இவற்றை விளக்கப்படம் மூலம் காட்டின்




இவ் வகையான புறச் சூழல்க் காரணிகளே தற்கால உலகில் பாரிய மாற்றத்திற்கு உள்ளாக்கப்படுகின்றது.

சு. சுமணா
2004 Com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனி வியாபாரத்தை விட பங்குடமையில் மேலதிகமாகத் தயாரிக்கப்படும் கணக்குகள்

பங்குடமை என்பது இரண்டுக்கு மேற் பட்டோர் ஒன்று சேர்ந்து இலாபம் ஈட்டும் நோக் குடன் ஆரம்பிக்கின்ற ஒரு வியாபார முயற் சியாகும். இதனை 1890ம் ஆண்டு பங்குடமை சட்டத்திற்கமைய லாப நோக்குடன் ஏதாவது முயற்சியொன்றில் ஈடுபடக் கூடிய நபர்களுக் கிடையேயான உறவு பங்குடமை எனப்படும்.

இப் பங்குடமையானது பங்காளர்களுக் கிடையேயான ஒப்பந்தத்தின் படி அல்லது பங்குடைமை சட்டப்படி ஆரம்பிக்கப்படலாம். ஒப்பந்தமானது எழுத்து மூலம் வாய்மொழி மூலம் நடத்தை மூலம், ஏற்படுத்திக் கொள்ளப்படலாம்.

**பங்குடமை ஒப்பந்தமொன்றில் உள்ள டக்கப்பட வேண்டியவை**

- ♣ மூலதனத்தில் பங்களிக்க கூடிய ஒழுங்கு என்ன?
- ♣ மூலதனத்திற்கு வட்டி செலுத்தப்படுமா? ஆண்டுக்கான வட்டி வீதம் எவ்வளவு
- ♣ முகாமையில் பங்கு கொள்ளும் பங்காளர் களுக்கு மாதச் சம்பளம் வழங்க வேண் டுமா? எவ்வளவு?
- ♣ பற்றுக்கு வட்டி அறவிடப்பட வேண்டுமாயின் எவ்வளவு?
- ♣ நடைமுறை கணக்கின் வரவு மீதிக்கு வட்டி அறிவிடுவதாயின் வட்டி வீதம் எவ்வளவு?
- ♣ நடைமுறை கணக்கின் செலவு மீதிக்கு வட்டி வழங்குவதாயின் அதன் வீதம்?

**கணக்கீட்டில் செல்வாக்குச் செலுத்தும் பங்குடைமை சட்டங்களின் பிரிவுகள்**

1890ம் ஆண்டு பங்குடமைச் சட்டம்

1) 1890ஆம் ஆண்டு 24ஆம் பிரிவுச் சட்டம்
2) 1890ஆம் ஆண்டு 42ஆம் பிரிவுச் சட்டம்
   1890ஆம் ஆண்டு 44ஆம் பிரிவுச் சட்டம்

**காணர் எதிர் மறே வழக்குத் தீர்ப்பு**

1890ஆம் 24ஆம் பிரிவு:

- ♣ இலாப நட்டம் சமமாக பங்கிட்டுக் கொள்ள வும் மூலதனம் சமமாகப் பங்கிட்டுக் கொள் ளவும் பங்காளருக்கு உரிமையுண்டு
- ♣ மூலதனத்திற்கு வட்டி இல்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ♣ பங்காளர் கடனுக்கு 5% வட்டியுண்டு
- ♣ பங்குடைமையின் முகாமை நடவடிக்கையில் அனைவரும் பங்கு பெற உரிமையுண்டு. ஆனால் சம்பளம் பெற முடியாது.
- ♣ தனிப்பட்ட தேவைக்கு பங்காளர் காசு, சரக்கு எடுத்திருப்பின் வட்டி அறவிடப்பட மாட்டாது.
- ♣ அனைத்து பங்காளிகளின் சம்மதம் இல்லாது புதிய பங்காளியை சேர்க்க முடியாது.

**1890ஆம் ஆண்டு 42ஆம் பிரிவு:**

விலகிய பங்காளரின் பங்குடமைக்கு விடும் கடன் தொகைக்கு வருடாந்தம் 5% வட்டி வழங்கப்பட வேண்டுமென்பதே இச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**1890ஆம் ஆண்டு 44ஆம் பிரிவு:**

பங்காளர் தமது மூலதனத் தொகைக்கு மேலதிகமான தொகையை பங்குடமைக்கு வழங்கினால் அதன் மீது வருடாந்தம் 5% வட்டி வழங்கப்படுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

**காணர் எதிர் மறே தீர்ப்பு:**

காணர் எதிர் மறே வழக்குத் தீர்ப்பின் கீழ் முறிவடைந்த பங்காளரின் நட்டத் தொகையை மூலதன விகிதப்படி ஏனைய பங்காளர்கள் பகிர்ந்து அளிக்க வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது.

- ✱ மூலதனக் கணக்கு
- ✱ நடைமுறைக் கணக்கு
- ✱ இலாப நட்டக் பகிர் கணக்கு

## மூலதனக் கணக்கு

ஒவ்வொரு பங்காளனும் பங்குடமையின் மூலதனத்திற்குப் பங்களிக்கும் தொகையானது அவரவர் மூலதனக் கணக்குகளில் வெளிப்படுத்துவதால் ஒவ்வொருவருக்கும் தனித்தனி கணக்குகள் பேணப்படுவது அவசியமாகும்.

பல பங்காளர்கள் உள்ள பங்குடமையில் ஒவ்வொரு பங்காளர்களுக்கும் தனித்தனி மூலதனக் கணக்குகள் பேரேட்டில் பேணப்பட வேண்டும். ஒரே மூலதனக் கணக்கில் ஒவ்வொரு பங்காளர் பெயரிலும் நிரல் முறையிற் கணக்குகளை பேணுவதன் மூலம் பின்வரும் விதமாக நிரல் முறை வடிவில் தயாரிக்க முடியும்.

**மூலதனக் கணக்கு**

| விபரம் | A | B | விபரம் | A | B |
|---|---|---|---|---|---|
| | | | | | |

## மூலதனக் கணக்குகளில் பதிவுசெய்து கொள்ளும் முறை

மூலதனக் கணக்கானது பங்காளருடைய உரிமையைக் காட்டும் கணக்காகையால் இரட்டைப் பதிவுத் தத்துவத்திற்கமைய மூலதனத் தொகையை அதிகரிக்கும் அம்சங்களை இக் கணக்கின் செலவுப் பக்கத்திலும் மூலதனத் தொகையைக் குறைக்கும் அம்சங்களை இக் கணக்கின் வரவுப் பக்கத்திலும் பதிவு செய்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூலதனக் கணக்கை நிலையாகப் பேணுதல்

மூலதனத் தொகையானது மாற்ற மடையாமல் நிலையானதாக பேணுவதைக் குறிக்கும். இவ்வாறு நிலையாக பேணுவதற்காக பங்காளருடன் தொடர்புபட்ட விடயங்களைப் பதிவதற்காக உருவாக்கப்பட்ட கணக்கே நடைமுறைக் கணக்காகும்.

**இதில் பதியப்பட வேண்டிய விடயங்கள்**

- ♣ பங்காளர் மூலதனமாக பங்களிக்க உடன்பட்டளவு
- ♣ மேலதிகமாக இடப்படுகின்ற மூலதன அளவு
- ♣ சொத்துக்கள் மறுபடி விலை மதிப்பில் வருகின்ற இலாப நட்டங்கள்

**மிதக்கும் மூலதனம்:**

இது பங்காளருடைய எல்லா உரிமைகளையும் பதிவு செய்வதன் மூலம் மூலதனம் தளம்பல் உருவாகுவதை காட்டுகின்ற கணக்காகும். இம்முறையில் மூலதனக் கணக்கு மீதி வருடாந்தம் மாற்றமடைந்து கொண்டிருக்கும்.

## பங்குடைமை வியாபாரத்தில் மூலதனக் கணக்கை நிலையாகப் பேணுவதற்கான காரணங்கள்

உடன்பட்ட மூலதனத்திற்கு மேலதிகமாகப் பங்காளனின் சம்பளம், மூலதன வட்டி, இலாபப் பங்கு, பற்று ஆகியவற்றை மூலதனக் கணக்கில் சேர்த்துக் கொண்டால் பங்காளர்கள் தாம் இலாபமாகப் பெற்ற அளவை விட அதிகமான தொகையினை எடுத்துக் கொள்ள முடியும். இவ்வாறு அவர்கள் தங்களை அறியாமலே மூலதனத்தின் பகுதியையும் எடுத்து விடமுடியும்.

## நடைமுறைக் கணக்கு

மூலதனக் கணக்கு மீதியை நிலையானதாக பேணுகின்ற சந்தர்ப்பங்களில் பங்குடைமை வியாபாரத்திற்கும் பங்காளர்களுக்கு மிடையில் ஏற்படுகின்ற கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்யும் கணக்கு நடைமுறைக் கணக்காகும்.

ஒவ்வொரு பங்காளருக்கும் மூலதனக் கணக்கானது தனித்தனியாகப் பேணுவது போன்று நடைமுறைக் கணக்கும் தனித்தனியாகப் பேணப்பட வேண்டும். பொதுவாக இதுவும் நிரல் முறையில் பேணப்படும்.

## நடைமுறைக் கணக்கில் பதிவு செய்யப்படும் கொடுக்கல் வாங்கல்கள்

- ♣ மூலதன வட்டி
- ♣ பங்காளர் சம்பளம்
- ♣ பங்காளரின் இலாப, நட்டப் பங்கு
- ♣ பங்காளரது பற்று
- ♣ பற்று வட்டி
- ♣ நடைமுறை கணக்கு மீதி வட்டி
- ♣ நன்மதிப்பு

**பற்று**

பங்காளர் சொந்த தேவைக்காக வியாபாரத்திலிருந்து எடுக்கப்பட்ட வியாபாரப் பணம் அல்லது பொருளின் பெறுமதியாகும்.

## பங்காளருடைய பற்று நடைமுறை கணக்கில் ஒரே தடவையில் பதிவு செய்ய முடிகின்ற போதிலும் எதிர் நோக்கும் பிரச்சினைகள்

- ♣ நிதியாண்டு முழுவதும் இடைக்கிடை எடுக்கும் பற்றுக்களானது நடைமுறைக் கணக்கில் பதிவதினால் தேவையற்ற விதத்தில் நடைமுறை கணக்கு நீண்டு செல்லல்.
- ♣ பற்று வட்டி கணிப்பதற்காக ஒவ்வொரு பங்காளரதும் பற்றுக்களும் திகதிகளும் இலகுவாக அறியமுடியாதிருத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஒவ்வொரு பங்காளரினதும் முழுப்பற்றின் அளவு திட்டவட்டமாக அறிந்து கொள்ள முடியாது இருத்தல்.

## பற்று பதிவு செய்வதற்கான இரட்டைப் பதிவு

- காசு பற்று: பற்று கணக்கு வரவு
  காசு கணக்கு செலவு

- பொருள் பற்று: பற்று கணக்கு வரவு
  வியாபார க/கு செலவு

## இலாபம் பகிரப்படும் முறை

தனி வியாபாரமெனில் இலாப நட்டக் கணக்கில் காணப்படும் இலாபம் உரிமையாளரின் மூலதனக் கணக்கிற்கு மாற்றப்படும். ஆனால் பங்குடைமை வியாபாரத்தில் பங்காளர்கள் பலர் இருப்பதால் இலாப நட்டக் கணக்கிற் காணப்படும் இலாபமானது பங்காளர்கள் உடன்பட்டு கொண்ட ஒப்பந்தத்திற்கமைய பகிரப்படும்.

## இலாப நட்டப் பகிர் கணக்கு

பங்குடைமை வியாபாரமொன்றில் இலாப நட்டக் கணக்கிற் பெறப்படும் இலாபத்தினைப், பங்காளர் சம்பளம், மூலதன வட்டி, இலாபப் பங்கு என ஒவ்வொரு பங்காளருக்கும் வேறு வேறாகப் பகிர்ந்தளிப்பதற்கு தயாரிக்கப்படும் கணக்காகும்.

## இலாப நட்டப் பகிர் கணக்கில் இடம் பெறும் அம்சங்கள்

- இலாப நட்டக் கணக்கிலிருந்து கீழ் கொணரப்படும் மீதி
- பங்காளரின் சம்பளம்
- பங்காளரின் மூலதன வட்டி
- ஒதுக்கங்களுக்கு மாற்றப்படும் தொகை
- பற்று வட்டி
- நடைமுறை கணக்கு வட்டி
- இலாப நட்ட பங்கு தொகை

## இக் கணக்கில் பதியப்படும் பதிவுகளுக்கான இரட்டைப் பதிவு

- **மூலதனவட்டி:** இலாபநட்ட பகிர் க/கு வரவு
  நடைமுறை க/கு செலவு
- **பங்காளர் சம்பளம்:** இலாபநட்ட பகிர் க/கு வரவு நடைமுறை க/கு செலவு
- **ஒதுக்கங்களுக்கு மாற்றுதல்:** இலாப நட்ட பகிர் க/கு வரவு பொது ஒதுக்கக் க/கு வரவு
- **பற்று வட்டி:** நடைமுறை க/கு வரவு
  இலாப நட்ட பகிர் க/கு செலவு
- **இலாபம் பகிர்தல்:** இலாப நட்டபகிர் க/கு வரவு நடைமுறை க/கு வரவு
- **பங்காளர் வியாபாரத்திற்கு செய்த செலவு** க/கு இலாபநட்ட பகிர் வரவு
  நடைமுறை க/கு செலவு

- இம்மாற்றங்களால் மாற்றப்படும் போது வியாபாரச் சொத்துக்களின் உண்மைப் பெறுமதி புத்தகங்களில் சேர்க்கப்பட்டிராத சந்தர்ப்பங்களில் சில பங்காளருக்கு அனுகூலங்களும் சில பங்காளருக்கு பிரதி கூலங்களும் ஏற்படலாம்.

- நன்மதிப்பு புத்தகங்களில் பதியப்பட்டிருப்பதால் அதில் சில பங்காளருக்கு அனுகூலங்களும் வேறு சில பங்காளருக்குப் பிரதி கூலங்களும் ஏற்படலாம்.

### இலாப நட்ட பகிர் விகிதம் மாற்றப்படுவதால் ஏற்படக்கூடிய விளைவுகளை கணக்குகளில் பதிவு செய்யப்படுவதற்கு பின் பற்றப்பட வேண்டிய முக்கிய அம்சங்கள்

- மறுமதிப்பீடு செய்த பெறுமதியை சொத்து பொறுப்பு கணக்குகளில் பேணிச் செல்வதால் மறுமதிப்பீட்டுக் க/கு மூலமாக நன்மதிப்பு உட்பட சொத்துக்களின் மறுமதிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பீட்டு இலாபம் புத்தகங்களில் பதிவு செய்து மறுமதிப்பீட்டு இலாபத்தை அல்லது நட்டத்தை பழைய இலாப நட்டம் பகிரும் விகிதத்தில் பகிர்ந்து பங்காளர் மூலதனக் கணக்குகளுக்கு மாற்றுதல் வேண்டும்.

♣ நன்மதிப்புக் கணக்கு, புத்தகங்களில் பேணப் படாத சந்தர்ப்பங்களில் பங்காளருடைய புதிய இலாப நட்டப் பகிர் விகிதத்துக்கு ஏற்ப நன்மதிப்பு கணக்கின் மீதியை மூலதனக் கணக்குகளுக்கு வரவெழுதிப் பதிவழிக்க வேண்டும்.

♣ சொத்துக்கள் மறுமதிப்பீடு செய்யப்பட்ட போதிலும் புதிய பெறுமதியை புத்தகங்களிற் காட்டுவதில்லை எனின் மறுமதிப்பீட்டு ஞாபகக் கணக்கொன்றை தயார் செய்து மறுமதிப்பீட்டு நட்டத்தை மூலதனக்கணக்குகளிற் செம்மை செய்தல்.

**ராதிகா ஸ்ரீஸ்கந்தராஜா**
2004 Com.

---

உன் அறிவு மேசை விளக்காக அல்ல கலங்கரை விளக்காக அமையட்டும் — **(லெனின்)**

செய்து முடித்தவன் சாதிக்கிறான் செய்ய முடியாதவன் போதிக்கிறான்
— **ஜுலியட் ஹாசன்**

முன்னேற்றப்படிகளில் ஏறும்போது வழியில் சந்திப்பவர்களிடம் அன்பாய் இரு ஏனென்றால் இறங்கும் போது அவரை சந்திக்க வேண்டியிருக்கும்
— **விவேகானந்தர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்த்தக - வங்கிகளின் நடைமுறை வைப்பு - பற்றிய ஓர் நோக்கு

## நடைமுறை வைப்பு:

வர்த்தக வங்கிகளின் வைப்புக்களிலே நடைமுறை வைப்பே மிக முக்கியமானதாகும். வாடிக்கையாளரினால் கேட்கப்படும் போது உடனடியாக பணத்தினை திருப்பி செலுத்தும் முறையிலே நடைமுறை வைப்பு பேணப்படுவதனால் இது கேள்வி வைப்பு எனவும் அழைக்கப்படுகிறது.

நடைமுறை கணக்கிலே பணத்தினை வைப்புச் செய்யும் வாடிக்கையாளர் ஒருவர் வங்கியிடமிருந்து ஒரு காசோலை புத்தகத்தினை பெறுகின்றார். இவர் இத்தகைய காசோலைகள் மூலம் எந்த வித முன்னறிவித்தலுமின்றி நடைமுறை வைப்புக்களை கொடுக்கல் வாங்கலுக்காகப் பயன்படுத்தலாம் அதாவது காசோலையினை வரைந்து தமது வைப்பிலுள்ள பணத்தின் எந்தவொரு தொகையினையும் எந்நேரமும் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம். அல்லது மற்றவர்களுக்கு கொடுப்பனவுக்காக வழங்கலாம். அத்துடன் மற்றவர்களிடமிருந்து பெறப்படுகின்ற காசோலைகளையும் நடைமுறைக் கணக்கில் வைப்புச் செய்யலாம். இதனால் தான் நடைமுறை வைப்புக்கள் புழக்கத்தில் பணமாக கருதப்படுவதுடன் நாட்டின் பண நிரம்பலிலும் ஒரு பகுதியாக சேர்க்கப்படுகிறது.

நடைமுறை வைப்புக்கு வட்டி வழங்குவதில்லை. ஆனால் நடைமுறை வைப்புக்கள் வங்கி மீது வாடிக்கையாளர் கொள்ளும் உரிமையாக கருதப்படுகிறது. இப் பணத்தினை வாடிக்கையாளர் எந்நேரமும் எடுக்க முடிவதனால் இதனை வங்கி எப்போதும் தயாராக வைத்திருக்கின்றது.

## நடைமுறை கணக்கினை தொடங்குவதற்கான விதிகள்:

1) நடைமுறைக் கணக்கினை ஆரம்பிப்பவர் 18 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.
2) நடைமுறை கணக்கு தொடங்கும் நபரை அதே வங்கியில் நடைமுறைக் கணக்கு வைத்திருக்கும் ஒருவர் அறிமுகம் செய்தல் வேண்டும். (இதன் நோக்கம் நம்பிக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாணயமுள்ள ஒருவரையே வங்கி தனது வாடிக்கையாளராகச் சேர்த்துக் கொள்ளும் என்பதாகும்)

3) வங்கியில் நடைமுறைக் கணக்கொண்றினை ஆரம்பிக்கும் ஒருவர் அதற்கான விண்ணப்பப் படிவத்தினை பூர்த்தி செய்வதுடன், மாதிரி கையொப்ப அட்டையினையும் இணைத்து ஒப்படைக்க வேண்டும்.

4) நடைமுறை கணக்கினைத் தொடங்குவதற் கான ஆரம்ப வைப்புத் தொகை வங்கியின் கிளைகளை பொறுத்து வேறுப்டும். (உதா ரணமாக கன்னாதிட்டி மக்கள் வங்கியின் ஆரம்ப வைப்பு 5000/- என்பதாகும்)

5) நடைமுறை கணக்கொன்றினை ஆரம்பிக் கின்றவர் தனது மாதிரிக் கையொப்பத்தினை வங்கிக்கு கையளிப்பதுடன் அதே மாதிக் கையொப்பத் தினைக் காசோலையிலும் இடுதல் வேண்டும்.

## நடைமுறை வைப்பில் வைப்பிடக் கூடியவை

1) நாணயம்
2) காசோலை
3) பயணிகள் காசோலை
4) வங்கி வரையியல்
5) காசுக் கட்டளை
6) அரச பண ஆவணச் சிட்டை
7) ஓய்வூதியச் சான்றிதழ்

## நடைமுறைக் கணக்கின் வகைகள்

1) தனிநபர் கணக்கு (Individual Account) P.
2) *கூட்டான கணக்கு (Joint Account) C.*
3) பங்குடமைக்கான நடைமுறைக்கணக்கு T.
4) கம்பனிக்கான நடைமுறைக் கணக்கு T.
5) பொறுப்பாண்மைக் கணக்கு
6) சங்கங்கள் கழகங்களுக்கான நடைமுறை க/கு C.
7) கூட்டுத்தாபனக் கணக்கு

## தனிநபர் கணக்கு

இது தனியான அல்லது தனிப்பட்ட வியா பாரியினால் தமது சொந்த தேவை கருதி திறக்கப் படும் நடைமுறைக் கணகினைக் குறிக்கும். வியாபாரி நடைமுறைக் கணக்கு திறக்கும் போது வியாபாரப் பெயர்ப் பதிவுச் சான்றிதழைச் சமர்ப பிக்க வேண்டும்.

## கூட்டான கணக்கு

கணவன், மனைவி, தாய், மகள், தந்தை, மகன் என்று கூட்டாக ஆரம்பிக்கலாம். கூட்டுக் கணக்கு ஆகக் குறைந்த தொகை 5000/- கூட்டுக் கணக்கு ஆரம்பிக்கின்ற எல்லோரது விபரங்களும் விண்ணப்பப் பத்திரத்தில் கொடுக்கப்பட வேண்டும். இதில் ஒருவர் இறக்குமிடத்து மற்றையவருக்கு இப் பணம் சேரும்.

## பங்குடமைக்கான நடைமுறைக் கணக்கு

இக் கணக்கு பங்குடமை நிறுவனங்கள் ஆரம்பிக்கப் படுகின்றன. இவ்வாறு தரப்பட்டுள்ள ஒவ்வொன்றும் நடைமுறைக் கணக்கை உருவாக்கலாம்.

நடைமுறைக் கணக்கு வைத்திருக்கும் நபருக்கு காசோலை புத்தகம் வழங்கப்படும். இக் காசோலை புத்தகக் கட்டணம். புத்தகத்திற்கு புத்தகம் வேறுபடும். இக் காசோலைப் புத்தகத்திற்குரிய பணத்தை அக் கணக்கு வைத்திருப்பவரிடமிருந்த தொகையில் அற விடப்படும்.

நடைமுறை கணக்கு வைத்திருக்கும் நபர் வங்கி மேலதிகப்பற்றை பெற வேண்டுமாயின்

அவர் வங்கியின் நன்மதிப்பை பெற் றிருக்க வேண்டும். அதாவது அவரினால் வரை யப்பட்ட காசோலைகள் வங்கியால் மறுக் கப்படாதிருத்தல் முதல் வங்கி மேலதிக பற்று பெற்றிருந்தால் அதனை குறித்த தவணையில் முழுமையாக செலுத்தியிருக்க வேண்டும். இவ்வாறு ஒரு சிறந்த வாடிக்கையாளருக்கு வங்கி மேலதிகப் பற்று வழங்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கம்பனிக்கான நடைமுறைக் கணக்கு

வரையறுக்கப்பட்ட கம்பனிகளும் வங்கியில் நடைமுறைக் கணக்கினை ஆரம்பிக்க முடியும்.

### நிபந்தனைகள்:

1. கம்பனியின் செயலாளர் கம்பனியின் பெயர் பதிவு செய்யப்பட்ட காரியாலயம் போன்ற விபரங்களுடன் வங்கி முகாமையாளருக்கு விண்ணப்பித்தல் வேண்டும்.

2) கம்பனி, கம்பனி பதிவாளரின் கீழ் பதிவு செய்யப்பட்ட சட்ட ஆளுமை உடைய அமைப் பாக இருப்பதனால் கணக்கினை ஆரம்பிக்க ஒருவரின் உத்தரவாதம் தேவையில்லை.

3) வங்கிக் கணக்கினை கையொப்பமிட்டு இயங்கும் அதிகாரம் செயலாளருக்கா அல்லது இயக்குனருக்கா என்பது குறிப்பிடப்படல் வேண்டும்.

4) கம்பனி பதிவாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட பின்வரும் ஆவணங்களையும் வங்கிக்கு சமர்ப் பித்தல் வேண்டும்.

1) உருவாக்கப் பத்திரம்
2) அமைப்பு அக விதி, புற விதி
3) வியாபார தொடக்க சான்றிதழ்
4) இயங்குனரின் விபர அறிக்கை
5) இயக்குனரின் மாதிரி கையொப்பம்

## பொறுப்பாண்மைக் கணக்கு

சமய நிறுவனங்கள், தர்மகர்த்தா சபைகள் போன்ற நம்பிக்கையினடிப்படையில் இயங்கும் நிறுவனங்களும் வங்கியில் நடைமுறை க/கினை திறக்கலாம்.

### நிபந்தனைகள்

1) பொறுப்பாண்மைக்கு பொறுப்பான நம்பிக்கை காப்பாளர்கள் கையொப்பமிட்டு தொடங்கலாம்.

2) இக் க/ கினை ஆரம்பிப்பதற்கு அறிமுகம் செய்து உறுதிப்படுத்தல் அவசியமில்லை.

## சங்கங்கள் கழகங்களுக்கான நடை முறை கணக்கு

சங்க கட்டளை சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட விளையாட்டு, கழகங்கள், கலாச்சார நிறுவனங்கள் மற்றும் சங்கங்கள் ஆகியனவும் நடைமுறை க/கினை தொடங்க முடியும்.

### நிபந்தனைகள்

1) கணக்கினை இயக்க அதிகாரமளிக்கப் பட்டவரின் மாதிரி கையொப்பம் சமர்ப்பிக்கப் படல் வேண்டும்.

2) பின்வரும் ஆவணங்களும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

**1) சங்கங்களின் உப விதிகளின் பிரதி**
**2) செயற்குழுவின் உறுதி பத்திரம்**
**3) செயற் குழு உறுப்பினரின் விபரம்**
**4) பதிவு சான்றிதழின் பிரதி**

நடைமுறைக் கணக்கு வைத்திருப்போர் வங்கியில் நன்மதிப்பு பெற்றிருந்தால் அவரது காசோலைகள் வங்கியில் இவ்வாறான மேலதிகப் பற்று வசதி சிறந்த வாடிக்கையாளருக்கே வழங்கப்படும்.

இதனைவிட வங்கியில் நடைமுறைக் கணக்கு வைத்திருப்பவர்கள் நிலவரக் கட்டளைச் சேவையையும் பெறமுடியும்.

## நிலையான கட்டளை / நிலவரக் கட் டளை (Standing Order)

வாடிக்கையாளரால் வங்கிக்கு வழங்கப படும் ஒரு எழுத்து மூலமான கட்டளையே நில வரக் கட்டளையாகும். இதன் மூலம் வாடிக்கை யாளர்கள் மேற்கொள்ளக் கூடிய செலவீனங் களாவன:

**காப்புறுதி கட்டணம்**
**தொலைபேசி கட்டணம்**
**மின்சார கட்டணம்**

போன்றவையாகும். இவற்றுக்குரிய பணங் களை வங்கியானது வாடிக்கையாளருடைய நடைமுறைக் கணக்கிலுள்ள பணத்தைப் பயன் படுத்தியே செலுத்துகின்றது.

இதே போன்று வங்கியானது வாடிக் கையாளரது பெயரில் வருமானங்களையும் திரட்டு கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பங்குலாபம்**

வாடகை வருமானம் போன்றவையாகும். இவ் வருமானங்கள் நடைமுறை கணக்கு மீதி யுடன் சேர்க்கப்படும் இவ்வகையான சேவைகள் வங்கி வழங்குவதற்கான கட்டணமாக வாடிக் கையாளருடைய நடைமுறை கணக்கிலிருந்து வங்கிக் கட்டணம் என்ற பெயரில் அறவிடுகின்றது.

வங்கி வாடிக்கையாளருக்கு வங்கியுட னான நடவடிக்கைகளைத் தெரியப்படுத்து முக மாக மாதம் ஒருமுறை அல்லது வாராந்தம் அனுப் பும் கூற்று வங்கிக் கூற்று ஆகும். இதில் பின்வரும் விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கும்.

வங்கியின் பெயரும் கிளையும் வாடிக்கை யாளரது பெயர் முகவரி வங்கிக் கணக்கின் ஆரம்ப இறுதி மீதிகள் குறிப்பிட்ட காலப்பகுதியில் வைப்பு செய்யப்பட்டமையும் மீள எடுக்கப் பட்டவையும் நிலவரக் கட்டளையின் பெயரில் செலுத்தியவை யும் அறவிடப்பட்டவையும்.

**வங்கி அறவிட்ட வங்கிக் கட்டணங்கள்:**

இதன் உதவியுடன் நடைமுறைக் கணக்கு வைத்திருப்பவர் தனது காசேட்டு வங்கி மீதியையும் வங்கிக் கூற்று வங்கி மீதியையும் ஒப்பீடு செய்து வேறுபாடுகளை இனங்கண்டு கொள்ள இது உதவுகிறது.

வேறுபாடுகள் காணப்படும் பட்சத்தில் வாடிக்கையாளரால் இரு மீதிகளையும் இணக்கம் செய்யுமுகமாக தனது புத்தகங்களில் விசேட திருத்தங்களைச் செய்வார். இதற்கு உதவியாக வங்கிக் கணக்கிணைக் கூற்று தாயாரிக்கப் படுகிறது.

வங்கியில் பல்வேறு நபர்கள் தொடர்புபட்ட போதிலும் நடைமுறைக் கணக்கு வைத்திருப் பவர்கள் மட்டுமே வாடிக்கையாளர்கள் என்ற சிறப்பை பெறுகின்றனர்.

**காயத்திரி – லோகநாதன்**
2004 Com

---

பலவீனர்களின் பாதையில் தடையாக இருந்த கருங்கல் பாறை
பலசாலியின் பாதையில் படிக்கட்டாக அமைகின்றது (கதே)

எல்லோருக்கும் நன்மை பயக்கக்கூடிய காரியத்தைச் செய் அது
கடைசியில் உனக்கே நன்மையாக முடியும்.

தொல்லையில்லாமல் நிம்மதியாக வாழ ஆசை இருந்தால்
உனக்கு தெரிந்ததை எல்லாம் பேசிவிடாதே,
காணும் எல்லாவற்றையும் பற்றிக் கருத்துச் சொல்லி விடாதே.

கல்விக்காக எதை வேண்டுமானாலும் இழக்கத் தயாராகு ஆனால்
எதற்காகவும் கல்வியை இழக்கத் தயாராகாதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்திய வங்கியின் நவீனமயப்படுத்தல்

நிதியியல் சந்தைகளிலும் தொழில் நுட்பத் துறைகளிலும் உலகளாவிய ரீதியில் இடம் பெறும் மாற்றங்களை மேற்கொள்ளு வதற்கு உலகம் முழுவதிலும் உள்ள மத்திய வங்கிகளை நிர்ப்பந்தப்படுத்தியுள்ளன. இதன்படி உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதியியல் சந்தைகளில் தோற்றம் பெறும் தேவைகளையும் அறை கூவல்களையும் எதிர் கொள்ளுவ தற்காக இலங்கை மத்திய வங்கியும் நவீனமயப் படுத்தல் நிகழ்ச்சித் திட்டமொன்றை தொடங்கி யுள்ளது.

நவீனமயப்படுத்தும் இந்தச் செயல் முறையானது மத்திய வங்கியின் முதன்மைக் குறிக்கோளான விலை உறுதிப்பாடு மற்றும் முதன்மைக் கருமங்கள் அல்லாதவற்றின் பரவ லாக்கல் அமைப்பு முறை மாற்றங்கள், புதிய மனித மூலவளக் கொள்கைகளின் ஏற்றுக் கொள்ளல், தன்னிச்சையான இளைப்பாற்றுத் திட்டத்தின் நடைமுறைப்படுத்தல் கொடுப்பனவு கள் மற்றும் தீர்ப்பனவு முறைகள், சட்டச் சீர்திருத்தங்கள் என்பவற்றின் வலுப்படுத்தலுக்கு இட்டுச் செல்லும்.

இவ் நடை முறைப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டத்திற்கு ஆதரவு வழங்கும் நோக்கில் தேவையான நிதியங்களை வழங்வதற்கு சர்வதேச அபிவிருத்தி முகவராண்மை என்ப வற்றின் ஊடாக உலக வங்கி இணங்கி உள்ளது. இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பின்வருவன எய்தப் பெற்றுள்ளன.

### 1) மனித மூலவள அபிவிருத்தி

பெருமளவு தொழிற்துறை தகைமை களுடன் ஒரு சீராக்கப்பட்ட முகாமைத்துவ கலாச்சாரத்திற்கு நகருவதற்கு புதிய மூலவள கொள்கைகளை ஏற்றுக் கொள்வதற்கு வங்கி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

### 2) தன்னிச்சையான இளைப்பாற்றுச் சம்பளம்

நவீன மயப்படுத்தல் செயல்முறையின் போது ஊழியர்களில் சில வகையினர் தேவைக்கு அதிகமாக இருந்தனர். இதன் படி ஊழியர்களின் சில வகையினருக்கு வங்கி தன்னிச்சையான இளைப்பாற்றுத் திட்டம் ஒன்றினை வழங்கியது. இந்த திட்டத்தின்படி போதுமான அளவு இளைப்பாற்றுப் பொதி வழங்கப்பட்டதோடு தன்னிச்சையான இளைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாற்றுத் திட்டத்தை ஏற்றுக்கொள்வதற்கு பல ஊழியர்களை ஊக்குவித்துள்ளது. இவ் தன்னிச்சையான இளைப்பாற்றுத் திட்டம் ஒன்றினை வழங்கியது நடைமுறைப்படுத்தப் பட்டதுடன் 2001ஆம் ஆண்டு டிசம்பர் இறுதியில் 588 ஊழியர்கள் வங்கிப் பணியிலிருந்து ஓய்வு பெற்றனர். மேலும் 108 ஊழியர்கள் 2002ஆம் ஆண்டு முதல் அரைப் பகுதியில் வங்கியிலிருந்து ஓய்வு பெற்றனர்.

## அமைப்பு முறை மீளமைப்பு

இச் செயல்முறையின் படி பின்வரும் மாற்றங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

* கிராமிய கொடுகடன் திணைக்களமும் அபிவிருத்தி நிதித் திணைக்களமும் ஒன்றிணைக்கப்பட்டு பிரதேச அபிவிருத்தித் திணைக் களம் நிறுவப்பட்டது.

* வங்கித் தொழில் திணைக்களம் ஆனது சர்வதேச தொழிற்பாட்டுத் திணைக்களம், உள்நாட்டு தொழிற்பாட்டுத் திணைக்களம், கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம் என நான்கு திணைக்களங்களாக மீள நிறுவப்பட்டது.

* இலங்கை மத்திய வங்கியினதும் வர்த்தக வங்கியினதும் கூட்டு உடமையான வரையறுக்கப்பட்ட லங்கா கிளியர் (பிறைவற்) நிறுவனத்துக்கு 2002ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதத்தில் உரிமை மாற்றப்பட்ட இலங்கை தன்னியக்க தீர்வகத்தின் சொத்துக்களின் மதிப்பீடும் முற்றுப் பெற்றுள்ளது.

## கொடுப்பனவு சீர்திருத்தங்கள்

இலங்கையின் நிதியியல் சந்தைகள் மற்றும் வங்கித் தொழில்துறையின் அபிவிருத் திக்கு ஆதரவு வழங்குவதற்கு தேவையான உட்கட்டமைப்பினை நிறுவுதல், தோற்றம் பெறும் சிறந்த சர்வதேச பிரயோகங்களுக்கு இசைவாக கொடுப்பனவுகள் முறையின் தீர்ப்பனவு மற்றும் பிணையங்களின் தீர்ப்பனவு முறையின் இடநேர்வுகளை குறைத்தல், இலங்கையின் பொதுப்படுகடனின் நம்பகத்தன்மையினையும் வர்த்தகப்படுத்தல் தன்மையினையும் அதிகரித்தல், இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் மற்றும் வாணிப தொழிற்பாடுகளின் செயல் திறனையும் தரத்தினையும் மேம்படுத்தல், புதிய தொழிற்பாட்டு பொறியியல் முறைக்கான சட்டம் மற்றும் ஒழுங்கு முறைப்படுத்தலுக்குப் பொருத்தமான சட்டமொன்றினை நிறுவுதல் என்பவற்றை எய்துதல் உத்தேச கொடுப்பனவுச் சீர்திருத்தத்தின் நோக்கம் ஆகும்.

## சர்வதேச கணக்கீட்டுத் தரங்களும் உள்ளகக் கணக்காய்வு பட்டயமும்.

சர்வதேச நற்பிரயோகங்களுக்கு இசைவாக வங்கியின் நிதியியல் அறிவிப்பு மற்றும் கணக்கீட்டு பிரயோகங்களை மேம்படுத்துவதும் இன்னுமொரு விடயமாக உள்ளதுடன் கம்பனி நிர்வாக நற்பிரயோகங்களின் பிரயோகத்தின் போதும் உள்நாட்டு நிதியியல் நிறுவனங்களுக்கு எதிரெதிராக மத்திய வங்கியின் தரப்படுத்தல்களையும் இது மேம் படுத்துகின்றன.

இந்த நிகழ்ச்சித் திட்டங்களினால் மதத்திய வங்கியின் நவீன மயப்படுத்தல் செய்முறை தொடருவதோடு மூன்று ஆண்டு காலப்பகுதியில் முற்றுப்பெறச் செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

யோ. யசிந்தா
2003 வர்த்தகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

To: Best wishes Best wishes Best wishes Best wishes Best wishes Best wishes

From: Best wishes Best wishes Best wishes Best wishes Best wishes Best wishes

# SANTHIYA

## Multi Courtyard

**Fancy goods, items fevicryl & acron paint items.**

**531, POINT PEDRO ROAD, NALLUR.**
**MAIN STREET, PANDATHERIPPU**

---

மலிக வலிதை சிறப்புற எமது நல் வாழ்த்துக்கள்

## ஆர். வி. ஜி. மருந்தகம்

- ஆங்கில மருந்து வகைகள்.
- குழந்தைகள் சிறுவர்கள் வளர்ந்தோருக்கான ஊட்டச் சத்து வகைகள், பாஸ்மா வகைகள்
- அனைத்தையும் தரமாகவும் நியாயமாகவும் பெற்றுக் கொள்ள நாடுங்கள்.

# ஆர். வி. ஜி. மருந்தகம்

(புதிய O.P.D. முன்பாக)

504, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

☎ 012-2222129




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# Aldi Electronics

**Dealersin**

**Watches, Radioes, Clock, T. V. Deck, Computer, Accessories, Audio, Video, DVD, CD and Players**







15, Stanley Road, Jaffna
☎ 021-2222676
E. Mail:aldielec @ sltnet. lk

# விவேகா




# நகை மாடம்

இல. 131, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

# NORTHERN ENGINEERING WORKS

Reconditioners of motor & Dresel Engines Manufactures of spare parts Re Boring Resleving, Grank shaft Regrinding, Line Borings.

**No. 250, Stanley Road,
Jaffna (Sri Lanka)**



பரமேஸ்வராச் சந்தி,
திருநெல்வேலி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த சேமிப்பு!
சிறந்த சலுகை!
உங்களுக்காக மட்டுமே
"அன்னை நாகா"
புட் சிட்டி க்கு விஜயம் செய்து
சாப்பு சவாரியை அனுபவபூர்வமாக உணருங்கள்
உங்களது தினசரி தேவைகளை
எங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளுங்கள்
○ உணவுப் பொருட்கள், ○ வீட்டுப்பாவனைப் பொருட்கள்,
○ மருந்து வகைகள், ○ தங்க நகைகள்,
மேலும் பல பொருட்கள் ஒரே கூரையின் கீழ்

தினமும் மு. ப. 9.00 பி. ப. 9.00 வரை
(முற்றிலும் குளிரூட்டப்பட்டது)




Annai Nagaa Food City

FOR ALL YOUR DAILY NEEDS!

175, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: (021) 2225515, (021) 2225223

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவீன வணிகத் தகவல்கள்

## யூனியன் அசூரன்ஸ் லிமிடெட் தேசிய சேமிப்பு வங்கியுடன் ஒப்பந்தம்

யூனியன் ஆசூரன்ஸ் லிமிட்டெட்டானது அண்மையில் தேசிய சேமிப்பு வங்கியுடன் வரலாற்று முக்கியத்துவம் மிக்க புரிந்துணர்வு உடன் படிக்கையொன்றில் கைச்சாத்திட்டுள்ளது இதனடிப்படையில் தேசிய சேமிப்பு வங்கியின் அனைத்து சேமிப்பு வைப்பு கணக்காளர்களும் இத் திட்டத்தின் கீழ் எதுவித மேலதிக செலவும் இல்லாமல் யூனியன் ஆசூரன்ஸ் லிமிட்டெட்டின் ஆயுட் காப்புறுதி திட்டத்தின் கீழ் இணைத்து கொள்ளபடவுள்ளார்கள்.

இப் புரட்சிகர திட்டமானது தேசிய சேமிப்பு வங்கியின் சேமிப்பு கணக்கு வைப்பாளர்களுக்கு அவர்களின் கணக்கு வைப்புத் தொகைக்கு ஏற்ப காப்புறுதி பெறும் வாய்ப்பு உட்பட பல்வேறு மேலதிக அனுகூலங்களை வழங்குகின்றது.

மேலும் இது சமூகங்களிடையே சேமிப்பை ஊக்குவிப்பதற்கான அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு ஆதரவு நல்குவதாகவும் அமையும். தேசிய சேமிப்பு வங்கியில் மேற்கொள்ளப்படும் அனைத்து வகையான சேமிப்பு கணக்கு வைப்பாளர்களும் எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதியிலிருந்து 2003-01-01 இத் திட்டத்தின் கீழ் நன்மைகளை பெறுவார்கள்.

## AIT உடன் கொமர்ஷல் வங்கி கூட்டிணைவு

இலங்கையின் கொமஷல் வங்கியும் ஆசிய தொழிநுட்ப கல்வி நிறுவனமும் (AIT) இணைந்து இலங்கையின் தொழில் நுட்பத்தில் பாரிய வளர்ச்சியை ஏற்படுத்தும் முயற்சியில் இறங்கியுள்ளன.

பாங்கொங்கில் அமைந்துள்ள ஆசிய தொழில் நுட்ப கல்வி நிறுவனத்தின் மூலம் இலங்கையருக்கு பயிற்சி வழங்கப்பட்டு அவர்கள் சிறந்த பயனைப் பெறுவதற்குரிய நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுகின்றன.

இப் பயிற்சி நெறிகளை பின்பற்றுவதன் மூலம் இலங்கையர் சிறந்த பயனை பெறுவதனை நோக்கமாக கொண்டு இலங்கை கொமஷல் வங்கியும் ஆசிய தொழில் நுட்ப கல்வியகமும் இணைந்து புரிந்துணர்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடன்படிக்கையில் கைச்சாத்திட்டன இரு நிறுவனங்களின் சார்பில் அவ்விரு நிறுவனங் களின் தலைவர்கள் புரிந்துணர்வு உடன்படிக் கையில் கைச்சாத்திட்டனர்.

### தேசிய சேமிப்பு வங்கியின் சேமிப்பு கணக்குகளுக்கு ஆயுட் காப்புறுதி

தேசிய சேமிப்பு வங்கியானது 2003ஆம் ஆண்டு ஜனவரி முதல் நடைமுறைப்படுத்தும் அனைத்து சேமிப்பு கணக்குகளுக்கும் இலவச ஆயுட் காப்புறுதி காப்பொன்று வழங்கப் படுகின்றது.

❖ சேமிப்பு கணக்குகளுக்கு இலவச ஆயுட் காப்புறுதி வழங்கப்படுவதன் நோக்கம் இலவச ஆயுட் காப்புறுதிக் காப்பு வழங்கும் திட்டத்தின் ஊடாக சேமிப்பு கணக்கு வைத்திருப்போருக்கு வழங்கப்பட்டு வரும் நன்மைகளில் பெறுமதி கூட்டல் ஏற்பட வழிவகுக்கப்பட்டுள்ளது.

❖ சேமிப்புகளுக்கு காப்புறுதி வழங்கும் திட்டம் இதற்கு முன்னர் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதா?

தேசிய சேமிப்பு வங்கியின் தலைவர் டீ. எம். சுவாமிநாதன் அவர்களின் முயற்சி யினால் அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறைக்கு வரவுள்ள இவ் ஆயுட் காப்புறுதி திட்டம் சேமிப்பு உற்பத்திகள் அனைத்தையும் உள்ளடக்குகின்றமையால் இலங்கையின் முதன் முறையாக வழங்கப்படுகின்றது எனக் கருதலாம்.

❖ தேசிய சேமிப்பு வங்கியில் சேமிப்புக் கணக்குகளை வைத்திருப்பவர்கள் இலவசக் காப்புறுதி காப்பின் மூலம் அடையக் கூடிய நன்மைகள் எவை?

தற்சமயம் தேசிய சேமிப்பு வங்கி அதன் 100 இற்கு மேற்பட்ட விரிவான கிளை வலையமைப்பின் கீழ் 50 இலட்சத்திற்கும் அதிகமான சேமிப்புக் கணக்கு வைப்பாளர் களை கொண்டுள்ளது. பின்வரும் திட்டத்தின் கீழ் இலவச ஆயுட் காப்புறுதிக்கு தேசிய சேமிப்பு வங்கியின் சேமிப்புக் கணக்கு வைப்பாளர்கள் உரித்துடையவர்களாவார்கள்.

ஒருவர் 10,000 ரூபாவிலிருந்து 25,000 கணக்கு மிதியாக பேணும் போது அவரது

**மரணத்தின் போது கணக்கு மீதியின் 4 மடங்கு தொகை வழங்கப்படும்.**

அவர் 2500 ரூபாவிலிருந்து 50000 ஐ கணக்கு மீதியாக பேணுகையில் 100.000 ரூபாவிற்கு குறையாத வகையில் கணக்கு மீதியின் 3 மடங்கு தொகை அவரது மரணத்தின் போது வழங்கப்படும்.

ரூபா 50,00 இலிருந்து 100.000 ரூபா வரை கணக்கு மீதியாக பேணுகையில் 50,000 இற்கு குறையாத வகையில் கணக்கு மீதியின் இரண்டு மடங்கு தொகையும் 100.00 ரூபாவிற்கு மேல் கணக்கு மீதியை பேணுகையில் 300.000 ரூபாவும் அவரின் இறப்பின் போது வழங்கப் படும்.

❖ இலவச ஆயுட் காப்புறுதி காப்பை பெற்று கொள்வதற்கு சேமிப்புக் கணக்கு வைப்பாளருக்குத் தேவைப்படும் தகமைகள் எவை?

1) இறப்பிற்கு முந்திய மூன்று மாதங்களில் ரூபா 10,000ஐ ஆகக் குறைந்த கணக்கு மீதியை பேணியிருத்தல் வேண்டும்.

2) 18-70 வயதிற்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3) புதிதாக சேமிப்பு கணக்கு வைப்பொன்றை ஆரம்பிப்பவர்கள் மூன்று மாதம் வரையிலான காத்திருப்புக் காலத்திற்கு உள்ளாக் கப்படுவார்கள்.

4) கூட்டுக் கணக்கு வைப்பாளர்களாகவிருப்பின் இருவருக்கும் ஆயுட்காப்புறுதி காப்பு வழங்கப்படுமெனினும் ஒரு ஆண்டின் போது முதலில் இறப்பவர் மட்டுமே அதன் பயனை பெறுவார்.

5) பருவமடையாதோர் சேமிப்புக் கணக்கு களுக்கு வைப்பாளர்கள் 18 வயதிற்கு குறைந்தவர்களாக இருக்கும் பட்சத்தில் பாதுகாவலர் சட்ட பாதுகாவலருக்கு காப்புறுதி பாதுகாப்பு வழங்கப்படும்.

6) காப்புறுதி காப்பிற்கு உரித்துடையவராவதற்கு சேமிப்பு கணக்கு வைப்பாளர்கள் மருத்துவ பரிட்சைக்கு உள்ளாக வேண்டியதில்லை.

7) தேவைப்படும் ஆவணங்கள் யாவும் ஏற்றவாறு இருக்குமாயின் மூன்று வேலை நாட்களுக் குள் அனைத்து கோரல்களும் தீர்த்து வைக் கப்படும்.

யூனியன் அசூரன்ஸ் லிமிட்டெட்டுடன் கூட்டிணைந்து தேசிய சேமிப்பு வங்கி காப்புறுதி காப்பை வழங்குகின்றது.

## இன்ரனெற் தொலைக்காட்சியை பிரபல்யப்படுத்த சிலிங்கோ, ஸ்ரீலங்கா டெலிகொம்முடன் இணைகின்றது.

இலங்கையின் முதலாவது இன்டநெற் தொலைக்காட்சியை மக்கள் மத்தியில் பிர பல்யப் படுத்துவதற்காக இலங்கையின் இரண்டு பிரதான கம்பனிகளான சிலிங்கோ நிறுவனமும், ஸ்ரீலங்கா டெலிகொம் நிறுவனமும் இணைந்து களத்தில் இறங்கியுள்ளன. இதன் மூலம் தகவல் தொழில்நுட்பத் துறையில் இலங்கையை அபிவிருத்தியடையச் செய்யும் பணியில் இரு நிறுவனங்களும் தமது அர்ப்பணிப்பு நிறைந்த சேவைக்கு மேலும் வலுவூட்டியுள்ளன.

சிலிங்கோ கொன் சொலிடேட் நிறுவனத்தின் ஒரு அங்கத்துவ நிறுவனமாக லங்கா ஈகொம்டெக் வென்சேர்ஸ் லிமிட்டெட் (LET) சந்தைப்படுத்தும் சிலிங்கோ இன்டர்நெற் தொலைக்காட்சியானது பாவனையாளர்களுக்கு தம்மிடமுள்ள தொலைக்காட்சி மூலமாகவே வீட்டில் இருந்தவாறே ஈமெயில், இன்டர்னெற் வசதிகளை பெற்றுக் கொள்ள வழிவகுக் கின்றது தற்போது வெறும் 2%ஆக உள்ள இலங்கையரது தொழில் நுட்ப அறிவை மேலும் பல மடங்காக அதிகரிக்க இந்த இணைப்பு பெரிதும் உதவும் என எதிர்பார்க்கப் படுகின்றது.

ஸ்ரீலங்கா டெலிகொம்மின் நாடளாவிய இன்டர்னெற் சேவை LET இன் அர்ப்பணிப்புடன் கூடிய விற்பனை வலையமைப்பு என்பவற்றி னூடாக இலங்கையர்கள் பரவலாக இன்டர்னெற் வாய்ப்பை பெற்றுக் கொள்ள முடிந்துள்ளமை இவ்விரு நிறுவனங்களும் இத் துறையில் ஒன்று சேர்ந்துள்ளமையால் கிடைக்க பெற்றுள்ள முக்கிய வரப்பிரசாத மாகும். நாடு முழுவதும் இந்தச் சேவையை விஸ்தரிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**T. Kalaipriya**
A/L 2004 - Com

# A - 9 பாதை திறப்பும் அதன் விளைவுகளும்

2002ஆம் ஆண்டு சித்திரை மாதம் 8ம் திகதி தமிழீழ வரலாற்றுப் போராட்டத்திலே ஒரு முக்கியமான நாளாகும். அதாவது இலங்கையில் ஜனாதிபதிப் பொதுத் தேர்தல் 2001ஆம் ஆண்டு மார்கழி மாதம் 05ஆம் திகதி நடைபெற்றது. அதில் ஐக்கிய தேசியக் கட்சி வென்று அதன் தலைவர் ரணில் விக்கிரம சிங்க பிரதமராக தெரிவு செய்யப்பட்டார். இவர் ஆட்சிக்கு வந்தபின் பிரதமருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வேறுப்பிள்ளை பிரபாகரன் அவர்களிற்கும் இடையே 2002 மாசி மாதம் 09ஆம் திகதி ஏற்படுத்திக் கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத் தின் பிரகாரம் யாழ். கண்டி A - 09 நெடுஞ் சாலை திறந்து வைக்கப்பட்ட முக்கியமான நாளாகும்.

1990ஆம் ஆண்டு 12 வருடங்களாக மூடிக் கிடந்த யாழ். கண்டி நெடுஞ்சாலை திறக்கப்பட்டதால் சிறைச்சாலையாக காணப் பட்ட யாழ்ப்பாணம் விடுதலை அடைந்துள்ளது. A - 09 பாதை திறக்கப் பட்டதால் பல நம் பிரதேசங்கம் பல நன்மைகளையும் தீமைகளை யும் அடைந்துள்ளது. அவற்றினை விரிவாக நோக்கினால்,

போக்குவரத்து துறையினை நோக்கி னால் போக்குவரத்து என்பது துணைநிலைச் சேவைகளில் ஒன்று வர்த்தக வளர்ச்சிக்கு போக்குவரதது மிக முக்கியம் ஆனாது. வருமானம் தரும் புதிய தொழில் முயற்சி யாகவும் அமைந்துள்ளது. நினைத்தவுடன் பாணங்களை மேற்கொள்ள உதவுகிறது. குறைந்த கட்டணத்தில் பயணங்களை மேற் கொள்ள உதவி புரிகிறது, பாதை திறப்பிற்கு முன்னரும், பின்னரும் காணப்படும் பொருட்கள் சேவைகளின் விலைகளை ஒப்பிடுமிடத்து கணிசமான அளவு விலை குறைந்துள்ளது.

| (உ-ம்) | பாதை திறக்க முன்னர் | பாதை திறந்த பின்னர் |
|---|---|---|
| Surfexcel | 8/- | 6/ |
| சீனி | 38/- | 36/- |

இதற்கான காரணங்களின் ஆய்வு செய்து பார்த்தால் தரைப்பாதை திறக்க முன்னர் பொருட்களினை வியாபாரிகள் கப்பல் மூலமே குடா நாட்டுக்கு கொண்டு வந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனால் போக்குவரத்து செலவுகள் அதிகமாக இருந்தன. தற்பொழுது தரைப்பாதை மூலம் பொருட்கள் எடுத்து வரப்படுகின்றன. இதுவே விலை வீழ்ச்சிக்கு அடிப்படை காரணமாகவுள் ளது. முன்பு பொருட்கள் பற்றாக் குறையாக காணப்பட்டன. தற்பொழுது தட்டுப்பாடின்றி தாராளமாக கிடைக்கின்றன. பல தரப்பட்ட பொருட்களையும் நுகர முடிவதனால் எமது மக்களின் நுகர்வுக் கோலம் விரிவடைகிறது. தற்போதைய சூழ்நிலைகள் சாதகமானதாக காணப்பட்டன. தற்பொழுது தட்டுப்பாடின்றி தாராளமாக கிடைக்கின்றன. பல தரப்பட்ட பொருட்களையும் நுகரமுடிவதனால் எமது மக்களின் நுகர்வுக் கோலம் விரிவடைகிறது. தற்போதைய சூழ்நிலைகள் சாதகமானதாக காணப்படுவதனால் மூவின மக்களும் சங்கமிக்கும் ஒரு சந்தையாக யாழ்ப்பாணம் காணப்படுகிறது. நடைபாதை வியாபாரிகளின் வருகையால் யாழ். நகரில் வியாபாரப் போட்டி வலுத்துள்ளது. கொழும்பு சென்றால் மட்டுமே காணக்கூடியதாகவும், நுகரக் கூடியதாகவும் இருந்த அன்னாசிப்பழங்களும், அப்பிள்ப் பழங்களும், தோடம் பழங்களும் நகரில் கொட்டிக் கிடக்கின்றன. தென் பகுதி விலை யிலும் குறைவான விலைக்கு யாழ். நகரில் கிடைக்கின்றன. பிரம்பு கொண்டு வடிவமைக் கப்பட்ட கதிரைகள், சோபா செற்றுக்களைத் தோளில் சுமந்து கொண்டு தெருத்தெருவாகக் கூவி விற்கும் வியாபாரிகளை நகர்ப் புறங்களில் காண முடிகிறது. குடா நாட்டின் இன்றைய தலைமுறைக்கு இது போன்ற காட்சிகள் புத்தம் புதியவை.

நடைபாதை வியாபாரத்தால் போக்கு வரத்து நெரிசல் ஏற்பட்டு விபத்து ஏற்படுகிறது. உள்ளூர் வியாபாரிகளின் வர்த்தகம் பாதிப்பு அடைந்துள்ளது. அத்தியாவசிய உணவுப் பொருளான நெல் உற்பத்தி குறைவடைந்து பணப்பயிர் உற்பத்தியில் விவசாயிகள் ஈடுபடுகின்றனர். யாழ் மண்ணின் முக்கிய பணம்பழம், திராட்சைப்பழம் போன்றவற்றைத் தென் பகுதிக்கு எடுத்துச் செல்ல போக்கு வரத்திற்குப் பல அனுமதிகளைப் பெற வேண்டியிருந்தது. பல சிரமங்களை எதிர்நோக்கி கப்பல் மூலம் பொருட்களை கொண்டு சென்ற னர். அவ்வேளைகளில் அவை பழுதடையும் நிலை ஏற்பட்டது. இவ்வளவு சிரமத்தையும் எதிர் நோக்கி போக்குவரத்து செலவும் அதிகமாக செய்தும் சந்தையில் நியாயமான விலை கிடைக்கவில்லை இதனால் அப் பயிர் உற்பத்திகளைக் கைவிட்டு வேறு பயிர் உற்பத்தியில் ஈடுபட்டனர். சிலர் நிலங்களைப் பயன்படுத்தாது விட்டனர்.

ஆனால், தற்போதைய பாதை திறப் பினால் விவசாயிகள் பணப்பயிர் உற்பத்தியில் ஈடுபட்டு அவற்றினை தென்பகுதிக்கு ஏற்றுமதி செய்கின்றனர். இதனால் அதிகளவு வருமான மும் ஈட்டுகின்றனர் பாதை திறப்பினால் போக்கு வரத்துச் செலவு குறைவாலும் இலகுவாகக் கொண்டு செல்லக் கூடியதாக இருப்பதாலும் சந்தையில் நல்ல விலை கிடைக்கின்றது. இதனால் மீண்டும் விவசாயிகள் முயற்சியில் ஈடுபடுகின்றனர். முன்பு மாடுகள் தின்பதற்கு மேலதிகமாக இருந்த வாழைப்பழங்கள் தற்பொழுது மனிதர்கள் உண்ணக்கூட யாழில் இல்லை.

யாழ்க் குடாநாடு, கற்பகதரு என அழைக்கப்படும் பனைவனம் பொருந்திய பிரதேசம் ஆகும். பனை உற்பத்திகளான ஒடியல், நீத்துப்பெட்டி, கருப்பட்டி, பதநீர், பாய், கடகம், நீத்துப்பெட்டி போன்ற பனை உணவு உற்பத்தி பொருட்களிற்கும், கைவிளைப் பொருட்களிற்கும் கேள்வி அதிகரித்துள்ளது. எனவே குடிசை கைத்தொழிலாளருக்கு ஒரு ஊக்குவிப்பாகக் காணப்படுகிறது. இவற்றிற்கு சந்தை வாய்ப்பும் நியாயமான விலையும் கிடைக்க இப்பாதை திறப்பு உதவி அளித் துள்ளது. இதனால் வளப்பயன்பாடும், உற்பத்தி மட்ட அதிகரிப்பும் பொருளாதார வளர்ச்சியும், பிரதேச அபிவிருத்தியும் ஏற்பட்டுள்ளது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்பத்தி திகதி காரணிகளை நிலம், உழைப்பு, முதல், முயற்சி, என்பவற்றுக்கான கேள்வி அதிகரித்துள்ளது.

A - 09 பாதையூடான பலதரப்பட்ட மக்களின் வருகையினால் யாழ்ப்பாணத்தில் நிலத்திற்கான கேள்வி அதிகரித்துள்ளது. சுற்றுலாப் பயணிகளின் வருகையும் போர் காரணமாக வெளிநாடுகளிற்கு சென்றவர்கள் மீண்டும் தம் மண்ணிற்கு சுற்றுலா பயணிகளாக வருகின்றனர். யாழ். நகரில் விடுதிகள் இல்லை. இதனால் தங்குமிட விடுதிகளாக வீடுகள் மாறியுள்ளன இதனால் யாழ் நகரில் குடியிருக்க வீடுகளில்லை. பல நிறுவனங்கள் தங்களது நிறுவனங்களை அமைக்க கட்டிடம் தேடுகின்றனர். இதனாலும் நிலத்திற்கான கேள்வி அதிகரித்துள்ளது. தற்பொழுது ஒரு பரப்பு காணியின் பெறுமதி யாழ் நகரை அண்டிய பகுதிகளில் சுமார் ஏழு லட்சம் வரை உயர்ந்துள்ளது.

இலங்கை ஒரு தீவாகும் அதில் யாழ்ப்பாணம் ஒரு குடாநாடு ஆகும். மூன்று பகுதிகளும் நீரினால் சூழப்பட்டு ஒரு பகுதி மட்டும் தரையோடு இணைக்கப்பட்டுள்ளது. அத்துடன் சுற்றி சிறிய சிறிய தீவுகளும் காணப்படுகின்ற இயற்கை அன்னை தரும் வளமாகவே மின்வளம் காணப்படுகிறது. மீன்பிடித் தொழில் கடல் வலயத் தடைகள் நீக்கப்பட்டமையால் மீனவரது வருமானம் அதிகரித்துள்ளது.

1990ஆம் ஆண்டுக்கு முன்பு யாழ் மாவட்டத்தில் ஐந்து ஐஸ் தொழிற்சாலைகள் இயங்கின. ஆனால் அதன் உற்பத்தி போதுமானதாக இல்லாததினால் தென்னிலங்கையிலிருந்து ஐஸ் கட்டி இறக்குமதி செய்யப்பட்டன. மேலும் கடலுணவு ஏற்றுமதி நிறுவனங்களாக தென்னிலங்கையைச் சேர்ந்த அன்றீஸ். ஏ. எம். எல். பொஸ்கொட்ஸ் போன்றவை இங்கு முகாமிட்டு கடலுணவைக் கொள்முதல் செய்தன. இவைகளுக்கு உதவியாக 100க்கு மேற்பட்ட கிளை நிறுவனங்களிலும் இயங்கி வந்தன. இதன் காரணமாக சுமார் 1000ற்கு மேற்பட்டோர் வேலை வாய்ப்பைப் பெற்றனர். இந்த மூன்று நிறுவனங்கள் மூலமாக 15 நாட்களிற்கு ஒரு தடவை 25 மில்லியன் ரூபா பெறுமதியான கடலுணவுக்ள் கொள்முதல் செய்யப்பட்டு தென்னிலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டன. அத்துடன் மீன் பதனிட்டும், உலரவிட்டும் தென்னிலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டன. யுத்தம் காரணமாக கடந்த 10 வருடங்களாக வீழ்ச்சியுற்ற கடலுற்பத்தி தற்போது மீண்டும் கட்டியெழுப்பப்படுகிறது. அன்றீஸ் கம்பனி மீண்டும் கட்டியெழுப்ப முயற்சி செய்யப்படுகிறது.

குடா நாட்டில் அதிக கடல்வளங்கள் காணப்படுகிறது. இவை முன்பு கடற்பாதையால் கொண்டு செல்ல அதிக செலவு ஏற்பட்டது ஆனால் பாதை திறந்ததால் செலவு குறை எனவே மீனவர்கள் இறால், கருவாடு, சுறா, கடலட்டை போன்றவற்றை தென்பகுதிக்கு ஏற்றுமதி செய்து சம்பாதிக்கின்றனர். சந்தை வாய்ப்பும் கிடைக்கிறது நியாயமான விலையும் கிடைக்கிறது உள்ளூர் நுகர்வுக்கு கடலுணவுகள் பற்றாக்குறையாக உள்ளது.

யாழ். நகரில் தமது நிறுவனங்களை அமைக்க பல நிறுவனங்கள் போட்டியிடுகின்றன. வியாபாரமும் துணை நிலைச் சேவைகளும இணைந்தே வர்த்தகம் தோற்றுவிக்கப்படுகிறது. வர்த்தகமும் உற்பத்தியும் இணைந்தே வணிகம் தோற்றுவிக்கப்படுகிறது. துணை நிலைச் சேவைகளான பணம், வங்கி, காப்புறுதி போக்குவரத்து, தொடர்பாடல் களஞ்சியப்படுத்தல் போன்றவை வளர்ச்சி அடைந்துள்ளன. வங்கித்துறை சார்பாக செலான்வங்கி போன்ற வங்கிகள் தடம் பதித்துள்ளன. காப்புறுதி நிறுவனங்களான, யூனியன், அசூரன்ஸ், ஜனசக்தி, காப்புறுதி, சிலிங்கோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற காப்புறுதி நிறுவனங்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. இதனால் மக்களிடையே காப்புறுதிச் சேவை விரிவடைந்துள்ளது. போக்குவரத்துத் துறையை நோக்கினால் போக்குவரத்து ஊடகங்களில் ஒன்றான தரைப் பாதை திறந்ததால் அதன் முக்கியத்துவம் அதிகரித்துள்ளது. முன்பு கப்பல் வழியாகவும், சில காலங்களின் பின்னர் விமான் மூலமுமே யாழிலிருந்து தென்னிலங்கைக்கு செல்ல வேண்டியிருந்தது. அதுவும் அனைவரும் நினைத்தவுடன் பயணம் செய்ய முடியாது அதுவும் பல அனுமதிகளையும் பெறவேண்டி யிருந்தது. போக்குவரத்துச் செலவும் அதிகமாக விருந்தது. ஆனால் இன்று நினைத்தவுடன் நினைத்த விடத்திற்கு அனுமதிகள் பெற வேண்டிய அவசியமின்றி குறைந்த செலவுடன் பயணங்களை மேற்கொள்ள முடிகிறது அத் துடன் இப் பாதை திறப்பினால் பல தொழில் முயற்சிகளும் வேலை வாய்ப்பும் கிடைத் துள்ளது. சந்தையில் போக்குவரத்து சாதனங் களிற்கான கேள்வி அதிகரித்துள்ளது.

தொடர்பாடல் துறையை நோக்கின் ஸ்ரீலங்கா ரெலிகொம்மின் சேவை விரிவடைந் துள்ளது. (கிளிநொச்சி) வன்னிமாவாட்டத்திலும் இதன் சேவை விரிவடைந்துள்ளது. கைத் தொலைபேசிச் சேவையை டயலொக் ஜி. எஸ். எம். (Dialog G.S.M) நிறுவனம் அறிமுகப் படுத்தியுள்ளது. இப்பாதை திறப்பினால் தொடர்பாடலின் முக்கியத்துவம், யாழில் அதி கரித்துள்ளது.

இப் பாதை திறப்பினால், களஞ்சியப் படுத்தலின் முக்கியத்துவம் எமது மண்ணில் அதிகரித்துள்ளது. எமது பிரதேச பருவகால உ/திப் பொருட்களினை சந்தையில் கேள்வி அதிகமாக இருக்கும் போதும், தட்டுப்பாடு நிலவும் போது விற்பனை செய்வதற்கு களஞ்சி யப்படுத்தல் அவசியமாகிறது. இதனால் விலைத் தளம்பலைக் குறைத்து தட்டுப் பாட்டினை நீக்கலாம்.

இவற்றையெல்லாம் வைத்துப் பார்க்கும் போது A - 09 பாதை திநுற்ததனால் பல துறைகளும் வளர்ச்சி பெற்று யாழ்ப்பாணம் ஒரு அபிவிருத்தியை நோக்குகிறது எனலாம்.

**இ. கீர்த்திகா**
2004 A/L Com

ஹென்றி போர்ட் – பண்ணைத் தொழிலாளியின் மகனாகப் பிறந்து உலகம் போற்றும் விஞ்ஞானியாக வாழ்ந்தவர்.

கரிபால்டி – இத்தாலியில் ஒரு மீனவரின் மகனாகப் பிறந்து பெரும் புரட்சியை ஏற்படுத்தி, அந்த நாட்டை வழிநடத்தியவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக விஞ்ஞானம்

## சமூக விஞ்ஞானம் ஓர் நோக்கு:

மனித நடத்தை, சமூக நடத்தை பற்றிய ஒரு ஆய்வுத்துறையே சமூக விஞ்ஞானம் என்பர். இத்தகைய சமூக விஞ்ஞானம் - மனிதன், சமூகம் ஆகியவற்றுடன் நெருங்கிய தொடர்புபட்டதாகக் காணப்படுகிறது. இதற்குப் பின்வரும் துறைகளைக் காட்டலாம்.

(உ-ம்) பொருளியல், தொல்பொருளியல், வரலாறு, அரசியல், சட்டம், முகாமையியல், வணிகம், கணக்கியல், மானிடவியல், சமுகவியல், உளவியல்.

மேலும், சமூக விஞ்ஞானத்தைப் பொறுத்த வரையில் பரிசோதனை முறை கையாள முடியாது. இதனால் இங்கு அவதானத்தின் அடிப்படையில் அமைந்த முறைகளே முக்கியம் பெறுகின்றன.

(உ-ம்) பேட்டிமுறை, வினாக்கொத்துமுறை, தனியார் ஆய்வு ஏடுகளின் ஆய்வுமுறை, மாதிரி போன்ற முறைகள்.

இவ்வகையான விஞ்ஞானங்கள் கூடுதலான அளவுக்கு இரண்டாம் தர விஞ்ஞானங்களாகக் கருதப்படுகின்றன. இக்கருத்துத் தொடர்பாகப் பின்வரும் வினாக்களில் மாணவர் கவனம் செலுத்தி அது தொடர்பான விடையை மாணவர் தேடல் முறையில் பெறுதல் வேண்டும்.

1) **இக் கூற்றின் தாற்பரியம்?**
2) **இந்நிலை ஏற்படுவதற்கான காரணம்?**
3) **இன்று சமூக விஞ்ஞானங்கள் இந்நிலையில் இருந்து விடுபட மேற்கொள்ளும் நடவடிக்கை?**

அடுத்து சமூக விஞ்ஞானங்களின் பயன்பாடுகள் பற்றி மாணவர் ஆய்வு செய்வது முக்கியமானது ஆகும்.

இவற்றில் பின்வரும் பயன்பாடுகளை மாணவர் உதாரணத்துடன் விளக்குதல் அவசியமானது ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* சமூக விஞ்ஞானத்தின் துறையாகிய உள வியல் அறிவும், உளவியலில் உள்ள கண்டுபிடிப்புக்களும் நடைமுறைப் பிரச் சினைக்குத் தீர்வு காணப் பயன்படுகிறது என விளக்குதல்.

* சமூகத் தோற்றப்பாடுகளையும், சமூகத்தின் செயற்பாடுகளையும் விளங்கிக் கொள்ள சமூக விஞ்ஞானம் பயன்படுகிறது எனக் கூறுதல்.

* அடுத்து, சமூக விஞ்ஞான அறிவானது சமூகம் முழுமைக்கும் பலவிதமான நன்மை களை ஏற்படுத்துகிறது என்பதை விளக்கு தல்.

சமூக விஞ்ஞானங்களில் - அடுத்து, அங்கு பயன்படுத்தப்படும் விளக்க வகைகளை மாணவர் தெரிந்து கொள்ளுதல் வேண்டும். சமூக விஞ்ஞான விளக்கங்களானது பின்வரு வன ஆகும்.

**1) காரணகாரிய விளக்கம்**
**2) நோக்கக் கொள்கை விளக்கம்**
**3) தொழிற்பாட்டு விளக்கம் / செயற்பாட்டு விளக்கம் இவற்றை மாணவர் உதாரணத் துடன் தெரிந்து கொள்ளுதல் அவசியமானது ஆகும்.**

அடுத்து, சமூக விஞ்ஞானத்துறைகளா கிய சிலவற்றில் உள்ள விஞ்ஞானத் தன் மையை மாணவர்கள் விளங்கிக் கொள்ளுதல் வேண்டும். அதாவது - உளவியல், வரலாறு, தொல்பொருளியல் போன்ற துறைகளில் உள்ள விஞ்ஞானத் தன்மையை ஆராய்வது முக்கியமானதாகும். இங்கு, உளவியல் எனும் துறையை நோக்கும் போது - அங்கு இயற்கை விஞ்ஞான அம்சங்களும், சமூக விஞ்ஞான அம்சங்களும் காணப்படுகின்றன என்பதை - மாணவர், ஆசிரியர்களிடம் கற்க வேண்டும். மேலும், தொல் பொருளியலில் உள்ள விஞ்ஞான அம்சங்களை அறிதல், வரலாற்றின் விஞ்ஞானத் தன்மையை நோக்குமிடத்து, வரலாற்றினுடைய விஞ்ஞானத் தன்மையும், வரலாற்றின் விஞ்ஞானம் அல்லாத் தன்மையும் மாணவர் அறிந்து கொள்ளுதல் அவசியம்.

அடுத்து, சமூக விஞ்ஞானத்தின் எதிர்வு கூறலை நோக்கும் போது சமூக விஞ்ஞானத் தில் வாய்ப்புப் பார்க்கக் கூடிய எதிர்வு கூற லைப் பெறுவது மிகவும் கடினமானது ஆகும். எடுத்துக் காட்டாக, கார்ல் மாக்சின் எதிர்வு கூறலை வாய்ப்புப் பார்க்க முடியாது. இதற் கான காரணங்களைக் குறிப்பிடுதல் அவசிய மானதாகும். இவற்றில் முக்கிய காரணமாகச் சமூக விஞ்ஞானக் கோட்பாடுகள் கவர்பாடுடை யதும், நிச்சயத்தன்மையற்றதும் அனுபவத்தில் சோதிக்க முடியாததுமான எண்ணக்கருக்களை உள்ளடக்கியது.

(உ-ம்) சிக்மண்ட் புரொய்டின் உளப்பகுப்புக் கோட்பாட்டில் பயன்படுத்தப்பட்டுள்ள நனவு மனம், நனவிலிமனம், இட், ஈகோ, சுப்பர் ஈகோ போன்ற எண்ணக்கருக்கள் எனினும், சிலவேளை களில் வாய்ப்பு பார்க்கக்கூடிய சரியான எதிர்வு கூறலுக்கும் சாத்தியம் உண்டு என்பதை தெரிதல் வேண்டும்.

(உ-ம்) உல்லாச பிரயாணிகள் வரும்போது நாட்டுக்கு வருமானம் அதிகரிக்கும் எனும் எதிர்வுகூறல்.

அடுத்து, சமூக விஞ்ஞானத்தில் காணப்படும் கோட்பாடுகளில் பல சோதிக்க முடியாதவை யாகும். ஏனெனில், அவற்றைச் சோதிப்பதில் இடர்பாடுகள் காணப்படுவதே இதற்குக் காரணம்.

எடுத்துக்காட்டாக, சமூக விஞ்ஞானக் கோட் பாடுகள் மனித நடத்தைகள் பற்றி விளக்கு வதால் அவற்றைச் சோதிப்பதற்கு பரிசோதனை கள், கருவிகள் ஆகியவற்றைப் பயன்படுத்த முடியாது.

(உ-ம்) சமூக ஒப்பந்தக் கோட்பாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றைவிட, சமூக விஞ்ஞானக் கோட்பாடுகளில் பல சோதிக்க முடியாதவை என விளக்குவதற்கு மாணவர் மேலும் சில விளக்கங்களைத் தெரிந்திருத்தல் அவசியமானது ஆகும்.

அடுத்து, உறுதியான தரவுகள் போதியளவு இல்லாமையினால் சமூக விஞ்ஞானங்கள் பாதிப்படைந்துள்ளதை மாணவர் தெரிந்து கொள்வது அவசியமானதாகும். அதாவது, சமூக விஞ்ஞானத் தரவுகளின் ஸ்திரத்தன்மை குறைவாக உள்ளது என்ற கருத்தை ஆராய்தல் வேண்டும். சமூக விஞ்ஞான ஸ்திரத்தன்மை குறைவுக்குக் காரணங்களை, ஆசிரியரின் வழிகாட்டல் மூலம் அறிந்து கொள்ள வேண்டும்.

சமூக விஞ்ஞானமானது, அதனுடைய ஆய்வுக்குப் பயன்படுவது அவதான முறையாக இருந்தாலும் அவை புள்ளியியல் (எண் ரீதியான) தன்மை கொண்டவை ஆகும். சமூக விஞ்ஞானத்தில் பரிசோதனை பயன்படுத்த முடியாத காரணத்தால் அவதானத்தை அடிப்படையாகக் கொண்ட பேட்டி முறை, வினாக் கொத்து முறை, தனியாள் ஆய்வு முறை என்பவை பயன்படுகின்றன. இவற்றின் மூலம் பெறப்படும் தரவுகள் பெருமளவுக்கு பண்பு ரீதியான தரவுகளாகக் காணப்படுகின்றன. இவை கணித ரீதியான தரவுகளாகவும் காணப்படுகின்றன. இவை கணித ரீதியான பகுப்பாய்வுக்கும், விஞ்ஞான முன்னேற்றத்திற்கும் ஏற்றவை அல்ல. எனவே கணித ரீதியான பகுப்பாய்வு செய்வதற்கு எண் ரீதியான தரவுகள் தேவை.

இந் நிலையில் சமூக விஞ்ஞானத்தில் அவதான முறைகளூடாகப் பெறப்பட்ட பண்பு ரீதியான தரவுகளை எண் தரவுகளாக மாற்றுவதற்கும், கணித ரீதியான பகுப்பாய்வுகளைச் செய்தற்கும் புள்ளிவிபர முறைகள் உதவுகின்றன. அதாவது, மாதிரி போன்ற முறைகளும், சராசரி முறைகள் போன்றவையும் ஆகும். இதனால் சமூக விஞ்ஞானம் அளவீட்டுத் தன்மை வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

அடுத்து, சமூக விஞ்ஞானத்தில் கணனி பயன்படுத்தும் விதம் பற்றி அறிவது அவசியமானதாகும். இன்று - வணிகம், போக்குவரத்து, தொடர்பாடல், கல்வி, விளையாட்டு என எல்லாச் சமூக விஞ்ஞானத் தோற்றப்பாடுகளிலும் கணனி பயன்படுத்தப் படுகின்றது. எனினும் - சமூக விஞ்ஞானத்தில் கணனி பயன்படுவதை உதாரணங்கள் மூலம் மாணவர் ஆசிரியரிடம் அறிய வேண்டும்.

சமூக விஞ்ஞானத்தைப் பொறுத்தவரையில் ஒரு தோற்றப்பாடு தொடர்பாகப் பல கோட்பாடுகள் காணப்படுவது சமூக விஞ்ஞானத்தின் பலவீனம் ஆகும். எடுத்துக்காட்டாக - அரசியல் விஞ்ஞானத்தில் அரசின் தோற்றம் பற்றி மாக்சிசக் கோட்பாடு, சமூக ஒப்பந்தக் கோட்பாடு போன்றவை காணப்பட்டன. இங்கு எதனை ஏற்பது எதனை நிராகரிப்பது என்பதில் பல பிரச்சினை எழுகிறது. இதனால் சமூக விஞ்ஞானம் பலவீனம் அடைந்துள்ளது. இது தொடர்பான மேலதிக விடயம் ஆசிரியரிடம் கற்றல் வேண்டும்.

சமூக விஞ்ஞான விதிகள், கொள்கை பற்றி மாணவர் அறிவது அடுத்து முக்கியமானதாகும். சமூக விஞ்ஞான விதிகளாக சமூக விஞ்ஞானத் துறைகளாகிய பொருளியல், சமூகவியல் என்பவற்றில் இருந்து விதிகளைக் குறிப்பிடலாம்.

1) கேள்வி விதி
2) நிரம்பல் விதி
3) கெயின்சின் பொருளாதார கோட்பாடு
4) மல்தூஸின் சனத்தொகைக் கோட்பாடு
5) சமூக ஒப்பந்தக் கோட்பாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக விஞ்ஞானத்தில் சோதனை தொடர்பாகவும், கருவிகள் தொடர்பாகவும் அறிந்து வைத்திருத்தல் வேண்டும். இயற்கை விஞ்ஞானம் ஆய்வு செய்யும் இயற்கை தோற்றப்பாடுகளை கட்டுப்பாட்டுக்கு உட்படுத்தி ஆய்வு செய்வதனைப் போல, சமூக விஞ்ஞானம் ஆய்வு செய்யும் சமூக தோற்றப் பாடுகளைக் கட்டுப்பாடுகளுக்கு உட்படுத்தி சோதனை செய்ய முடியாது.

மேலும் - சமூக விஞ்ஞானத்தைப் பொறுத்தவரையில் இயற்கை விஞ்ஞானத் துடன் ஒப்பிடும்போது கருவிகளின் பயன்பாடு மிகவும் குறைந்த நிலையில் காணப்படுறது. சில இடங்களில் மட்டும் கருவிகள் பயன் படுகின்றன. இது தொடர்பான வினாக்களும் மேலதிக விளக்கமும் ஆசிரியர் மூலம் தெரிந்து கொள்ள வேண்டும்.

சமூக விஞ்ஞானங்களில் புறவயத் தன்மையை நோக்கும் போது புறவயம் என்பது ஆய்வாளன் ஒருவன் தனது சொந்தக் கருத் துக்களுக்கு இடமளியாது, தனது புறத்தே உள்ள விடயங்களைத் தெரிந்து கொள்ளுதல் ஆகும். சமூக விஞ்ஞானத்தைப் பொறுத்த வரையில் - புறவயத் தன்மையானது மிகவும் குறைந்த நிலையிலேயே காணப்படுகின்றது. இதற்கான காரணங்களையும், வினாக்களின் வடிவங்களையும் மாணவர்கள் ஆசிரியரிடம் தெரிந்து கொள்ளுதல் வேண்டும்.

அடுத்து, சமூக விஞ்ஞானத்தைப் பொறுத்த வரையில், சமூக விஞ்ஞானத் தரவு சேகரிக்கும் முறைகள் முக்கியமானதொன் றாகும். சமூக விஞ்ஞானத்தில் தரவு சேகரிக்கும் முறைகள் பலவாகும். அவற்றில் முக்கியமா னவை பின்வருவன ஆகும்.

1) வினாக்கொத்து முறை / கேள்விக் கொத்து முறை இம்முறை என்றால் என்ன? பண்புகள், நன்மைகள், தீமைகள் போன்றவற்றை மாண வர் அறிய வேண்டும்.

2) பேட்டி முறை / செவ்வி முறை / நேர்காணல் உரையாடல் முறை போட்டி முறை என்றால் என்ன? பண்புகள், நன்மைகள், தீமைகள் பற்றி அறிந்து கொள்ள வேண்டும்.

3) கட்டுப்பாட்டுக் குழு முறை
இம்முறை என்றால் என்ன என்பதும் சமூக விஞ்ஞானத்தில் கட்டுப்பாட்டுக் குழு முறை யின் பயனும் இயற்கை விஞ்ஞானத்தில் கட்டுப்பாட்டுக் குழு முறையின் பயன் பற்றி யும் அறிந்து கொள்ளுதல் வேண்டும்.

4) ஏடுகளின் ஆய்வு முறை
5) அகழ்வாய்வு முறை
6) தனியாள் ஆய்வு முறை
7) அகநோக்கு முறை / உண்ணோக்கு முறை
8) வெளிக்கள ஆய்வு முறை
9) சமூக அளவை முறை
10) வளர்ச்சி ஆய்வு முறை

அடுத்து - சமூக விஞ்ஞானத்தில் தொன்மைப் பழங்குடியினரை ஆய்வு செய்யும் போது ஏற்படும் இடர்பாடுகளை மாணவர் தெரிந்து கொள்ள வேண்டும். இங்கு சில இடர்பாடுகள் காரணமாகவே தொன்மைப் பழங்குடியினரை ஆய்வு செய்யும் ஆய்வாளன் நீண்டகாலம் அவர்களுடன் தங்கியிருந்து நேரடியான அவதானங்களின் மூலமாக அவர்களை பற்றிய தகவல்களைப் பெற வேண்டியுள்ளது.

மாணவர் பின்வரும் வினாக்களில் கவனம் செலுத்த வேண்டியது அவசியமானது ஆகும்.

1) சமூக விஞ்ஞானங்களின் விஞ்ஞானத் தன்மை குறைவதற்குக் கீழ்வரும் காரணி களைத் துணை கொண்டு விளக்குக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1) தரவுகள் தொடர்பான பிரச்சினை
2) விஞ்ஞான முறை தொடர்பான பிரச்சினை
3) கருதுகோள் தொடர்பான பிரச்சினை
4) காரணகாரியம் தொடர்பான பிரச்சினை

2) சமூக விஞ்ஞானத்தின் புள்ளி விபரவியல் பயன்படு முறையை உதாரணம் மூலம் விளக்குக.

3) சமூக விஞ்ஞானங்கள் தங்களது பிரதான முறையாக நோக்கல் முறையைப் பின் பற்றுகின்றன.

1) இங்கு நோக்கல் என்பதனை வரையறை செய்க.

2) சில சமூக விஞ்ஞானங்கள் இம் முறையை மாற்றி அமைப்பதாகக் கூறப் படுகிறது. இதன் தாற்பரியம் யாது?

3) சமூக விஞ்ஞானங்கள் ஏன் தனது பிர தான ஆய்வு முறையாக நோக்கல் முறையினை பின்பற்றுகின்றன?

---

மலருக்கு மணமும் மனிதனுக்கு குணமுமே அவசியம்

தினமும் நாம் செய்யும் வேலைதான் நமக்கு உற்ற தோழன்

பிறருக்கு நன்மை செய்யப் பிறந்த நீ நன்மை செய்யாவிட்டாலும் தீமையாவது செய்யாதிரு

முடியாது என்ற வார்த்தையை உனது அகராதியிலிருந்து எடுத்து விடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகின் ஒரு பார்வையில்....
# இணையத்தினூடான இலத்திரனியல் வர்த்தகம்

இன்றைய உலகில் நடைபெறும் அனைத்து செயற்பாடுகளையும் கணணிகள் மூலம் அறிந்து கொள்ளும் அளவிற்கு தற்போது தொழில்நுட்பம் வளர்ச்சியடைந்துள்ளது. இன்றைய தகவல் தொழில் நுட்பத்தில் Internet ஆனது பரவலாக்கப்பட்ட பின்னர் மிகவும் இலகுவாகவும் விரைவாகவும் தகவல் பரிமாற்றப்படுகின்றன.

1990ஆம் ஆண்டு பொதுமக்களின் பாவைனைக்கு அறிமுகப்படுத்தப்பட்ட இவ் இணையமானது இன்று பரவலாக எல்லா நாடுகளிலும் பயன்படுத்தப்படுகிறது. இணையத்தின் World wide wetb மிக முக்கியமான பகுதியாகும் இவ் அமைப்பானது எழுத்துக்கள், படங்கள், ஒலிகள், விதிமுறைகள் போன்ற Programme உள்ளடக்கப்பட்டதாகும். இவ் வெப்தளங் தளங்களில் கணனி எனும் மொழியைப் பயன்படுத்தியே வடிவமைக்கப்படுகின்றன. ஆனாலும் Visual Basic, Java போன்ற Programming language ஐக் கொண்டே வெப்தளங்களை வடிவமைக்க முடியும்.

இணையத்தில் உள்ள எதாவது ஒரு வெப்தளத்திலிருந்து தகவலைப் பெறுவதற்கு கணணியுடன் பின்வருவன இருத்தல் அவசியமாகும்.

1) Modem
(சமிஞ்கைகளை கணணிற்கு வழங்குவதற்காக)
2) தொலைபேசி இணைப்பு
(இவ் அமைப்பில் தொடர்பினை ஏற்படுத்த)
3) இணைய சேவை வழங்கும் நிறுவனத்தினூடாக இணைய இணைப்பு
4) கணணி மென்பொருள்.

சர்வதேச வலைப்பின்னல் வேலைத் திட்டங்களையும் கணணிகளையும் பயன்படுத்தி சர்வதேச ரீதியான தகவலைப் பரிமாற்றுவது இவ் இணையத்தின் பிரதான செயலாகும். இவ் இணையத்தில்.

1) பங்குச்சந்தை
2) சகல நாட்டுப்பத்திரிகைகள்
3) வானிலை தொடர்பானவை
4) நாணய மாற்று வீதம்
5) வியாபாரம்
6) வர்த்தகம்
7) மருத்துவம்
8) யுத்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற பல தகவல்களை எம்மால் அறிந்துகொள்ள முடிகிறது. இவ் இணையத் தினூடாக வர்த்தகத்தினை மேற் கொள்ளும் போது அது இலத்திரனியல் வர்த்தகமாகும். இவ் வர்த்தகமென்பது குறித்த ஒரு பொருளை கொள்வனவு செய்வதற்கு அல்லது விற்பனை செய்வதற்கு இணையத்தினூடாக நடைபெறும் செயற்பாடாகும்.

வர்த்தகத்தின் பிரதான வியாபார மேம் பாட்டு தூண்டுகோலாக விளம்பரம் காணப் படுகின்றது. வர்த்தகத்தில் ஈடுபடும் உற்பத்தி யாளனன் பல நிறுவனங்களைப் பற்றியும் உற் பத்திப் பொருட்களை விளம்பரம் செய்யவும் உற்பத்தியாளனின் சிறந்த தகவல் தளமாக இது விளக்குகின்றது.

இணைய வர்த்தகத்தின் மூலம் மக்கள் அடையும் நன்மைகளாக,

1) இங்கு பணக் கொடுப்பனவானது கடன் அட்டைகளின் அடிப்படையில் மேற்கொள் ளப்படுவதனால் மிகமிக முக்கிய நேரத் தில் பணக்கொடுக்கல் வாங்கலானது வங்கிகளூடாக தீர்க்கப்படுகின்ற சூழ் நிலை காணப்படுவதனால் வங்கிகளின் சுமை குறைவடைவதுடன் காலதாமதங் களும் வீண் விரயங்களும் தவிர்க்கப்படு கின்றன.

2) போட்டியாளர்கள் பற்றிய தகவல்களை அறிய முடிதல்.

3) உடனடியாகவும் குறைந்த செலவிலும் சர்வ தேச சந்தைக்கு விளம்பரம் செய்ய முடிதல்

4) கல்வி, மருத்துவம், பங்குச்சந்தை போன்ற பல்வேறு தகவல்களைப் பெறலாம்.

இவ் இணையத்தின் பிரதி கூலங்களாக

1) கொள்வனவாளர் தனது விருப்பத்திற்கேற்ப தொட்டுணர்ந்து பேரம் பேசி கொள்வனவு செய்ய முடியாது.

2) கொள்வனவாளரை டொருட்கள் வந்தடையும் வரை காத்திருத்தல் வேண்டும்.

3) கொள்வனவுச் செலவைவிட கொள்வனவு செய்த பொருட்களை வீட்டுக்கு கொண்டு வரும் செலவு அதிகமாகக் காணப்படுதல்.

ஒரு வியாபாரி குறித்ததொரு பொருளை வெப்தளத்தினூடாக விற்பனை செய்யும் போது கடனட்டை இலக்கம், பயன்படுத்துபவர் பெயர், கடவுச்சொல் என்பவற்றைக் கொடுத்து தன்னைக் குறித்த வெப்தளத்தில் பதிவு செய்த பின்னரே இலத்திரனியல் வர்த்தகத்தில் ஈடுபடலாம். இவ் இணையத்தில் பல நிறுவ னங்கள் விற்பனைச் சேவையினை ஆற்று வதற்கென வெப்தளங்களை உருவாக்கி சேவையினை மேற்கொண்டு வருகின்றன. இவ்வாறான இணையத்தின் மிகச் சிறந்த விற்பனைத் தளமாக பின்வருவனவற்றைக் கூறலாம்.

w.w.w. Classifieds 2000. Com
w.w.w. Actionuniverse 2000 Com
httpllactions yahoo. Com. (இத்தளத்தினூடாக உயிருள்ளவை, போதைப்பொருள், குண்டு, கஞ்சா போன்றன விற்பனை செய்ய முடியாது)

| வெப்தளத்தின் முகவரி | விற் செ. பொருட்கள் |
|---|---|
| w.w.w. kabad: vazaar.Com | பழைய பொருட்கள் வாங்கி விற்கும் வியாபாரம். |
| w.w.w. jald: Com | உலகிலுள்ள சகல முன் ணணி மின்சார உற்பத்தி நிறுவனங்களின் மின்சார உபகார வியாபாரம். |

இந்த வகையில் இலத்திரனியல் வர்த்தகம், இலத்திரனியல் அஞ்சல்முறை, ஊழியர் சேவை போன்றன வளர்ச்சியடைந் துள்ளன. உலகிலே ஜப்பான், அமெரிக்கா, இங்கிலாந்து, ஜேர்மன் போன்ற நாடுகள் சிறந்த தேர்ச்சியான உற்பத்தியிலும் சிறந்த தொழி நுட்பத்தினாலும் இந் நாடுகளின் மக்களின் வேலைவாய்ப்பு கிடைப்பனவும், வருமானக் கிடைப்பனவும், வாழ்க்கைச் செலவை பூர்த்தி செய்யக்கூடிய நிலையிலும் இந்நாடுகளின் அபிவிருத்தியானது மேன்மேலும் உயர்ந்து அபிவிருத்தியடைய இணையத்தினூடான வர்த் தகம் மிக முக்கியமான தொன்றாகும்.

சுபிதா – பிறைசூடி
2004 A/L Com[A]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செலவு - தொகை இலாபப் பகுப்பாய்வு / இலாநட்டமற்ற புள்ளிப் பகுப்பாய்வு

**Cost volume profit analysis / Break-even point analysis**

## 1.0 அறிமுகம் (Introduction)

இன்றைய நவீன வியாபார சூழலில் நிறுவனங்களிடையே போட்டி காணப்படு கின்றது. எனவே, ஒரு நிறுவனம் சந்தையில் நிலைத்திருப்பதற்கு அந் நிறுவனம் செயற்றிறன் மிக்கதாகக் காணப்படல் வேண்டும். நிறுவன செயற்றிறனை மதிப்பீடு செய்வதில் வருமானம், செலவு, இலாபம் என்பன முக்கிய பங்கு வகிக்கின்றது. செலவீனங்கள் இலாபத்துடன் நெருங்கிய தொடர்பினைக் கொண்டிருப்பதனால் இவை தொடர்பான தீர்மானம் எடுத்தலில் பல்வேறு நுட்பங்கள் பயன்படுத்தப்படுகின்றது. அந்த வகையில் குறுங்கால தீர்மானம் எடுத்தலில் செலவு-தொகை இலாபப் பகுப் பாய்வானது அதி முக்கியத்துவம் கொண்ட தாக விளங்குகின்றது.

## 2.0 செலவு தொகை இலாபப் பகுப்பாய்வு (Cost-volume profit analysis)

இலாப நட்டமற்ற புள்ளிப் பகுப்பாய்வு என்பது பல்வேறு செயற்பாட்டு மட்டங்களில் கிரயம், தொகை, இலாபம் என்பவற்றிற்கு இடையேயான தொடர்பை ஆய்வு செய்கின்ற ஒரு பகுப்பாய்வு முறையாகும். இலாபமோ அல்லது நட்டமோ அற்ற செயற்பாட்டு மட்டம் இலாப நட்டமற்ற புள்ளியாக வரையறுக் கப்படுகின்றது. இப் பகுப்பாய்வானது தனியே இலாப நட்டமற்ற புள்ளியை மட்டும் வெளிப் படுத்துவதில்லை. பல்வேறு செயற்பாட்டு மட்டங் களிலும் செலவு, தொகை, இலாபம் என்ப வற்றை வெளிப்படுத்துவதாலும் செலவு, தொகை, இலாபப் பகுப்பாய்வு எனவும் கூறப் படுகின்றது.

இப் பகுப்பாய்வுக்கு எல்லைக் கிரய வியலின் அனேகமான கொள்கைகள் பயன் படுத்தப்படுகின்றன. குறுங்காலத் திட்டமிடல் நோக்கங்களிற்கு இது மிக முக்கியமானதாகும். செயற்பாட்டு மட்டங்களில் சிறு மாற்றங்கள் பிரேரிக்கப்படுமிடத்து கிரயம், வருமானம், வெளியீட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டம், அவற்றின் பெறுபேறான இலாபம் என்பவற்றிற்கிடையிலான தொடர்பை வெளிப்படுத்தும். இச் சந்தர்ப்பங்களில் தீர்மானங்களை மேற்கொண்டு கிரய அமைப்பை தொடர்ந்து அமைக்க உதவு கின்றது. ஆனால் நீண்டகாலத்தில் நிலையான கிரயம், அலகிற்கான மாறும் கிரயம் என்பன மாறுமாதலால் நீண்டகாலத்திற்கு இப் பகுப்பாய்வு பொருத்தமற்றதாகின்றது.

## 2.1 செலவு தொகை இலாப ஆய்வின் எடுகோள்கள் (Assumptions of CVP analysis)

இவ் ஆய்வானது சமன்பாட்டு ரீதியா கவோ, வரைபட ரீதியாகவோ ஆய்வு செய்யப் படலாம். அவ்வாறு ஆய்வு மேற்கொள் ளப்பட முன்னர் பின்வரும் எடுகோள்கள் மேற்கொள்ளப் படல் அவசியமாகின்றது.

- எல்லாக் கிரயங்களும் நிலையான, மாறும் கிரயங்களாகப் பகுக்கப்பட முடியும்.
- நிலையான கிரயம் மாறாது. மாறும் கிரயம் செயற்பாட்டு மட்ட விகிதாசாரத்திற்கு ஏற்ப மாற்ற முறும்.
- செயற்பாட்டு வீச்சிற்குள் கிரயங் களும் வருமானங்களும் ஏகபரி மாணத் தொடர்புடையவை எனக் கொள்ளப்படுகின்றது.
- கிரயத்தையும் வருமானத்தையும் பாதிக்கின்ற ஒரேயொரு காரணி தொகை மாத்திரமேயாகும்.
- தொழில்நுட்பம், உற்பத்தி முறை கள், வினைத்திறன் என்பன மாற்ற மடையாதிருக்கும்.
- குறிப்பாக வரைபட ரீதியாக இப் பகுப்பாய்வு ஒரு பொருளுடன் மாத்திரமே தொடர்புடையது அல் லது நிலையான உற்பத்திக் கலவையுடன் தொடர்புடையது எனக் கொள்ளப்படும்.
- இருப்பு மட்ட மாற்றங்கள் எதுவு மில்லை அல்லது இருப்புக்கள் எல்லைக் கிரயத்தில் மட்டுமே பெறுமதியிடப்படுகின்றது.

## 2.2 சமன்பாட்டு ரீதியிலான அணுகுமுறை (The formula approach)

### 2.2.1 இலாப நட்டமற்ற புள்ளி (Break even point)

இலாபமானது பூச்சியமாக உள்ள விற்பனை மட்டம் அல்லது புள்ளி இலாப நட்டமற்ற புள்ளி எனப்படுகின்றது. அதாவது எவ் விற்பனை மட்டத்தில் மொத்தச் செலவானது மொத்த விற்பனை வருவாய்க்கு சமனாக உள்ளதோ அவ் விற்பனையே இலாப நட்டமற்ற புள்ளி எனலாம். எனவே, இப் புள்ளியில் பங்களிப்பானது நிலையான செலவுக்குச் சமனானதாகக் காணப்படும். எனவே,

$$S = V + F$$

இங்கு S - விற்பனை வருமானம் (sales revenue)
V - மொத்த மாறும் கிரயம் (Total variable cost)
F - மொத்த நிலையான கிரயம் (Total Fixed cost)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமன்பாட்டின் இருபக்கத்திலும் V ஐக் கழிப்பின்,

$$S - V = F$$

எனவே, மொத்தப் பங்களிப்பு = நிலையான கிரயம்

## 2.2.2 இலாப நட்டமற்ற புள்ளிக் கணிப்பீட்டிற்கான சமன்பாடுகள் (CVP analysis by formula)

* இலாப நட்டமற்ற புள்ளி (அலகுகளில்) = $\dfrac{\text{நிலையான கிரயம்}}{\text{அலகொன்றிற்கான பங்களிப்பு}}$

* இலாப நட்டமற்ற புள்ளி (விற்பனைப் பெறுமதியில்) = $\dfrac{\text{நிலையான கிரயம்}}{\text{அலகொன்றிற்கான பங்களிப்பு}} \times \dfrac{\text{அலகொன்றிற்கான}}{\text{விற்பனை விலை}}$

* எதிர்பார்க்கப்படும் இலாபத்தில் விற்பனை மட்டம் (அலகுகளில்)
  = $\dfrac{\text{நிலையான கிரயம் + எதிர்பார்க்கப்பட்ட இலாபம்}}{\text{அலகொன்றிற்கான பங்களிப்பு}}$

* எதிர்பார்க்கப்படும் வரிக்கு பின்னரான இலாபத்தில் விற்பனை மட்டம் (அலகுகளில்)
  = $\dfrac{\text{நிலையான கிரயம்} + \dfrac{\text{எதிர்பார்க்கப்பட் இலாபம்}}{1 - \text{வரிவீதம்}}}{\text{அலகொன்றிற்கான பங்களிப்பு}}$

* எதிர்பார்க்கப்பட்ட இலாபத்தில் விற்பனை மட்டம் (விற்பனைப் பெறுமதியில்)
  = $\dfrac{\text{நிலையான கிரயம் + எதிர்பார்க்கப்பட்ட இலாபம்}}{\text{அலகொன்றிற்கான பங்களிப்பு}} \times \dfrac{\text{அலகொன்றிற்கான}}{\text{விற்பனை விலை}}$

**உதாரணம் :-**

M லிமிட்டட் ஒரு பொருளை உற்பத்தி செய்து விற்பனை செய்கின்றது. இதனது அலகொன்றிற்கான மாறும் கிரயம் ரூபா 30. இது அலகொன்று ரூபா 40 க்கு விற்பனை செய்யப்படுகின்றது. பாதீடு செய்யப்பட்ட நிலையான கிரயம் ரூபா 70,000.

இலாபநட்டமற்ற புள்ளி= (அலகுகளில்) $\dfrac{\text{நிலையான கிரயம்}}{\text{அலகொன்றிற்கான பங்களிப்பு}}$

$$= \frac{70,000}{40 - 30}$$

$$= \frac{70,000}{10} = 7,000 \text{ அலகுகள்}$$



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 2.2.3 பங்களிப்பு விற்பனை வீதம் (Contribution sales ratio)

ஒவ்வொரு ரூபா விற்பனைக்கும் எவ்வளவு பங்களிப்பு உழைக்கப்படுகின்றது என்பதனை வெளிக்காட்டுவது பங்களிப்பு விற்பனை வீதமாகும்.

மொத்தப் பங்களிப்பு = விற்பனை வருமானம் - மாறும் கிரயம்
Total contribution = Sales revenue – variable cost
C = S – V

பங்களிப்பு விற்பனை வீதம் = $\dfrac{\text{அலகொன்றிற்கான பங்களிப்பு}}{\text{அலகொன்றிற்கான விற்பனை விலை}} \times 100$

இங்கு M லிமிட்டட் நிறுவனத்தின் பங்களிப்பு விற்பனை வீதத்தினை கணிப்பிடின்,
பங்களிப்பு விற்பனை வீதம் = $\dfrac{10}{40} \times 100$ = 25%

### 2.2.4 பாதுகாப்பின் இறுதி எல்லை (The margin of safety)

பாதீட்டுக் காலத்தில் பாதுகாப்பின் இறுதி எல்லையானது பாதீடு செய்யப்பட்ட விற்பனை தொகையை இலாப நட்டமற்ற நிலைமைக்கு தேவைப்படுகின்ற விற்பனைத் தொகையுடன் ஒப்பிடுவதன் மூலம் அளவிடப்படுகின்றது. இது பாதீடு செய்யப்பட்ட விற்பனை அலகுகளிற்கும், இலாப நட்டமற்ற புள்ளியிலான அலகுகளுக்கும் இடையிலான வேறுபாடாகும். சில நேரங்களில் இது பாதீடு செய்யப்பட்ட விற்பனைத் தொகையின் விகிதாசாரமாகவும் வெளிப்படுத்தப்படுகின்றது. மேலும் பாதீடு செய்யப்பட்ட விற்பனை வருமானத்திற்கும், இலாப நட்டமற்ற விற்பனை வருமானத்திற்கும் இடையிலான வேறுபாடாகவும் பாதீடு செய்யப்பட்ட விற்பனை வருமானத்தின் விகிதாசாரமாகவும் வெளிப்படுத்தப்படலாம்.

இங்கு M லிமிட்டட்டின் பாதீடு செய்யப்பட்ட விற்பனை 8,000 அலகுகளாக காணப்படின் பாதுகாப்பின் இறுதி எல்லையைக் கணிப்பிடின்,

| | | |
|---|---|---|
| பாதீடு செய்யப்பட்ட விற்பனை | = 8,000 அலகுகள் | |
| இலாப நட்டமற்ற புள்ளி விற்பனை | = 7,000 அலகுகள் | |
| பாதுகாப்பின் இறுதி எல்லை | = 8,000 – 7,000 | = 1,000 அலகுகள் |

அல்லது

$\dfrac{1,000}{8,000} \times 100$ = 12.5%

பாதுகாப்பின் இறுதி எல்லையானது உண்மையான விற்பனை இலாப நட்டமற்ற புள்ளியை அல்லது இலாபம் உழைக்கின்ற நிலைமையை அடைவதற்கு பாதீடானது 1000 அலகுகளால் அல்லது 12.5% இனால் குறைய முடியும் என முகாமைக்கு சுட்டிக் காட்டுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 2.2.5 எதிர்பார்க்கை இலாபம் (Target profit)

குறிப்பிட்ட காலப்பகுதியில் எதிர்பார்க்கப்படும் இலாபத்தை உழைப்பதற்கு நிறுவனம் விரும்பின் அத்தகைய இலாபத்தை உழைப்பதற்கான விற்பனைத் தொகையையும் கணிதரீதியாக கணிப்பிட்டுக்கொள்ள முடியும். இவ் இலாபத்தை அடைவதற்கு விற்பனை வருமானமானது எல்லாக் கிரயங்களையும் தேவைப்படுகின்ற இலாபத்தையும் ஈடுசெய்யக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

எனவே, $S = V + F + P$

சமன்பாட்டின் இருபக்கத்திலும் V யைக் கழிப்பின்,
$S - V = F + P$

மொத்த பங்களிப்பு = நிலையான செலவு + இலாபம் ஆகும்.

இங்கு M லிமிட்டட்டானது வருடாந்தம் ரூபா 20,000 இலாபம் உழைக்க விரும்புகின்றது எனின் அத்தகைய இலாபத்தை உழைப்பதற்கான விற்பனைத் தொகையைக் கணிப்பிடின்,

எதிர்பார்க்கப்படும் இலாபத்தில் விற்பனை மட்டம் (அலகுகளில்)

$$= \frac{\text{நிலையான கிரயம் + எதிர்பார்க்கப்பட்ட இலாபம்}}{\text{அலகொன்றிற்கான பங்களிப்பு}}$$

$$= \frac{70,000 + 20,000}{10}$$

$$= \frac{90,000}{10}$$

= 9,000 அலகுகள்

## 2.3 வரைபட ரீதியான அணுகுமுறை (The graphical approach)

### 2.3.1 இலாப நட்டமற்ற புள்ளி வரைபடம் (Break-even chart)

இலாப நட்டமற்ற புள்ளியானது வரைபட ரீதியாகவும் தீர்மானிக்க முடியும். ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் விற்பனைத் தொகையின் பல்வேறு மட்டங்களில் இலாபத்தையும் நட்டத்தையும் சுட்டிக்காட்டுகின்ற ஒரு வரைபடமே இலாப நட்டமற்ற வரைபடம் என வரையறுக்கப்படுகின்றது. இது கிடையச்சில் தொகை / வெளியீட்டு அலகினையும் நிலைக்குத்தச்சில் விற்பனை வருமானத்தையும் கிரயப் பெறுமதியையும் காட்டக்கூடிய வகையில் தயாரிக்கப்படுகின்றது.

**உதாரணம் :**

ஒரு நிறுவனத்தின் பாதீடு செய்யப்பட்ட வருடாந்த வெளியீடு 10,00,000 அலகுகள். நிலையான மேந்தலைத் தொகை ரூபா 400,000. மாறும் கிரயம் அலகொன்றிற்கு ரூபா 1 ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலகொன்றிற்கான விற்பனை விலை ரூபா 2. இல் 10,00,000 அலகுகள் விற்பனை செய்யப்படுகின்றது.


இங்கு இலாப நட்டமற்ற வரைபடத்தின் மூலம் இலாப நட்டமற்ற புள்ளியை கணிப்பிடின், பாதீடு செய்யப்பட்ட வருடாந்த வெளியீட்டிலான இலாபக் கணிப்பீட்டுடன் ஆரம்பிக்கலாம்

| | |
|---|---|
| விற்பனை (10,00,000 x 2) | 2,000,000 |
| மாறும் கிரயம் (10,00,000 x 1) | (1,000,000) |
| பங்களிப்பு | 1,000,000 |
| நிலையான கிரயம் | (400,000) |
| இலாபம் | 600,000 |

வரைபடத்திற்கான அட்டவணை :

| வெளியீடு | விற்பனை வருமானம் | மாறும் கிரயம் | நிலையான கிரயம் | மொத்தக கிரயம் | இலாபம் / நட்டம் |
|---|---|---|---|---|---|
| 0 | 0 | 0 | 400,000 | 400,000 | (400,000) |
| 1,000,000 | 2,000,000 | 1,000,000 | 400,000 | 1,400,000 | 600,000 |

**இலாபநட்டமற்ற புள்ளி வரைபடம்**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ் வரைபடம் பின்வருமாறு வரையப்படுகின்றது.

- நிலைக்குத்தச்சு கிரயம், வருமானம் என்பவற்றை ரூபாவில் பிரதிநிதித்துவப் படுத்துகின்றது. கிடையச்சு உற்பத்தியினதும் விற்பனையினதும் செயற்பாட்டு மட்டத்தைப் பிரதிபலிக்கின்றது.

- நிலையான கிரயம் கிடையச்சிற்கு சமாந்தரமாக நேர்கோட்டினால் பிரதிநிதித்துவப் படுத்துகின்றது. இவ் உதாரணத்தில் ரூபா 400,000 நிலையான கிரயம் ஆகும்.

- மாறும் கிரயம் நிலையான கிரயத்துடன் மொத்த கிரயத்தினுள் சேர்க்கப்படுகின்றது. இங்கு எல்லா செயற்பாட்டு மட்டங்களிலும் நிலையான கிரயம் நிலையானது எனவும் அலகிற்கான மாறும் கிரயம் நிலையானது எனவும் எடுகோள் கொள்ளப்படுகின்றது.

எனவே கிரயக் கோடுகள் நேர்கோடுகளாக இருப்பதனால் கிரயக் கோடுகளிற்கு இரு புள்ளியகள் மட்டும் தேவைப்படுகிறது. குறிப்பாக மொத்தக் கிரயக் கோட்டிற்கு பாதீடு செய்யப்பட்ட வெளியீட்டு அல்லது விற்பனை மட்டத்திலான கிரயமும் பூச்சிய வெளியீட்டு மட்டத்திலான கிரயமும் புள்ளியடப்பட்டு வரையப்படுகிறது. பூச்சிய வெளியீட்டு மட்டத்தில்

மொத்தக் கிரயம் நிலையான கிரயத்திற்கு சமமாக இருக்கும். இங்கு மாறும் கிரயம் இல்லை. எனவே, தான் மொத்தக் கிரயக் கோடு ரூபா 400,000 இலிருந்து செல்கின்றது. பாதீடு செய்யப்பட்ட வெளியீடு 1,000,000 அலகுகளில் மொத்தக் கிரயம் 1,400,000 ரூபாவாகும். பூச்சிய விற்பனையில் வருமானம் இல்லை. பாதீடு செய்யப்பட்ட வெளியீட்டு விற்பனை 1,000,000 அலகுகளில் வருமானம் 2,000,000 ரூபாவாகும். எனவே, விற்பனைக் கோடும் அவ்விரு புள்ளிகளில் குறிக்கப்பட்டு இணைக்கப்படுகின்றது.

இலாப நட்டமற்ற புள்ளியானது மொத்தக் கிரயம் மொத்த வருமானத்தை சந்திக்கும் புள்ளியில் இருக்கும். வுரைபடத்தில் வருமானமும் கிரயமும் ரூபா 800,000 இல் 400,000 அலகுகள் வெளியீட்டு மட்டத்தில் காணப்படுகிறது. இவ் இலாப நட்டமற்ற புள்ளியினை சமன்பாட்டு ரீதியில் கணிப்பிடின்,

$$\frac{\text{நிலையான கிரயம்}}{\text{அலகொன்றிற்கான பங்களிப்பு}}$$

$$= \frac{400,000}{2-1} = 400,000 \text{ அலகுகள்}$$


இங்கு பாதுகாப்பின் இறுதி எல்லையானது வரைபடத்தில் பாதீடு செய்யப்பட்ட செயற்பாட்டு மட்டத்திற்கும் இலாப நட்டமற்ற புள்ளிக்குமிடையிலான வேறுபாட்டால் $1,000,000 - 400,000 = 600,000$ அலகுகளால் வெளிப்படுத்தப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2.3.2 பங்களிப்பு வரைபடம் (Contribution break even chart)

இங்கு நிலையான கிரயக் கோட்டை முதலில் வரைவதற்குப் பதிலாக மாறும் கிரயக் கோட்டை முதலில் வரைவதன் மூலம் இவ் வரைபடம் வரையப்படுகின்றது. இது "விற்பனை மாற்றங்களினால் ஏற்படுகின்ற இலாபத்திலான தாக்கத்தை வெளிப்படுத்துகின்ற ஒரு வரைபடம்" என வரையறுக்கப்படுகின்றது. மேற்காட்டப்பட்ட உதாரணத்திற்கமைய பங்களிப்பு வரைபடத்தினை வரையின்,




பங்களிப்பு வரைபடம் மூலம் உற்பத்தியின் பல்வேறு மட்டங்களிலும் பங்களிப்பை தெளிவாக அறியமுடியும். விற்பனை வருமானக் கோட்டிற்கும் மாறும் கிரயக் கோட்டிற்கும் இடையே "V" வடிவத்தில் பங்களிப்பு சுட்டிக்காட்டப்படுகின்றது. இலாப நட்டமற்ற புள்ளிக்கு மேலாக வெளியீடு காணப்படும் நிலையில் பங்களிப்பு நிலையான செலவை ஈடுசெய்வது மட்டுமன்றி அதற்கு மேலாக இலாபத்தையும் தரும் வகையில் உயர்வாக உள்ளது. இலாப நட்டமற்ற புள்ளிக்கு கீழே பங்களிப்பு நிலையான செலவை ஈடுசெய்ய முடியாத தொகையானது நட்டமாகக் காணப்படுகின்றது.


## 2.3.3 இலாப அளவு வரைபடம் (Profit volume chart)

இலாப அளவு வரைபடமானது இலாபநட்டமற்ற வரைபடத்திலிருந்து வேறுபட்டது. இது விற்பனைத் தொகை, இலாபம் என்பவற்றிற்கிடையேயான தொடர்பையும் அல்லது பாதுகாப்பின் இறுதி எல்லையையும் இலகுவாக வெளிப்படுத்துகின்றது. இதுவும் "விற்பனை மாற்றத்திலான இலாபத் தாக்கத்தை வெளிப்படுத்துகின்ற வரைபடம்" என வரையறுக்கப்படுகின்றது. இங்கு கிடையச்சு முன்னைய வரைபடத்திற்கு வரையப்பட்டது போன்றே வரையப்படும். ஆனால் நிலைக்குத்தச்சு இலாபத்தை வெளிப்படுத்தும். இது மூலப்புள்ளிக்குக் கீழே நட்டத்தை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்படுத்தும் ஒரு இலாபக் கோடானது பூச்சிய செயற்பாட்டு மட்டத்தில் நட்டத்திலிருந்து வரையப்படுகிறது. இது நிலையான கிரயத்திற்கு சமனாக இருக்கும். இங்கு கிடையச்சை வெட்டும் புள்ளியே இலாப நட்டமற்ற புள்ளியாகும். கிடையச்சிற்கு மேற்பட்ட புள்ளி யாவும் இலாபத்தை

வெளிப்படுத்தும். மேலே காட்டப்பட்டுள்ள உதாரணத்திற்கமைய இலாப அளவு வரைபடத்தினை வரையின்,




## 2.4 செலவு - தொகை இலாபப் பகுப்பாய்வின் நன்மைகள் (Advantages of CVP analysis)

நிறுவனமானது தமது முகாமைத் தொழிற்பாடுகளை சிறப்பாக மேற்கொள்வதற்கு உதவுகின்ற நுட்பமாக CVP ஆய்வானது காணப்படுகின்றது. இப் பகுப்பாய்வினை பயன்படுத்துவதனால் நிறுவனங்கள் பின்வரும் நன்மைகளைப் பெற்றுக்கொள்கின்றது.

- குறுங்கால திட்டமிடல் நோக்கங்களிற்கு உதவுகின்றது.
- விற்பனை வருமானம், செலவீனங்கள் என்பவற்றிற்கு இடையிலான தொடர்பினை ஆய்வு செய்ய உதவுகின்றது.
- பல்வேறுபட்ட செயற்பாட்டு மட்டங்களில் இலாபத்தினை எதிர்வுகூறுவதுடன், விரும்பும் இலாப மட்டத்தை தொடர்ந்து பேணவும், ஈடுபடுத்திய முதல் மீதான வருவாயினை உழைக்க உற்பத்தி, விற்பனை அளவுகள் எவ்வாறிருக்க வேண்டும் என்பதனையும் தீர்மானிக்க உதவுகின்றது.
- செயற்பாட்டு மட்டங்களில் சிறு மாற்றங்கள் பிரேரிக்கப்படுமிடத்து கிரயம், வருமானம், வெளியீட்டு மட்டம், இலாபம் என்பவற்றிற்கு இடையிலான தொடர்பை வெளிப்படுத்தும் என்பதனால் நெகிழும் பாதீடுகளை தயார் செய்ய உதவுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- விற்பனைக் கலவை, தெரிவு, விலைக் கொள்கை என்பவற்றினை மீளாய்வு செய்ய உதவுகின்றது.
- செலவுக் கட்டுப்பாடு (cost control), பாதீடுகளை தயாரித்தல், தீர்மானமெடுத்தல் போன்ற செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு உதவிபுரிகின்றது.

## 2.5 செலவு , தொகை இலாப ஆய்வின் வரையறைகள் (Limitation of CVP analysis)

குறுங்கால இலாபத் திட்டமிடலில் செலவு - தொகை இலாப ஆய்வானது ஒரு முக்கியத்துவம் மிக்க நுட்பமாக காணப்பட்டாலும் பின்வரும் வரையறைகளை கொண்டுள்ளது.

- நிலையான கிரயமானது வெவ்வேறு செயற்பாட்டு மட்டங்களில் மாறமுடியும். எனவே, ஒரு படிமுறை நிலையான கிரயமே. அவற்றைப் பிரதிபலிக்க உகந்ததாகும்.
- செலவீனங்களை நிலையான செலவுகள், மாறும் செலவுகள் எனக் கூறுகளாக வகுப்பதில் உள்ள கடினத்தன்மை.
- நிச்சயமற்ற தன்மையானது நிலையான கிரய மதிப்பீடு, மாறும் கிரய மதிப்பீட்டைப் பாதிக்கின்றது.
- உற்பத்தியும் விற்பனையும் எப்போதும் சமனாக இருக்கமாட்டாது.
- இவ் ஆய்வானது குறுங்காலத்துடன் தொடர்புடையதாக வெளிப்படுத்தப்படுகிறது. இது நீண்டகால நிதித் திட்டமிடல் நோக்கிற்கு பொருத்தமற்றது.
- இலாப நட்டமற்ற பகுப்பாய்வு தனியொரு உற்பத்திப் பொருள் அல்லது குறிப்பிட்ட ஒரு விற்பனைக் கலவைக்கே பொருத்தமானது என்பது இதன் உபயோகத்தை வரையறுக்கின்றது.
- மாறும் கிரயமும் விற்பனையும் ஏகபரிமாணத் தொடர்புடையவை எனக் கூறமுடியாது. ஏனெனில், கழிவுகள், மேலதிகநேர வேலைக் கொடுப்பனவுகள், விசேட விநியோகக் கட்டளைகள் என்பன மாறும் கிரயத்தையும் விற்பனை வருமானக் கோட்டையும் நேர்கோட்டிலும் பார்க்க வளைகோடாகவும் பிரதிபலிக்கும்.

## 3.0 முடிவுரை (Conclusion)

குறுங்காலத் தீர்மானமெடுத்தலில் செலவு - தொகை இலாபப் பகுப்பாய்வானது முக்கிய நுட்பமாக காணப்படுகின்றது. குறுங்காலத்தில் இப் பகுப்பாய்வு விற்பனைக் கலவை, தெரிவு, விலையிடல் கொள்கை, பல்மாற்று வேலை (multi-shift making), விசேட கட்டளைகளை ஏற்றுக்கொள்ளல் போன்ற பல்வேறு தீர்மானங்களை மேற்கொள்ள உதவுகின்றது. எனவே, இப் பகுப்பாய்வானது முகாமைக்கு பல்வேறு வழிகளில் தீர்மானங்கள் மேற்கொள்வதற்கு உதவிபுரிவதுடன் முகாமைத்துவ தொழிற்பாடுகளான திட்டமிடல், கட்டுப்படுத்தல் கருமங்களைச் சிறப்புற மேற்கொள்ளவும் வழிவகுக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Reference

1. Lucey, "Costing", 5th edition, DP Publication 1997

2. J.Lewis Brown and Leslie.R.Howard, "Principles and Practice of Management Accountancy", 3rd edition, Macdonald & Evans Ltd, 1975.

3. Dr.S.N.Maheswari, "Management Accounting & Financial Control", 12th edition, Sultan Chands & Sons publishers, 1996.

4. I.M.Pandey, "Financial Management", 7th Revised edition, Vikes publishing, 1997.

5. J.Batty, "Advanced Cost Accountancy", 2nd edition, Macdonald and Evans Ltd, 1978.

**Ms. Yogeswary Thillainathan**
Asst. Lecturer
Department of Commerce
University of Jaffna.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# எமது இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

எமது சஞ்சிகைக்கு ஆசியுரை வழங்கிய எமது கல்லூரி அதிபர், மற்றும் பிரதி அதிபர், உப அதிபர், கோட்டக் கல்வி அதிகாரி மற்றும் கால நேரம் பாராது மிகவும் சிரமப்பட்டு இச் சஞ்சிகை வெளியீட்டுக்கு உழைத்துதவிய பொறுப்பாசிரியர் மற்றும் இணை ஆசிரியர்களுக்கும், நல்லாக்கங்களை தந்துதவிய எமது கல்லூரி மாணவிகளுக்கும், அவர்களுக்கு ஒத்தாசையாக இருந்த அறிவுசால் பெருந்தகைகளுக்கும்,

எமது வனிதையானவள் சிறக்க விளம்பரங்களையும், நன்கொடைகளையும் தந்துதவிய வர்த்தக பிரமுகர்களுக்கும், மிக சொற்ப காலத்தில் சிறப்பாக அச்சிட்டுத் தந்துதவிய யாழ். ஸ்ரீ சாமி அச்சகத்தினருக்கும் எமது வனிதையானவளின் வெளியீட்டுக்காக தோளோடு தோள்நின்று உதவிய அன்புச் சகோதரிகளுக்கம் மற்றும் மறைமுகமாகவும், நேரடியாகவும் ஆலோசனை வழங்கிய அனைத்து நல்லுள்ளங்களுக்கும்,

**“எந் நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை**
**செய்ந் நன்றி கொன்ற மகற்கு”**

என்ற வள்ளுவ பெருந்தகையின் திருவாக்கிற்கிணங்க வனிதையவள் தடம் பதிக்க வழி சமைத்த அனைவருக்கும் யாழ். இந்து மகளிர் கல்லூரி வணிக மன்றத்தின் சார்பில் எனது பணிவான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.




செயலாளர்
**வணிக வனிதை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணிக வனிதை மேலும் வளர வாழ்த்துபவர்கள்

# ஓ.சு. பேரம்பலம் சக நிறுவனம்



T.V டெக், றேடியோ, வீடியோ, ஓடியோ
கருவிகள், கசெற் வகைகள்,
மணிக்கூடுகள், பிலிம் றோல், மிதிவண்டி,
மிதிவண்டி உதிரிப்பாகங்கள் போன்றன,
மற்றும் அழகு சாதனப் பொருட்கள்
விற்பனையாளர்.

50, 52, 54, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வணிக மன்ற கீதம்

வாழ்க மன்றம் வணிக மன்றம் வாழ்க வாழ்கவே - என்றும்
மாண்புமிகு மாணவரின் மகிமை நிலைக்கவே
மண்ணுலகில் நுட்பங்கள் மறைந்திடாமலே - எங்கள்
இந்து மகளிர் வணிக வனிதை வாழ்க வளர்கவே.

மனித நாகரிகம் வெற்றி பெற்று உயரவே
வணிகவியல் முதுகெலும்பாய் ஆச்சு உலகிலே
வணிகவியல் ஓங்க தேசம் சொர்க்கமாகுமே.
குனிவிலாத வாழ்வை அளிக்கும் வணிகக் கல்வியே - என்றும்

வணிக வனிதையர் ஒன்று இணைந்து சேரவே
வணிகவியல் நுட்பம் யாவும் கண்டு கொள்ளவே
வணிகக் கல்வியாலே ஊரும் உலகும் ஓங்கவே
வந்துதித்த வனிதை தன்னைப் போற்றிப் பாடுவோம்.

வணிக மன்றம் இன்று வீறு நடை போடுதே
வளர்ந்து தனது காலில் நின்று வலிமை கொள்ளுதே
தகவல் யுகம் தன்னில் இன்று இணைந்து கொள்ளுதே
தலைமுறைக்குத் தரவுகளை அள்ளித் தருகுதே.

வணிகக் கல்வி புதுமை புகுத்தி மாண்பு பெறவே
மகிழ்ந்து நாமும் இந்த நூற்றில் வளர்ந்து வாழவே
செழுமை கொண்டு சிறப்பு பெற்று சீரும் பெறவே
நெகிழ்ச்சி பெற்று உயர்ந்து வனிதை வளங்கள் சேர்க்கவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org